
www.tamilarangam.net



# சமர்



இதழ் 10 மார்ச்/ ஏப்ரல் அன்பளிப்பு 5 F

## யூ.என்.பி யின் இனவாதமும் தொண்டமானின் கைக்கூலித்தனமும்

தொண்டமானுக்கும் யூ.என்.பிக் கும்பலுக்கும் பல வருடங்களாகத் தொடர்ந்து வந்த காதல் இன்று கேள்விக்குள்ளாகி உள்ளது. இதைத் தொடர்ந்து தொண்டமான் எதிர்க்கட்சிகளுடன் கூடிக் குலாவத் தொடங்கி உள்ளார். தொண்டமானின் இன்றைய நிலையை சுட்டிக் காட்டி பலர் தொண்டமான் மக்களின் நண்பன் என்று கருத்துப்பட கட்டுரைகளை வரைகின்றனர்.

தொண்டமான் மலையக மக்களின் ஏகப்பிரதிநிதியாக கடந்த காலத்தில் இருந்தும் மலையக மக்களின் வாக்குகளை கொண்டு தனது பிழைப்பை சிறப்பாக நடத்தினார். மலையக மக்களின் அற்ப உரிமைகளைக் கூட காட்டிக் கொடுத்து மேலும் அடிமையாக்கினார். இலங்கை வரலாற்றில் தொண்டமானின் துரோகத்தனத்தைப் போல் வேறு எந்தத் தலைவரும் செய்ததில்லை.

மலையக மக்களின் பிரஜா உரிமையைச் சரி, இலங்கையின் அடிப் படைச் சம்பளத்தை மலையக மக்களுக்கு வழங்குவதாயினும் சரி எந்தப் பிரச்சனையிலும் அரசாங்கத்தில் இருந்தபடி காட்டிக் கொடுத்து மலையக மக்களை ஏமாற்றிப் படுகுழியில் தள்ளிய ஒரு துரோகி.

அண்மைக் காலமாக யூ.என்.பியுடன் சேர்ந்து மலையகத்தை தனியாருக்கு விற்க உலகவங்கியிலும், ஏகாதிபத்தியத்தின் கைக் கூலியாக செயற்பட்ட ஒரு தரகு முதலாளி.

சிறிய லயன்களில் சில நூறு ஆண்டுகளாக வாழ்கின்ற மலையக மக்களைச் சுரண்ட, பச்சைக்கொடி காட்டி அவர்களை ஏமாற்றி தனது வங்கிக் கணக்கை எப்போதும் நிரப்பிய ஒரு பச்சைத் துரோகி.

இன்று யூ.என்.பியுடன் கசந்து போக தொண்டமானுக்கு மக்கள் மீது பற்று ஏற்பட்டு விடவில்லை. மாறாக

*1) யூ.என.பியில் இனவாதிகளின் ஆதிக்கமும் அதனால் மலையக மக்கள் முன் தொண்டமான் அம்பலப்படப் போவதும்.*

*2) காமினி திசநாயக்காவை மீண்டும் யூ.என.பியில் இணைக்கக் கோரும் தொண்டமான், இந்தியாவை இவ் வேண்டுகோளுடன் கைக்கூலித்தனத்தை நிறைவேற்ற முனைகிறார்.*

*3) மலையக மக்கள் மத்தியில் எழுந்துவரும் புதிய எழுச்சிகள்.*

இது போன்ற காரணங்கள் தொண்டமானின் எதிர்கால அரசியல் வாழ்வை தீர்மானிப்பதாக உள்ளது.

மலையக மக்கள் இன்று விழிப்புற்று வரும் நிலையில் அனாதை வாழ்வு உருவாவதைத் தடுக்க, அதை கருத்தில் கொண்டு மக்களை மீண்டும் ஏமாற்ற ஒரு குத்துக்கரணத்தை அடித்துள்ளார் அவ்வளவே.

தொண்டமான் எந்த புதிய கூட்டை செய்தாலும் அது மக்கள் விரோத அடிப்படையில் அமைந்ததே. சுதந்திரக் கட்சி சரி, காமினியின் கட்சி சரி இனவாதத்துடன் கூடியதே. இவர்களுடன் இணையும் தொண்டமான் இன வாதத்தின் மீதே தனது பிழைப்பை நடத்துவார். கடந்த பல வருடங்களில் இனவாதம் தலைவிரித்தாடிய போது தொண்டமான் அதன் கைக்கூலியாக இருந்து மக்களை ஏமாற்றி பிழைப்பை நடத்தியவர்.

தொண்டமான் UNP, SLFP,என எந்தக் கட்சியுடன் இணைந்தாலும் அங்கு எதுவும் நடந்து விடாது. மாறாக மீண்டும் மலையக மக்கள் ஏமாற்றப்படுவர். இனவாதமே அங்கு மேலோங்கி இருக்கும்.

## கருணாநிதிக்கும் கோபால சாமிக்கும் இடையில்...

அண்மைக் காலமாக கருணாநிதிக்கும் கோபால சாமிக்கும் இடையிலான அதிரடிப் போட்டி முன்னிலைக்கு வந்துள்ளது. இதைத் தொடர்ந்து கோபால சாமியை தமிழ் பற்று உள்ளவராக காட்டமுனையும் செய்திகள் பலதரப்பிலும் பரப்பப்படுகின்றது.

தி.மு.கவின் கடந்த கால வரலாறு சாக்கடை நிறைந்த ஊழல் பெருச்சாளிகளால் நிறைந்தே இருந்தது. இதில் இருந்து பிரிந்த எம்.ஜி.ஆர் முதல் அனைவரும் மீண்டும் சாக்கடை அரசியலையே நடத்தியவர்கள்.

தமிழ் நாட்டு மக்களை மேலும் மேலும் கொள்ளை அடித்த இவர்கள் பெரிய பணக் காரர்களாக மாறி உள்ளனர். தமிழ் நாட்டு கட்சிகளில் உள்ள முக்கியமான அனைவரும் பெரிய கோடீஸ்வரராக உள்ளனர். எப்படி இப்பணம் கிடைக்கப் பெற்றது? எல்லாம் மக்கள் பணமே.

தமிழ் நாட்டு மக்கள் மாற்று உடுப்புகள் இன்றி வெட்டை வெளியிலும், கொத்தடிமைகள் ஆகவும தமது வாழ்வை போராட்டத்துடன். மக்களின் மாற்று உடுப்புகளை கொள்ளை அடிக்கும் எம்.ஜி.ஆர், கருணாநிதி,.... என அனைவரும் மக்கள் விரோதிகளே.

இந்நிலையில் தி.மு.கவின் கட்சிச் சொத்துக்களை பரம்பரைச் சொத்தாக்க 70களில் எம்.ஜி. ஆருக்கு எதிராகவும், இன்று வை.கோவுக்கு எதிராகவும் கருணாநிதி முனைகிறார். தனது மகன் ஸ்டாலினை முன்நிலைக்கு கொண்டுவர படாத பாடுபடும் இந்த ஊழல் பெருச்சாளிகளால் எப்படி மக்கள் நலன் பேணுவர்?

முதலாளித்துவ கட்சிகளின் பேராசையால் ஜனநாயகம் சந்தியில் கிழிககப்பட்டு எறியப்படுகின்றது. இந்த மாதிரியான சொத்து அரசியலே இன்று அரசிலும் உள்ளது. மக்கள் வாழ்வு பற்றியும், அவர்களின் ஜனநாயக வாழ்வு பற்றியும் அக்கறை அற்ற இந்தத் தலைமைகள் அடித்து நொருக்கப்பட வேண்டும்.

வை.கோ இதில் இருந்து எந்த வேறுபாடும் அற்றவர். இவர் கடந்த காலத்தில் தி.மு.கவில் இருந்த போது தி.மு.கவின் போராட்ட உணர்வுகளை அடக்க முன்கரம் கொடுத்தவர்.

வை.கோவின் சொத்துக்கள் எப்படி வந்தன. வை.கோவின் கீழ் வேலை செய்யும் உழைக்கும் மக்கள் அடுத்த வேளை கஞ்சிக்கு வழியின்றி அவதிப்படுகின்றனர். வை.கோ உழைக்காமல் இருக்க கூலிகள் உழைத்துக் கொடுக்க வை.கோ உல்லாச வாழ்வு வாழ, கூலிகள் மாற்று உடுப்பின்றி ஒரு வேளை கஞ்சிக்கு அலையாய் அலைகின்றனர்.

வை.கோ ஈழப் போராட்டத்தில் தமிழீழக் கோரிக்கையை அங்கீகரிப்பாரா? நிச்சயமாக இல்லை. எம்.ஜி.ஆர், கருணாநிதிபோல் தமது அரசியல் ஆதாயத்தை கருத்தில் கொண்டு அன்று ஆதரித்து பின் எதிர்த்தது போல் தான் வை.கோவும். பிழைப்புவாத ஊழல் பெருச்சாளிகளான இவர்களுக்கு தமது கொள்ளைக்கும், தமது அரசியல் மீட்சிக்கும் தமிழ் ஈழம் என்பது ஒரு சொற்தொடரே. இந்திய இராணுவம் இலங்கையில் நின்ற போது வை.கோ [illegible] கின்றார். மாத்தையா இன்று எங்கே என்று ஒரு கேள்வி இருக்க வை.கோவிற்கு புலியுடன் காதல் வரமுன் TELO வின் தோழர்களாக செயற்பட்டவர். எம்.ஜி.ஆர் புலிக்கு உதவ வை.கோவும், கருணாநிதியும் TELO வின் தூண்களாக செயற்பட்டனர்.

ஈழப் போராட்டத்தின் அதிரடிப் போட்டியில் பிரபா வென்று விடவே தமிழ்நாட்டு அரசியலில் வை.கோவும், கருணாநிதியும் ஒரு குத்துக்கரணம் அடித்தனர் அவ்வளவே.

இக்குத்துக் கரணங்கள் தமிழ் நாட்டில் மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்த கையாண்டவையே. இந்தியாவில் தமிழ்நாட்டு மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராட முடியாத இவர்கள் எப்படி தமிழ் ஈழப் போராட்டத்தை ஆதரிப்பர். தி.மு.கவில் பெரியாரால் முன்னெடுக்கப்பட்ட எந்த ஒரு விடையத்தையும் கையில் எடுக்கத்தயார் அற்ற பிழைப்புவாத வை.கோ எப்படி தமிழ் ஈழத்தை ஆதரிப்பர். [illegible] முன்னெடுக்கும் பட்சத்தில் மட்டுமே அவர் ஈழப்போராட்டம் தொடர்பான நேர்மையானஅக்கறை உள்ளதாய் நாம் பார்க்க முடியும். இல்லாதபோது மக்களை ஏமாற்றி அதிகாரத்தை கைப்பற்றி மக்கள் பணத்தைக் கொள்ளையடிக்க ஈழப்போராட்டம் தேவைப்படுகிறது அவ்வளவே.

### சிறையிலிருந்து எழுதும் கடிதம்

அம்மா,
நண்பர்கள் என்னைத்தேடி வந்து
கதவிலே தட்டும்போதெல்லாம்
தாயே, நீவெம்பிக் கண்ணீர் மல்குவதை
எண்ணிநான் வேதனைப் படுகிறேன்.

ஆறுதல் வாழ்க்கையின் சிறப்பு என்
சிறையிலே பிறக்கிறதென்று
நான் நம்புகிறேன் அம்மா
என்னை இறுதியில் சந்திக்க வருவது
ஒரு குருட்டு வௌவாலாய்
இருக்காதென்றும் நான் நம்புகிறேன்
அது பகலாய்த்தான் இருக்கும்
அது பகலாய்த்தான் இருக்கும்

—சமீஹ் அல் காசிம்

நன்றி: பலஸ்தீனக் கவிதைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அமெரிக்காவில் 40% மாணோருக்கு கூட்டல், கழித்தல் தெரியாது.**

வயது வந்த ஆண், பெண் இரு பாலரில் 9 கோடி பேர் சுமார் 50 சதவீதத்தினர் தாய் மொழியை ஆங்கிலத்தில் தெளிவாக உச்சரிப்புப் பிழை இன்றி தொடர்ச்சியாக படிக்க இயலாது. இவர்களில் 40 சதவீதத்தினருக்கு கூட்டல், கழித்தல் கணக்குகளைப் போட முடியாது. ஆரம்ப நிலை தொழில் நுட்ப அறிவு கூட இவர்களில் பெரும்பான்மை யோர்க்கு கிடையாது. ஆனால் இவர்களின் கல்வித் தகுதியோ பள்ளி இறுதியாண்டு முதல் பட்டப்படிப்புவரை. இந்த 9 கோடிப் பேரில் 40 சதவீதமானோர் வம்சாவழியாக வெள்ளை இனத்தைச் சேர்ந்தவர்கள். பிறர் அமெரிக்காவிலே பிறந்து வளர்ப வர்கள். இவையாவும் தனது நாட்டு மக்களின் கல்வி மற்றும் அறிவுத்தரம் பற்றி அமெரிக்க அரசின் ஆய்வு முடிவுகள். அமெரிக்காவின் வெளிப்பகட்டில் மயங்கிப் போயுள்ளவர்களுக்கு நிச்சயமாக அதிர்ச்சி அளிக்கக் கூடிய ஒன்றிது.

❋

**இந்தியா மீது அமெரிக்கா, ஐரோப்பா மிரட்டல்**

சமீபத்தில் நடந்த வர்த்தக மற்றும் வரி விதிப்பு பொது ஒப்பந்த ஸ்தாபனத்தின் (GATT) பேச்சுவார்த்தையின் போழுது அமெரிக்காவும் ஐரோப்பாவும் பெண்கள் அணியும் உள்ளாடைகளையும் "ஸ்காட்ச்" என்ற மதுபானத்தையும் இறக்குமதி செய்து கொள்ள இந்தியாவை நிர்ப்பந்தித்துள்ளன. இந்தியா ஸ்காட்ச் மதுபானத்தை இறக்குமதி செய்து கொள்ளா விடில் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை நாங்கள் மறுத்து விடுவோம் என ஐரோப்பிய நாடுகள் மிரட்டி உள்ளன. ஒப்பந்தப்படி இந்த நாடுகள் இந்தியாவிற்கு இரசாயன மற்றும் மருந்துப் பொருட்களைத் தான் ஏற்றுமதி செய்ய வேண்டும். அதை விடுத்து இப்படி மிரட்டுவது தனது தன்மானத்திற்கு விடப்பட்ட சவால், நமது அன்னிய செலவாணியைச் சூறையாடும் மிகப் பெரிய ஊழல் என சில பத்திரிகையாளர்கள் ஏகதிபத்தியங்களின் இந்த ஆதிக்க–சுரண்டல் நடவடிக்கையை அம்பலப்படுத்தி உள்ளனர். ✪

## புதிய நாற்று

தேயிலே செடிகள் மீது
தென்றல் இல்லே;
புயல்.

இலேகளும், பூக்களும்
இறந்து விழுந்தன.
இன்னும் என்ன?
செடிகள் மாத்திரம்
விறைத்து நிற்க்கும்.

பன்றிகள் வந்து
வேர்கள் பறிக்கும்.
ருன்றுகள் நோக்கி
புருக்கள்-பறக்கும்.

காகங்கள் சிலது
சிறகுகள் விரித்து
சற்றே கரையும்.
காலங் காலமாய்
தங்கள் மீது
எச்சங்கள் விட்டதை
தேயிலே செடிகள்
திரும்பிப்பார்க்கும்.

பாடல் ஒன்று
மனதில் புரளும்.
"தொண்டமான் கோழி கூவி."
இனி
யாரின் வரவு
எங்களே துளிர்விக்கும்?
எம்.
பூக்களே ஆக்கும்?
கேள்விக்கு பதிலாய்
நாங்கள்! நாங்கள்!,
என்றே பதில் வரும்.
தேயிலேச் செடிகள்
திரும்பிப் பார்க்கும்.
யாருமல்ல;
குனிந்து பார்க்கும்
ஆங்கே
புதிய நாற்றுகள்
புடைத்துக் கிளம்பும்!

வண்ணச் சிறகு

✡✡✡

## இஸ்ரேலிய உளவாளி

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் முக்கிய பதவியில் இருந்த அபுல்ஹனி இஸ்ரேலிய உளவாளியாக செயற்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவர் அரபாத்தின் நிழல் அமைச்சரவை உறுப்பினர்களில் பதில் உள்நாட்டு அமைச்சராக இருந்துள்ளார். இவரிடமே தற்போது உருவாகும் அரபாத்தின் கைக்கூலித்தனமான பொலிஸ் படையை அமைக்கும் பணியும் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

இவ் உளவாளி கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே பாலஸ்தீன முன்னாள் பாதுகாப்புப் பொறுப்பாளர் அரிவ்யெய்சோ பிரான்சில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். இந்த வகையில் தனது சுயநலத்தை கொண்டு பல ஆயிரம் பாலஸ்தீன மக்களின் படுகொலைக்கும், போராளிகளின் கொலைக்கும் துணை போயுள்ளார்.

இது போன்று எம்மண்ணின் இயக்கங்களுக்குள் ஊடுருவிய மாற்று இயக்க உளவாளிகள் நிறையவே இருந்தனர். இயக்கங்களை அழிக்கின்ற காலத்தில் இதை நிறையவே காண முடிந்தது.

போராட்டத்தில் இது போன்ற துரோகிகள் போலிகள் நிறையவே வருவர். இவைகளை இனம் காண எப்போதும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் எமக்கு சுட்டிக் காட்டும் வரலாற்றுப் படிப்பினைகளை நாம் கற்றுக்கொள்வோம் போராடுவோம். ☆

**ஓசை 14இல் சிவசேகரம்:** .... சில செஞ் சட்டைப்....

**புரட்சிக்காரன்:** செஞ்சட்டையை கழற்றி நிர்வாணமானதற்கு நன்றி
**ஏகாதிபத்தியம்:** கம்யூனிஸம் (செஞ்சட்டை) தோற்றுவிட்டது.

**சஞ்சிவி 23இல் தங்கரூபன்:** தமது பெயர்களை விற்க தமது கட்சிக்கு புதிய ஜனநாயகக் கட்சி (இடது)

**சஞ்சிவி 24இல் சிவசேகரம்:** புதிய ஜனநாயகக் கட்சி (இடது) என எழுதியுள்ளார். அங்கு இன்னொரு பிளவு ஏற்பட்டு விட்டதா?
**புரட்சிக்காரன்:** புதிய ஜனநாயகக் கட்சியின் வெளிநாட்டுப் பொறுப்பாளர் சிவசேகரம் கட்சியில் உள்ளாரா இல்லையா?

**விமர்சகர்:** மக்களை ஏமாற்றிப் பிழைக்க புதிய ஜனநாயகக் கட்சி

## விடுதலைப் புலிகளின் பூநகரி இராணுவமுகாம் நாகதேவன் கடற்படைமுகாம் தாக்குதலின் வெற்றி தோல்வி பற்றி

விடுதலைப்புலிகட்கும் பிரேமதாசா அரசிற்கும் 89.90 களில் ஏற்பட்ட தேன்நிலவு முறிவடைந்து 90 யூன் இல் மீண்டும் ஒரு மோதல் நிலை ஏற்பட்டது. இராணுவம் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்திற்குள், பெரிய அளவில் முகாம்களை ஏற்படுத்தி புலிகளை அழிக்கவும் மொத்தத்தில் தமிழ் தேசிய இனத்தின் மேல் கொடுரமான அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டது. கிழக்கில் மிக இலகுவாக புலிகளை பின்வாங்கச் செய்த இராணுவத்தினருக்கு வடக்கில் புலிகளின் கரம் பலம் பெற்றிருந்தது பெரும் சவாலாக இருந்தது.

இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் போர் ஆரம்பிக்கப்பட்டபின் குறிப்பிடும் படியாக கிழக்கில் புலிகளால் கைப்பற்றப்பட்ட பொலிஸ் பணயக் கைதிகள், புலிகளின் கோட்டை இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சி, கொக்காவில் மினி முகாம், மாங்குளம் இராணுவ முகாம், ஆனையிறவு மோதல், வெற்றிலைக் கேணி மோதல், பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன (புலிகளின் முன்னாள் தோழர்) கொலை, JOC தாக்குதல், கிளான்சி பெனான்டோ கொலை, ஜனாதிபதி பிரேமதாச கொலை, கட்டைக் காடு ஆயுதக்கிடங்கு தாக்குதல், மணகிண்ற மலை (ஜனகபுர) இராணுவ முகாம் அழிப்பு, கடற் புலிகளின் தாக்குதல் என பல தாக்குதல்களை நடத்தினர். அத்துடன் இராணுவத்தினரின் ஆனையிறவில் இருந்து கிளாலி வந்த யாழ்தேவி நடவடிக்கையை தோல்வியுறச் செய்தனர். மேலும் பல. ஆனால் இங்கு நோக்கப்பட வேண்டியது உண்மையான வெற்றி தோல்விகள். வெற்றி யாருக்கு? ஏன்? என்பன.

*அரசும் புலிகளும் இன வாதத்தின் உச்ச நிலையில் இருந்தே மோதிக்கொள்கின்றன. புலிகளின் தலமைக்குள் குத்து வெட்டும், குழிபறிப்பும், பதவிக்காக கொலையும், இது பற்றிய செய்திகள் அண்மையில் பிசுபிசுக்க ஆரம்பித்துள்ளது. புலிகளின் மௌனம் சந்தேகத்தையே அளிக்கிறது.

பிரேமதாஸாவின் அரசில் கைப் பொம்மையாக செயற்பட்ட பிரதமர் டிங்கிரி பண்டா விஜயதுங்க ஜனாதிபதியாக பதவி ஏற்றவுடன் பௌத்த இனவாதிகளுடன். மேலும் ஐக்கியப் பட்டுள்ளார்.

"பிரேமதாசாவோ ஒரு புறத்தே பலத்த இனவாதியாகவும் மறு புறத்தே தமிழர்களின் நண்பர் போலவும் வேடமிட்டார்."

குடாநாட்டின் முற்றுகையை இறுக்க 1991 ஒக்டோபர் மாதம் இராணுவத்தால் மேற் கொள்ளப்பட்ட "வலம்புரி" இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவத்தால் பூநகரி கைப்பற்றப்பட்டு 2000 மேற்பட்ட படையினர் குவிக்கப்பட்டனர். ரேடர் நிலையத்துடன் கூடிய கடற்படை முகாமும் உருவாக்கப்பட்டது. ஆனையிறவுப் பாதை தடை செய்யப்பட்டபின் தமிழீழத்தின் தென் பகுதியில் இருந்து யாழ் குடாநாட்டிற்கு பிரவேசிக்க புலிகட்கும், பொதுமக்களுக்கும் [illegible]

குடாநாட்டில் உள்ள பொது மக்களை பட்டினிச்சாவிற்கு உள்ளாக்கவும், புலிகளை தனிமைப் படுத்தவுமே பூநகரி இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டது.

இராணுவ உயர் பீடம் குடா நாட்டின் மேல் பெரும் தாக்குதல் ஒன்றை திட்டமிட்டிருந்த வேளையில் தான் வடபகுதிப் பிரதான இராணுவத் தளபதி டெனில் கொப்பெக்கடுவ உட்பட வடபகுதியில் இராணுவ கூலிகட்கு பொறுப்பு வகித்த பல உயர் அதிகாரிகள் அராலித்துறை குண்டு வெடிப்பில் கொலை செய்யப்பட்டதுடன் குடாநாட்டின் மீதான எந்த இராணுவ நடவடிக்கையும் வெற்றி அழிக்க வில்லை. அண்மையில் இராணுவம் சந்தித்து வரும் இழப்புகள் இதற்கு எடுத்துக் காட்டாக உள்ளது.

புதிய ஜனாதிபதியும், பிரதமரும் வடக்கில் உள்ள பிரச்சனை பயங்கரவாதமே என்று புதிய முறையில் வாந்தி எடுத்துள்ளனர். இனவாதிகள் திடுக்கிடும் படியாக 11.11.93 அதிகாலை 2மணிக்கு ஆயிரக்கணக்கான புலிகள் பூநகரி இராணுவ முகாமையும், நாகதேவன் துறை கடற்படை முகாமையும் தாக்கினர்.

12ம் திகதி புலிகள் தாம் ஏற்கனவே திட்டமிட்டபடி பொதுமக்களின் பாவனைக்கு பூநகரிப் பாதை திறக்கப்படும் என்று அறிவித்தனர். 13ம் திகதி நண்பகல் 2 மணிக்கு பின்தான் KOMARக்கு வடக்கே 2 மைலுக்கு அப்பால் இராணுவம் கெலி மூலம் இறக்கப்பட்டது. இதன் பின்னர் தொலைத் தொடர்பு சாதனங்கள் பெறப்பட்டு 14.11.93 இல் தான் மீண்டும் இராணுவம் மீட்பு வேலையில் ஈடுபட்டது. இங்கு கொல்லப் பட்டு, காணாமல் போனவர்கள் 1000க்கு மேல். காயப்பட்டவர்கள் 500க்கு மேலாகும்.

பௌத்தப் பேரினவாதம் செய்வதறியாது திகைத்தது. அங்கு என்ன நடந்தது என்றே அவர்களால் அறிய முடியவில்லை. மீண்டும் ஒருமுறை மக்கள் மத்தியில் அம்பலப்பட்ட இனவாதிகள் மூடிமறைப்பதாலும், படைகளை ஏவி பத்திரிகையாளர்களை மிரட்டியும் அப்பாவித் தமிழர்களை கொலை செய்தும் தமது நிலையை சரிசெய்வதாகக் காட்டிக் கொண்டனர். சண்டையில் புலிகளின் பகுதியில் 450 இறந்து மாவீரர். ஆனார்கள். காயப்பட்டவர் விபரம் தெரிவிக்கப் படவில்லை. 35 கோடிக்கு மேல் ஆயுதம் கைப்பற்றியதாக புலிகள் பெருமிதம் கொண்டுள்ளனர்.

தாக்குதலைத் திட்டமிட்டவர் தேசியத் தலைவர் பிரபாகான் என்று வழக்கமான துதிபாடல் நடந்தது. ஆனால் அங்கு கவனிக்கப்பட வேண்டியது தாக்குதலுக்குள்ளான முகாம் குடாநாட்டின் பிரதான பாதைகளில் ஒன்றாக இருந்தும் ஏன் புலிகள் அங்கிருந்து பின் வாங்கினர் என்பதுவே.

புலிகளின் அரசியல், இராணுவச் செயற்பாடுகள் மேல் இருந்து திணிக்கப்படுபவை. கடந்த காலத்தில் புலிகள் ஆனையிறவு முகாம் மீது மேற் கொண்ட தாக்குதல் 1000 புலிகளைப் பலி

1500க்கு மேற்பட்டோர் காயமடைந்து சண்டையில் படுதோல்வியே தழுவினர். குறிப்பிட வேண்டிய விபரம் என்ன வென்றால் முகாமிற்குள் இருக்கும் இராணுவத்தினரை விட பலமடங்கு தொகையான புலிகள் தாக்குதலில் பங்கு பற்றுகின்றனர்.

இந்தத் தாக்குதல்களில் காயமடைந்தவர்கள் புலிகட்கு பெரும் சுமையாகவே மாறினர். அவர்கள் காயமடைவதை விட தாக்குதலில் இறந்து போவதையே விரும்புகின்றனர். இதுபோல் தான் பூநகரியில், ஆனையிறவு முகாமின் நிலை ஏற்படாதிருக்க அவசரமாகப் பின்வாங்கிக் கொண்டனர். ஏன் எனின் முன்கூட்டியே திட்டமிட்ட ஒழுங்கமைப்பைப் பேணவும், தலைமையின் உத்தரவை நிறைவு செய்யவுமே. பூநகரித் தாக்குதல் இராணுவத்தை ஒழித்துக் கட்டி இருக்க முடியும். புலிகளின் தலைமையில் ஜனநாயக மறுப்பும், மக்கள் விரோதப் போக்கும் பூநகரியை கைப்பற்றுவதற்குப் பதில் பின்வாங்கி தோல்வியைத் தழுவிக் கொண்டனர். இதில் எந்த வகையிலும் புலிகள் வெற்றி அடையவில்லை. எது எப்படி இருந்தாலும் புலிகளின் தலைமை மகிழ்ந்திருக்க கோடிக்கணக்கான நவீன ஆயுதங்களை கைப்பற்றி விட்டனர். பல ஆயிரம் தமிழ் போராளிகளின் (மாணவர், சிறுவர், இளைஞர்களின்) இராணுவச் சீருடையுடனான நினைவுச் சின்னங்களால் யாழ் குடாவை என்ன யுத்தக் காட்சிச் சாலையாக மாற்றப் போகிறார்களோ?

புலிகளின் யுத்த தந்திரம் அவர்களின் அரசியலுடன் பின்னிப் பிணைந்தது. புலிகளின் தாக்குதல் எப்போதும் தலைமையில் இருந்தே உத்தரவிடப்படுகிறது. ஒரு தாக்குதலுக்கான சுயமாக தாக்குதல் தன்மையை புலிகளின் தலைமை வழங்குவதில்லை.

புலிகளின் மக்கள் விரோதப் போக்கு மக்களை, போராட்டத்தில் ஈடுபடாது பார்வையாளர்களக மாற்றியுள்ளது. புலிகள் துப்பாக்கி முனையில் மக்களை மௌனிக்கவைத்து தமது செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளனர். புலிகள் மக்களின் ஜனநாயக உரிமையை அங்கீகரிக்காமலும் சிறுவர்களை வெறியூட்டியும் மக்களை இக்கட்டான நிலைக்கு உட்படுத்தி இது போன்று ஆயிரம் முகாம்களை தாக்கி அழிக்கலாம்.

ஆனால் நாம் யுத்தத்தில் வெல்ல வேண்டியுள்ளது. புலிகட்கும், மக்களுக்கும் ஜனநாயகத்தை வழங்குவதன் மூலம் மட்டுமே தமிழ் ஈழத்தை வெல்ல முடியும். இதை மறுத்து தொடர்ந்து வழமை போல் என்றால் புலிகள் ஒரு வெறிபிடித்த சுறுசுறுப்பான ஒரு இராணுவமாகவே இருக்க முடியும். ☐

**சுவடுகள் 51இல் ஜெயபாலன்:** — கொடுங்கோலான் ஸ்டாலினுடைய ........
**ஏகாதிபத்தியம்:** சபாஸ்ஜெயபாலன்
**புரட்சிக்காரன்:** ஸ்டாலினின் சரி பிழைகளை ஆராய குறைந்த பட்சம்

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பிற்போக்குத் தேசியத்திற்கு அங்கீகாரம் வேண்டுமாம் அதுவும் மார்க்ஸியத்தின் பெயரால்

உயிர்ப்பு இதழ் மூன்று தனது அரசியல் வழியை தெளிவாக இனம் காட்டி வெளிவந்துள்ளது. அந்த வகையில் ஆசிரியர் தலையங்கம் உட்பட மற்றைய மூன்று கட்டுரையும் மார்க்சியத்தை குழிதோண்டி புதைத்துவிடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. ஆசிரியர் தலையங்கத்துக்கு சமர் 9 இல் பதிலளித்தோம். "பெண்ணும் புரட்சியும்" என்ற கட்டுரை வேறுபலரின் கட்டுரைகளை விமர்சிப்பதால், அக்கட்டுரைகள் இன்மையால் விமர்சிக்க முடியாதுள்ளது. இக்கட்டுரை மார்க்சியத்தை குழிதோண்டி புதைப்பதாகவே உள்ளது. அதை ஒரு (உ+ம்) ஊடாகப் பார்க்கலாம். "சோசலிசத்தை உருவாக்குவதற்கான போராட்டம் என்பது வேறு வேறான நலன்கள் கொண்ட குழுக்கள் ஒரு அணிச்சேர்க்கையை உருவாக்கும் அடிப்படையில் ......" இருக்கவேண்டும் என்கின்றார். மார்க்சியம், பெண்கள் இரு வெவ்வேறு நலன்களை பிரதி பலிப்பதாக கோருவதன் ஊடாக நலன்கள் (வர்க்க) வேறுபட்டதையும் அதன் இருப்பையும் கோருகிறார். இதன் ஊடாக முதலாளித்துவ இருப்பை காப்பாற்றுகின்றார். எல்லாவகை முரண்பாடுகளும் அதன் உள்ளடக்கமும் வர்க்கப் போராட்டத்துடன் ஒன்று கலந்தவையே.

நாம் ஆய்வுக் கட்டுரைகளையோ, புதிய கட்டுரைகளையோ இவர்களுக்கு பதிலாக வைப்பதை விட இக்கட்டுரைகளின் ஒவ்வொரு வரியின் மீதும் விமர்சிப்பதையே கைக்கொள்கின்றோம். பொதுவான ஒரு கட்டுரையின் போக்கில் வாசகர்களை தெளிவாக பார்க்க முடியாது என்பதாலும், ஒவ்வொரு வரி மீதுமான விமர்சனம் வாசகர்களை தெளிவாக ஆராய முடியும் என்பதாலும் இதையே கைக்கொள்கின்றோம்.
மார்க்சியத்துக்கு எதிராக மார்க்சியத்தை உச்சரித்தபடி பின்பக்க கதவுகள் மூலம் புகுத்துவிட முனையும் மார்க்சிய விரோதிகளை இட்டு நாம் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவை மார்க்சியம் உருவான நாள் முதல் இன்றுவரை ஒரு தொடராக நடந்து வருகின்றது. சோவியத், சீனா என பாட்டாளிவர்க்க ஆட்சி இருந்த போதே திரிபுவாதம் ஆட்சிபீடம் ஏறி மார்க்சியத்தின் பேரால் மார்க்சியத்தை குழிதோண்டிப் புதைத்தனர். இது இன்று எமது போராட்டத்திலும் விதிவிலக்கின்றி தொடர்கின்றது.

யார் மார்க்சியவாதி என நாம் பார்ப்போமாயின் மார்க்சிய, லெனினிய மாவோ சிந்தனையை யார் ஏற்றுக்கொள்கின்றார்களோ அவர்களே மார்க்சிய வாதிகள். லெனின் மார்க்சியம் எது? திரிபுவாதம் எது? என்பதை வரையறுக்க கூறிய கூற்றைப் பார்ப்போம். " வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிப்பதை , பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான அங்கீகரிப்பாகவும் யார் விரித்துச் செல்கிறார்களோ, அவர்கள் மட்டுமே மார்க்சியவாதிகள் "

.................. " இரு முக்கிய முடிவுகள் "
இன்று மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனையை யார் ஏற்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலை நாட்டவும், பாட்டாளி வர்க்க புரட்சியை தொடர்ந்து முனைபவர்களே மார்க்சியவாதிகள் ஆவர். இதை ஏற்க மறுத்து மார்க்சியத்தை உச்சரித்தபடி எதைச் சொன்னாலும் அது திரிபாகவும், முதலாளித்துவ கோட்பாடுமாகவுமே இருக்கும்.

மார்க்சியம் என்பது அது கொண்டுள்ள தத்துவத்தை வரைந்தவர்களான மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ என தொடரும் மார்க்சிஸ்டுகளால் வரையப்பட்ட தத்துவமாகும். இவர்களின் தத்துவத்தை நிராகரித்த எந்த தத்துவமும் மார்க்சியமல்ல. மாறாக அது புதிய ஒரு தத்துவம். அது முதலாளித்துவ தத்துவமே. இவர்கள் ஐவரும் தமது காலத்தில் இருந்த நிலைமைகளை கவனத்தில் எடுத்து மார்க்சியத்தை வளர்த்து எடுத்தனர். மார்க்சியத்தின் அடிப்படையில் நின்று அதை உயர்த்திப் புரட்சியை நடத்தினர். இவர்களுடைய புரட்சிக் கட்டத்தை பின்வருமாறு வரையறுக்க முடியும்.

- - மார்க்ஸ் காலத்தில் மார்க்சியத்துக்கும் அதனெதிரிகளுக்குமான போராட்டமானது தத்துவார்த்த துறையில், மார்க்சியத்தை ஒரு விஞ்ஞானமாக நிலைநாட்டுவதற்கும் அதற்கு எதிரான வற்றுக்காகவுமாக இருந்தது.

- - லெனின் காலத்தில் போராட்டமானது பாட்டாளி வர்க்க புரட்சியில் சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான கோட்பாடு, யுத்த தந்திரம் ஆகிய துறையில் இருந்தது.

- - மாவோ காலத்தில் போராட்டமானது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்திச் செல்வதற்கான கோட்பாடு, யுத்ததந்திரம், போர்த்தந்திரம் ஆகியதுறையில் நடைபெற்றது , பின்னரும் நடைபெறுகிறது.

மார்க்சியம் எது, திரிபுவாதம் எது என்பது மார்க்சிய, லெனினிய மாவோ சிந்தனையை யார் கடைப்பிடிக்கிறார்களோ அவர்களால் மட்டுமே வேறுபடுத்த முடியும். சோவியத், சீனா மற்றும் திரிபாகிப்போன அனைத்து வகையறுக்களும் மார்க்சிய, லெனினிய, மாவோ சிந்தனையை நிராகரித்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, வர்க்கப் போராட்டத்தை நிராகரித்து முதலாளித்துவத்தை மீட்டவர்கள். இன்று மனிதத்தில் சில கட்டுரைகளும், உயிர்ப்பு 3 இல் முழுக் கட்டுரையும் மார்க்சிய, லெனினிய, மாவோ சிந்தனையை நிராகரித்து, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிராகரித்து, வர்க்கப் புரட்சியை நிராகரித்தபடி, மார்க்சியத்தை உச்சரித்தபடி திரிபாக உள்ளது. இவர்கள் மார்க்சியம் என உச்சரிக்கின்ற மார்க்சியம் மார்க்ஸ், லெனின், மாவோவின் உடையதல்ல. மாறாக மார்க்சியத்துக்கு எதிராக உள்ள தத்துவம். இத்தத்துவம் கடந்த காலத்தில் முற்றாக முறியடிக்கப்பட்டு சவக்குழிகளில் இருந்தவை. இவைகளை காலத்துக்கு காலம் தோண்டி எடுத்து மார்க்சியத்தை குழிதோண்டி புதைத்துவிட முயல்கின்றனர். ஆனால் தொடர்ந்தும் மார்க்சியம் ஒரு சமூக விஞ்ஞானமாக இருப்பதால் வெற்றி பெற்று வருகின்றது. இனி நாம் கட்டுரைகளை ஆராய்வோம்.

(1) இலங்கையில் தேசங்களின் உருவாக்கம் என்ற கட்டுரையில் உள்ள முக்கிய தத்துவ முரண்பாட்டின் மீது நாம் விமர்சிக்க முயல்கின்றோம்.

"பொருளாதாரம் என்ற ஒரே காரணி மூலம் வர்க்கம் என்ற ஒரே கருத்தாக்கத்தின் மூலம், சமூகத்தில் உள்ள அனைத்துப் பிரச்சனையையும் விளக்கிவிட முனையும் பொருளாதார வாதமானது, தேசிய வாதத்தின் தனித்துவமான பண்புகளை அங்கீகரிப்பதில்லை. அல்லது பெயரளவில் மாத்திரம் அங்கீகரிக்கின்றது. இதனால் வர்க்கப் போராட்டத்தை மதிப்பிடும் அதே அளவுகோலைக் கொண்டு தேசியவாதத்தையும் மதிப்பிட முனைகிறது. இதுவே தேசிய வாதம் தொடர்பாக எழுகின்ற பல்வேறு சர்ச்சைகளுக்கு மையமாகும்.

தேசிய வாதமானது பொருளாதாரத்தில் இருந்து

(STRUCTURE) இனங்காணப்பட்டால் தேசிய வாதத்தின் தனித்துவமான பண்புகள், குறிப்பான இயங்குவிதிகள் என்பவை புரிந்து கொள்ளப்பட்டால் - அதாவது தேசிய வாதத்தின் பரிபாஷைகள் புரிந்து கொள்ளப்படுமாயின் -தேசியவாதத்துடன் தொடர்புடைய பல்வேறு அம்சங்கள் மிகவும் வித்தியாசமான விளக்கங்களைப் பெறுவதைக் காணலாம். " என தேவதாஸ் மார்க்சியத்துக்கு எதிராக தனது தாக்குதலை தொடுத்துள்ளார். இது முன்பு கரிகாலன் கூறிய வர்க்கமற்ற புலிகளை அங்கீகரிப்பதில் போய் முட்டி நிற்கின்றது.

தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக மார்க்சியம் அங்கீகரிக்கவில்லை அல்லது பெயரளவில் அங்கீகரிக்கின்றது என்று கூறியதன் ஊடாக மார்க்சியத்தை கொச்சைப் படுத்தி முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க முயன்றுள்ளார். தேசிய இனப்பிரச்சனையை மற்றைய எந்தத் தத்துவத்தையும் விட மார்க்சியம் சிறப்பாக விளங்கப்படுத்தியும், இன்று உலகில் முன்னேறிய தீர்வையும் வைத்துள்ளது. இக்கட்டுரையில் வரும் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டை அங்கீகரித்தும் அதை விளங்கப்படுத்தி உள்ளதும் மார்க்சியமே. இதை மறைக்க சேறடிக்க முயல்வது ஏன்?

சுயநிர்ணய உரிமை தொடர்பாக சோவியத்தில் லெனின், ஸ்டாலின் விரிவான விளக்கத்தை முன்வைத்து விளங்கப்படுத்திய அதே காலத்தில் சோவியத்தில் தேசிய இன முரண்பாடுகள் கூர்மையடைந்து இருந்ததை மறந்து விட முடியாது. போலந்து பிரிந்து போகக்கூடிய சுயநிர்ணய உரிமையை லெனின் அங்கீகரித்த போது ரோசாம்லுக்சம்போக் அவ்சுயநிர்ணய உரிமையை எதிர்த்தார். இதுவே லெனினின் "தேசிய சுயநிர்ணய உரிமை" என்ற புத்தகம்.

மோதிக்கொள்கின்றன. இது எது சார்ந்ததாக (மதம், இனம், .......) இருந்தாலும் அது சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வாதமே.

சிங்கள, தமிழ் தேசிய இனத்துக்கு இடையிலான போராட்டம் ஏன் தோன்றியது. இது தேவதாஸ் குறிப்பிடும் கற்பனையான தனித்துவமான பண்புகளால் அல்ல. மாறாக சுரண்டும் வர்க்கம் தனது சுரண்டலை தொடர்ந்து பாதுகாக்க இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றனர். தமிழ் மக்களில் நிலப்பறிப்பு, தரப்படுத்தல், தமிழ் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைத்தல் ....... என அனைத்தும் பொருளாதாரம் சார்ந்ததே. பொருளாதாரம் சாரும் போது வர்க்கமாக இனங்காணமுடியும்.

இங்கு இரு இனங்களின் அனைத்து வர்க்கமும் ஒரு அணியில் உள்ளது போல் அல்லது உள்ளனர் என்ற கூற்றை ஆராயின் ஒரு தேசிய இனத்தின் அனைத்துப் பிரிவும் பாதிக்கப்படும் போது தேசிய இன முரண்பாடு என்ற கோசத்தின் கீழ் அணிதிரள்கின்றனர். இது எந்த முரண்பாட்டுக்கும் பொருந்தும்.

ஒரு முரண்பாடு தனக்கே உரிய சிறப்பியல்புகளை கொண்டு இருக்கும். அதன் ஊடாக தனக்கே உரிய இணைவுகளை கொண்டுமிருக்கும். அவை தத்தம் பொருளாதார நலன் சார்ந்து தமது வர்க்க நோக்கில் செயல்படும். இது தேசிய இன முரண்பாட்டிற்கும் பொருந்தும்.

"பழம் பெருமைகளைப் பேசினாலும் கூட பொதுவாக, தேசிய இயக்கங்களது இலக்கானது முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசை நிறுவுவதற்காகவே இருக்கின்றது." என்ற தேவதாஸின் வாதம் முழுமையானது அல்ல. ஏனெனின் ஜனநாயகத்தை கோரவேண்டும் எனின் முதலாளித்துவ வர்க்க அடிப்படையான தேசிய நலன் சார்ந்து இருக்க வேண்டும். அதற்கான திட்டத்தை கொண்டிருக்க வேண்டும். இதைவிட தேசிய இன முரண்பாடு முதலாளித்துவ தேசிய வாதத்துக்கு . பதில் நிலப்பிரபுத்துவ தேசிய வாதத்தை கோரமுடியும். இதை நாம் ஆராயின் இந்தியாவில் சுதந்திரம் பெற்ற போது அங்கு முதலாளித்துவ தேசியம் உருவாகவில்லை. மீண்டும் பழைய இந்தியாவே தொடர்ந்தது. இது வரலாறு முழுக்க நீண்டே உள்ளது. ஏன் எதிர்காலத்தில் புலிகள், தென் ஆபிரிக்க காங்கிரஸ் , அரபாத்.... என தொடரும். முதலாளித்துவ தேசியமல்லாத பாட்டாளிவர்க்கப் புரட்சியை முன்னெடுத்த சீனா, என பல்வேறு தேசிய விடுதலைகளை நாம் காணமுடியும்.

"தேச உருவாக்கம் என்பது மிகவும் வேறுபட்ட நிலைமைகளில் மிகவும் வேறுபட்ட கூறுகளை அடிப்படையாகக் கொண்டும் நிகழ்ந்தேறுகிறது." என்ற தேவதாஸின் வாதத்தைப் பார்ப்போம். வேறுபட்ட நிலைமை, வேறுபட்ட கூறு என்பது என்ன? தேசத்தின் உருவாக்கம் பொருள் சார்ந்த, வர்க்கம் சார்ந்தவையே. எல்லாப் போராட்டங்களைப் போல் தேசவிடுதலைப் போராட்டமும் தனக்கான முரண்பாட்டின் அடிப்படையில் சிறப்பு இயல்புகளை வெளிப்படுத்தும். ஆனால் அனைத்தும் பொருளாதாரம் சார்ந்த வர்க்க இருப்புக்கானதே.

மார்க்சியம் தேசிய இன முரண்பாட்டை அங்கீகரிக்கவில்லை அல்லது பெயரளவில் அங்கீகரிக்கின்றது என்ற தேவதாஸின் வாதம் அப்பட்டமான பொய் மட்டும் இன்றி மார்க்சியத்தின் மீதான தாக்குதலாக வெளிவந்தமையே.
வர்க்கப் போராட்டம், அது சார்ந்த பொருளாதாரமும் தேசிய வாதத்தின் தனித்துவமான பண்புகளை அங்கீகரிப்பது இல்லை என்ற தேவதாஸின் கூற்று கரிகாலன் குறிப்பிட்ட வர்க்கமற்ற புலிகளை நிறுவ வாதிடப்பட்டதே. தேசிய இன முரண்பாட்டில் உருவாகும் போராட்டங்கள் பொருளாதாரமற்ற, வர்க்கமற்றதாக இருக்க முடியும். இது வர்க்கமற்ற சமுதாயம் உருவாகியுள்ளதாக சோவியத், சீனாவில் கூறி முதலாளித்துவத்தை மீள் உருவாக்கியதைப் போன்றதே. ஏதோ கம்யூனிச சமுதாயத்தில் வாழ்வதாக கற்பனையோ? சமுதாயங்கள் வர்க்கங்களால் உருவானது. வர்க்கங்களால் உருவான சமுதாயத்தில் எழும் முரண்பாடுகள் வர்க்க அமைவுக்குள்ளேயே அமையும்.

தேசிய இன முரண்பாட்டின் தனித்துவமான பண்பு என்பது என்ன கட்டுரையாளர் கற்பனையில் நினைப்பது போன்று அப்படி ஒன்றும் கிடையாது. எல்லா முரண்பாடுகளும் அவை அவைக்குரிய சிறப்பான இயல்புகளோடு வெளிப்படும். தேசிய இன முரண்பாடும் பொருளாதாரம் சாராது தோன்றுவது இல்லை. இக் கட்டுரையாளர் வசதியாக ஏன் தேசிய இன முரண்பாடு தோன்றியது, அதற்கான காரணம் என்ன என்பனவற்றை மூடி மறைத்து விடுகின்றார். தேசிய இன முரண்பாடும் எந்த ஆதாரமும் இன்றி அந்தரத்தில் தோன்றியது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னுரை" என்ற கட்டுரையை நாம் பார்ப்போம். இதில் உள்ள பல விடயத்துக்கு மேல் பதிலளிக்கப்பட்டுள்ளது. அவைகளை விடுத்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்கின்றோம்.

"தேசிய வாதம் குறித்த செவ்வியல் மார்க்சியத்தை (CLASSICAL MARXISM) சரியான புரிதலைத் தரவில்லை என்ற விமர்சனம் நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. இந்த நோக்கில் பல புதிய தேடல்களும், விவாதங்களும் மார்க்சிய வாதிகளிடையே தொடர்ச்சியாகவே நடைபெற்று வந்துள்ளது.......... தமிழ் முன்னேறிய பிரிவினரிடம் இருப்பதெல்லாம் லெனின், ஸ்டாலின் ஆகியோரது சில கட்டுரைகள் மட்டுமே ....... இவை இன்றைய தமிழ் தேசிய இயக்கத்தைப் புரிந்து கொள்வதில் அதிக பங்காற்ற மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
...... தமிழீழ விடுதலைப் போராட்டமானது கோட்பாட்டு ரீதியில் பல பத்தாண்டுகள் பின்தங்கி நிற்கும் இன்றைய நிலையில்........

"கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த வார்த்தையும் அதிக நேரத்துக்கு பயன்படமாட்டாது" என்பது முதுமொழி.

....... இந்தக் கட்டுரையில் வரும் கருத்துக்கள் அனைத்துமே எமக்கு உடன் பட்டவை என்று கூற முடியாவிட்டாலும் இக்கட்டுரையில் எழுப்பப் பட்டுள்ள பிரச்சனைகள் சாதாரணமாக தட்டிக் கழித்து விடக்கூடியவை அல்ல ....... இக்கட்டுரை தொடர்பாக விரிவான கருத்துக்களை அக்கறை உடையோரிடமிருந்து (கீழ் கோடு எமது) எதிர்பார்க்கின்றோம்." என உயிர்ப்பு ஆசிரியர் குழு கட்டுரை மீது கூறியுள்ளனர். இங்கு மார்க்ஸ்,லெனின், மாவோ சிந்தனையை நிராகரித்து வருவதால் இது மார்க்சியம் அல்ல. மார்க்சியம் என்பது மார்க்ஸ், லெனின், மாவோ சிந்தனையே. தேசிய இன முரண்பாடு தொடர்பாக லெனின், ஸ்டாலின் கருத்துக்களை அதன் அடிப்படையை குழிதோண்டிப் புதைத்து அது எமக்கு பொருந்தாது என்பதன் ஊடாக இவர்கள் மார்க்சியத்துக்கு புறம்பாக முதலாளித்துவ தத்துவத்தை மார்க்சியத்தின் பேரால் உயர்த்தி உள்ளனர். மார்க்ஸ், லெனின், மாவோ சிந்தனைக்குப் புறம்பாக புதிய மார்க்சிய சிந்தனைகள் வெளிவந்தன எனின் அது மார்க்சியம் அல்ல. மாறாக அது முதலாளித்துவ சித்தாந்தமே. மார்க்சியம் என்பது மார்க்ஸ், லெனின் மாவோ சிந்தனையே. தமிழ் முன்னேறிய பிரிவினரிடம் இருப்பது லெனின், ஸ்டாலின் ஆகியோரின் கட்டுரையே எனச் சொன்னதன் ஊடாக லெனின் மாவோ காலத்தில் இருந்த மார்க்சிய சித்தாந்தத்தை நிராகரித்துள்ளனர். லெனின், மாவோ சித்தாந்தத்தை ஏற்ற மார்க்சியர்கள் மீது தான் இத்தாக்குதல். இவர்களின் சித்தாந்தத்தை ஏற்காதவர்கள் மார்க்சியகள் அல்ல. இதில் உயிர்ப்பும் மனிதத்துடன் சேர்ந்து அடங்கும்.

மார்க்ஸ், லெனின், மாவோ சிந்தனையான மார்க்சியத்தை குழிதோண்டி புதைக்க எண்ணியே பல பத்தாண்டுகள் பின்தங்கி நிற்பதாக கூறி உள்ளனர். பல பத்தாண்டுக்குமுன் மார்க்ஸ், லெனின்; மாவோ வரைந்த மார்க்சிய சிந்தனையை தமிழ் மார்க்சிட்டுக்கள் கொண்டு உள்ளதாக கூறி இவர்களின் மார்க்சியம் அல்லாத புதிய தத்துவத்தை (முதலாளித்துவ) ஏற்க வைக்க உயிர்ப்பு முயல்கின்றனர். இது போன்ற குருசேவ், டெங் கும்பல் சோவியத், சீனாவில் செய்ததை நாம் மறந்து விடமுடியாது. அதுதான் ஒரு பழமொழியைக் கூறி ஒரு சோவியத், சீனா ஆக்க தமிழ் மார்க்ஸிஸ்டுக்கள் முயல்கின்றனர்.

இக்கட்டுரையில் முரண்பாடு உண்டு என்றவர்கள் அது என்ன என சொல்ல முடியாதவர்கள்

கட்டுரையைத் தட்டிக் கழிக்க முடியாது என கூறி மார்க்சிய விரோத நிலைக்காக தமது வக்காலத்தை தொடர்ந்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பாக அக்கறை உடையோர் இடம் இருந்து கருத்து கோரியது என்பது தமக்கு சார்பானவர்களிடமே. அதாவது மார்க்சிச, லெனினிய, மாவோ சிந்தனையை உயர்த்துபவர்கள் இடம் அல்ல. மாறாக இக்கருத்தை ஏற்கக்கூடியவர்கள் இடம் அதனால் தான் அக்கறைக்குரியவர்கள் என இக் கட்டுரைக்கு மட்டும் சிறப்பாக கோரியுள்ளனர்.

"இடத்திற்கிடம் சூழலுக்குச்சூழல் மிகவும் வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்ட தேசியப் பிரச்சனை தொடர்பாக ஒரு விரிவான கோட்பாட்டை உருவாக்குவதில் சகல கோட்பாட்டாளர்களும் தோல்வியையே கண்டுள்ளனர். தேசியப் பிரச்சனை குறித்து ஒன்று பட்ட முரணற்ற ஒரு கோட்பாட்டை உருவாக்குவதிலுள்ள கஷ்டங்களை பரவலாக பலரும் அங்கீகரித்துள்ளனர். இங்கு மார்க்சியமானது தேசியப் பிரச்சனை தொடர்பாக ஒரு முழு நிறைவான கோட்பாட்டை உருவாக்கி முன்வைக்கும் ஆற்றலை தனக்குள் கொண்டிருந்தும் தனது குறுகிய போக்குகளால் ஆக்க பூர்வமற்ற தனது வரலாற்றல் தேசியப் பிரச்சனையை ஒரு எல்லையில் உள்ள பிரச்சனையாகவே வைத்திருக்கின்றது. மார்க்சியமானது தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது வெறுமனே தற்செயல் விபத்தல்ல. மிகவும் குறுகிய, இறுக்கிய சட்டம் போட்டு வரையறுத்து இதுதான் மார்க்சியம் என மார்க்சியவாதிகள் அறைந்துவிட்டதால் உலக ரீதியில் நாளுக்கு நாள், சகாப்தத்திற்கு சகாப்தம் தோன்றும் புதிய பிரச்சனைகளின் பரிமாணங்களுக்கு மார்க்சியத்திலுள் இடமில்லாமற் போய் விடுகிறது." என உயிர்ப்பில் தொடர்கின்றனர். உலகில் மார்க்சியத்திற்கு புதிய பிரச்சனையில் இடம் இல்லாமல் போய்விட்டது என கூறும் முதலாளித்துவ வாதிகளின் கூற்றைக் கேட்டு மார்க்சிய வாதிகள் நகைக்கத்தான் முடிகின்றது. ஏன் எனின் இன்று மார்க்சியம் அல்லாத முதலாளித்துவக் கோட்பாடு உலகில் தனது அடக்கு முறையூடாக தன்னை நிலைநிறுத்துவதையும், முதலாளித்துவமே உலகில் உள்ள புதிய பிரச்சனைகளைத் தீர்க்கும் என வாதிட முற்படுபவர்களின் கருத்துகளில் உயிர்ப்பு சாதரணமாக தட்டிக் கழிக்க முடியாது எனக் கூறி அவர்கள் உடன் இணைந்துள்ளனர்.

தேசிய இனப் பிரச்சனை இடத்துக்கு இடம் வேறுபட்ட பரிணமத்தை கொண்ட போதும், அதன் உருவாக்கத்திற்கான அடிப்படை வர்க்க முரண்பாடும், பொருளாதார நிலையுமே. தேசியப் பிரச்சனை தொடர்பாக விரிவான கோட்பாட்டை உருவாக்குவதில் சகல கோட்பாட்டாளரும் தோல்வி அடைந்துள்ளனர் என்றதன் ஊடாக மார்க்சியம் மீது தாக்குதல் நடாத்துகின்றனர். தேசிய இன முரண்பாடு அதன் வளர்ச்சியின் மீது மார்க்சியம் மிகத்தெளிவான ஆய்வையும் உயர்ந்தபட்ச தீர்வையும் வைத்துள்ளது. ஒரு தேசிய இனம் சுயநிர்ணய உரிமையை கோரவும் அது பிரிந்து போகவிரும்பின் பிரிந்து செல்லவும் முடியும் என்ற அதி உயர் தீர்வையும் அங்கீகரித்துள்ளது.

தேசிய இனமுரண்பாடும் அதன் தீர்வை கோரும் பிரிவினரின் அதி உயர்தீர்வு பிரிவாகவே உள்ளது. அதை மார்க்சியம் அங்கீகரிக்கின்றது. அதை முற்போக்கு போராட்டமாக ஏகாதிபத்தியத்தை பலவீனப் படுத்துவதாக மார்க்சியம் விளக்கி உள்ளது. மார்க்சியம் தேசிய பிரச்சனையில் விரிவான கோட்பாட்டை கொண்டுள்ளதோடு தேசிய இன முரண்பாட்டைத் தீர்ப்பதில் வெற்றியும் பெற்றுள்ளது.

கோட்பாட்டை உருவாக்குவதில் கஷ்டம் உள்ளதாக பலர் அங்கீகரித்துள்ளனர் என்றதன் ஊடாக ஒன்றுபட்ட முரணற்ற கோட்பாட்டை கோரிநிற்கின்றனர். அதாவது அனைத்துப் பிரிவு மக்களின் கோட்பாட்டை கோரிநிற்கின்றன. இது போல் சோவியத்தில் குருசேவ்வும், சீனாவில் டெங் கும்பலும் அனைத்து மக்களுக்கான அரசு என சொல்லி திரியை புகுத்தி முதலாளித்துவத்தை மீட்டதைப் போன்றதே. அன்று அனைத்து மக்களின் அரசு போல் ஒன்று பட்ட முரணற்ற கோட்பாட்டை கோருவது மார்க்சியத்தை குழிதோண்டி புதைத்து அதன் மேல் மார்க்சியத்தை கூறிய படி முதலாளித்துவ இருப்பை உருவாக்கவே. தேசிய இன முரண்பாடு வர்க்கப் போராட்டத்துக்கு உட்பட்டதே.

மார்க்சியம் பிரச்சனையைத் தீர்க்கும் பலம் கொண்டிருந்தும் தனது குறுகிய போக்கால் தேசியப் பிரச்சனையை எல்லையில் வைத்துள்ளதாம். எவ்வளவு வேடிக்கையான வாதம். மார்க்சியம் தேசிய இனத்தின் அதி உயர் தீர்வான பிரிவினையை ஏற்கின்றது. அது ஏகாதிபத்தியத்தை பலவீனமாக்குகிறது. அந்த வகையில் மார்சியம் தீர்க்கும் பலம் கொண்டுள்ளது. மார்க்சியம் குறுகிய வட்டம் தீர்க்கவில்லை என்றதன் ஊடாக மார்க்ஸ், லெனின், மாவோ சிந்தனை மீது அது குறுகிய வட்டம் என முதலாளித்துவ கோட்பாட்டில் நின்றபடி குரல் கொடுத்துள்ளார். லெனின், ஸ்டாலின் தத்துவத்தை குறுகிய வட்டம், இறுகிய வட்டம் எனச் சொல்லி திரிபாக்கி முதலாளித்துவத்தை மீட்டது போல், சீனாவில் டெங் கும்பலும் மாவோவின் தத்துவத்தை குறுகிய வட்டம் எனக் கூறி முதலாளித்துவத்தை மீட்டது போல், இலங்கையில் தேசிய இனப்பிரச்சனையில் மார்க்சிய அடிப்படையை ஏற்று தீர்வை நாடுபவர்களை தாக்கி அழிக்க முயன்றுள்ளனர்.

மார்க்சியம் தேசிய இனப் பிரச்சனைக்கு முக்கியம் கொடுக்க வில்லை இது தற்செயல்லான நிகழ்சியல்ல. குறுகிய, இறுகிய, சட்டம் போட்டு இது தான் மார்க்சியம் என அறைந்துவிட்டது. இதனால் உலகில் புதிய முரண்பாடுகளை கையாள்வதில் மார்க்சியத்துக்கு இடம் இல்லாமல் போய்விட்டது எனக் கூறி இதை உயிர்ப்பு சாதரணமாக தட்டிக்கழிக்க முடியாதாம். மார்க்சிய வாதிகள் முதலாளித்துவ வாதிகளைப் பார்த்து சிரிப்பதுடன் அவர்களின் அழிவை சுட்டிக்காட்டியும் வருகின்றனர். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ காலம் காலமாக மார்க்சியத்தை பாதுகாத்து சகல திரிபுவாத எதிர் புரட்சிவாதிகள் இடத்தில் இருந்து பாதுகாத்து வந்த அடிப்படை மார்க்சியத்தை தாக்குகின்றனர். அன்றும் இதை உயர்த்தி மேற் கூறிய ஆசான்களின் தத்துவத்தின் மீது தாக்குதலைப் பொழிந்துள்ளனர். அது மீண்டும் எம் மண்ணில் எம் போராட்டத்தில் எழும்புவது எதிர் பார்த்தவையே. இதைக் காப்பாற்ற உயிர்ப்பு பல பத்தாண்டுகள் பின்தங்கி நிற்பதாக கூறி மார்க்சியத்தை குழிதோண்டி புதைக்க முயன்றுள்ளனர். ஏன் எனின் மார்க்சியம் என்பது மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ இன் தத்துவங்களே. இது தான் மார்க்சியம். இதற்கு அப்பால் உள்ளவை மாக்சியத்துக்கு எதிரான முதலாளித்துவக் கோட்பாடே.

"ஈழம் தொடக்கம் ஸ்கொட்லன்ட் ஊடாக அஜர்பஜான்வரையும் இன்று ஒரு கூர்மை அடைந்த பிரச்சனையாகவும் ........ சமூக சக்தியாகவும் விளங்கும் தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமையால் உலக ரீதியில் மார்க்சியத்தின் தோல்வியும் தவிர்க்க முடியாததாகிறது. பெண்கள், நிற, சூழல், பிராந்திய போன்ற பல பிரச்சனைகள் -முக்கியமாக தேசியப் பிரச்சனை- மார்க்சியம்

## உங்களுடன் சமர்

தமிழீழப் போராட்டததில் தேக்கமும், புதிய தேடலும் எம்மை ஒரு சஞ்சிகையாக பருணமிக்க வைத்தது. நாம் ஒரு சஞ்சிகையாக வெளிக்காட்டிய ஆரம்ப நாட்களில் ஐரோப்பிய முற்போக்குகளை மையமாக வைத்தே வெளிவந்தோம்.

சஞ்சிகையின் தொடர்ச்சியில் முற்போக்குப் போலிகளை ஆரம்பத்தில் இனம் கண்ட நாம் இன்று மார்க்சியத்தின் மீதான தாக்குதலையும் இனம் காண்கின்றோம்.

கடந்த 9 இதழ்களிலும் சில முழுமையான கட்டுரைகளைத் தாங்கி வந்ததுடன் முன்னேறிய பிரிவினர் மட்டுமே சமரை வாசிக்கும் நிலையும் இருந்தது.

இவை தொடர்பான பல விமர்சனங்களை எதிர் கொண்டோம். இதைத் தொடர்ந்து சிறுசெய்திகள் முதல் கட்டுரை வரை உள்ளடக்கிய சமர் 10 ஐ உங்களுக்கு அறிமுகம் செய்கின்றோம்.

எமது பத்திரிகை பல வாசகரின் விருப்புடன் தொடங்கி உள்ளோம். இதில் பல குறைகள் இருக்கும் என நம்புகின்றோம். எதிர்காலத்தில் சமர் பத்திரிகையை ஒரு சிறந்த தேசிய விடுதலைப் பத்திரிகையாக உயர்த்த முடியும் என நம்புகின்றோம். இச் சமர் பத்திரிகை போட்டேக் கொப்பியாகவே வெளிக்கொண்டுவர முடிவதுடன் ஓரளவுக்காவது பத்திரிகைக்கான வடிவத்தை குறைந்தபட்சம் கொண்டுளது. எதிர்காலத்தில் இதை அச்சுப் பத்திரிகையாக மாற்றவும் பக்கங்களின் எண்ணிக்கையை கூட்டவும் கால இடைவெளியைக் குறைக்கவும் உங்கள் உதவி எமக்குத் தேவை.

பத்திரிகைக்கான நிதி, அரசியல் உள்ளடங்கிய ஆக்கங்கள், விமர்சனங்கள் என்பன ஒரு சீராகவும் ஒழுங்காகவும் கிடைக்கும் பட்சத்தில் சமர் தன்னை விரிவுபடுத்தும்.

சமர் உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை கோரி நிற்கின்றது. சமருடன் இணைந்து வேலை செய்ய விரும்பும் சக்திகளை சமர் வரவேற்கின்றது.

அனைத்து தொடர்புகளுக்கும்
SAMAR
87, Rue De Colombes
92600 Asnieres Sur Seine
France.

சந்தா அனுப்ப வேண்டிய தபாற்கணக்கு
2.674.73M
Centre De Chequees
Aux
75900 Paris Chequees
France.

வாசகர்களே உங்களிடமிருந்து ஆக்கங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்

### எதிர்காலப் பிரஜையின் பாடல்

இன்னும் மலராத் தேசமொன்றில்
இருந்து வந்தவன் நான்
இங்கு பிறந்தது
நான் மட்டுமல்ல
நீ மட்டுமல்ல
நாம், சகோதரர்கள்....

தருதற்கு கை நிறைய
அன்புண்டு என்னிடத்தில்
'நாணய்' நிறைந்த
அன்பைவிட ஏதுமில்லை.
என்னிடம் ஓர் இதயமும்
அழுகைகளும் உண்டு.
ஆனாலும், அவை
என்னது மட்டுமல்ல...

இன்னும் மலராத் தேசமொன்றில்
இருந்து வந்தவன் நான்,
தருதற்கு நிறைய
அன்பினைத் தாங்கிய
நான்
இன்னும் மலராத் தேசமொன்றின்
பிரஜைகள் பலருள் ஒருவன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன்னை காலகாலமாக சுற்றிக் கட்டி வைத்துள்ள அரணை உடைத்து ஒரு பரந்த சட்டத்தில் வைத்து பிரச்சனைகளை அணுகுவதற்கு வற்புறுத்துகிறது." என கட்டுரை தொடர்கின்றது. இவ் வாதமும் அதன் கோட்பாடும் முதலாளித்துவ இருப்புக்கானதே. அதுதான் மார்க்சியம் உலகில் தோல்வி பெற்றுவிட்டது என ஏகாதிபத்திய வாதிகள் உடன் நின்று குரல் கொடுக்கின்றனர்.

மார்க்சியம் இன்று உயிர் வாழ்வதுடன் புரட்சியின் தலைமை சக்தியாகவும் இன்று உலகில் வீறு நடை போடுகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தேசிய இன முரண்பாடும் மார்க்சியத்தினால் உருவானதாக கூறி, ஏகாதிபத்திய வாதிகள் மார்க்சிய வாதிகளை பயங்கரவாதிகள் என்றது போல் ஒன்றுக்கு ஒன்று சம்மந்தமில்லாத விடயங்களை உளறிக் கொட்டுகின்றனர். ஈழப் போராட்டம் உருவானது மார்க்சியத்தால் அல்ல மாறாக சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட ஏகாதிபத்திய நலன் பேணும் தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ பிரிவினராலேயே உண்டாக்கப்பட்டது. இது உலகில் எந்த நாட்டிற்கும் விதிவிலக்கின்றி உள்ளது.

முன்னைய கம்யூனிஸ்ட் நாடுகளைப் பொறுத்த வரையில் புரட்சியின் காலத்தில் தேசிய இன முரண்பாட்டின் கூர்மையான நிலைமையிருந்த போதும், மார்க்சியம் அவர்களுக்கான சரியான தீர்வை வழங்கிய போது ஒன்றுபட்ட புரட்சியாக மாறி ஒரு நாட்டில் பல தேசிய இனங்கள் கொண்ட அரசாக மாறி இருந்தன. ஆனால் புரட்சியைக் கைவிரித்து திரிபை ஏற்று எல்லா மக்களுக்குமான அரசு உருவாக்கிய போது அங்கு முதலாளித்துவ மீட்சியும், அங்கு தேசிய இன அடக்குமுறையும் உருவாக்கப் பட்டது. ஆகவே வளர்ச்சி பெற்ற இவை தனியான அரசுகளாக மாறிவிட்டன, மாறிவருகின்றன. இந்நிலமை என்பது மார்க்சியத்தை கைவிட்டதில் இருந்தே ஆரம்பிக்கின்றது.

பெண்கள், நிற, சூழல், பிராந்திய, தேசியம் என அனைத்துக்கும் மார்க்சியம் முக்கியத்துவம் கொடுக்க வில்லை என்ற வாதம் கேடுகெட்ட கடைக்கோடித்தனமான முதலாளித்துவ கோசமே. மேற்குறிப்பிட்ட அனைத்தையும் மார்க்சியமே சிறப்பாக விளக்கி உள்ளது. மார்க்சியத்தை ஏற்றவர்கள் இப்பிரச்சனைகள் மீது முற்போக்குப் பாத்திரத்தை முன்னெடுத்து தீரமிக்க போராட்டத்தை நடாத்தினர், நடாத்திவருகின்றனர். இது வரலாறு நெடுக்க நீண்டுள்ளது. மார்க்சியத்தை நிராகரித்த யாரும் எந்தக் கோட்பாட்டாளரும் இப்பிரச்சனைகள் மீது முற்போக்கு நிலையை கடைப்பிடித்தது இல்லை கடைப்பிடிக்கவும் முடியாது. மார்க்சியம் என்பது ஒன்றே. இது இரண்டோ, மூன்றோ அல்ல. மார்க்சியம் என்பது ஒன்றுமட்டுமே உள்ளது. மார்க்சியத்தை ஒழுங்கமைத்து அதை சமூக விஞ்ஞானமாக நிறுவியவர் மார்க்ஸ். மார்க்சியத்தை நிராகரிப்பவர்கள் மார்க்சின் கோட்பாடுகளையே நிராகரிக்கின்றனர்.

எல்லோருக்குமான கட்சி என்பது பாட்டாளி வர்க்கத்தை முதலாளிக்கு சேவை செய்யக் கோருவதே. ஒருகட்சி, ஸ்தாபனம் என அனைத்தும் தனக்கான திட்டம், ...... என அனைத்தும் கொண்டிருக்கும். இது இறுகியது, குறுகிய, சட்டம் போட்டு உள்ளது என்றதன் ஊடாக அராஜகத்தை ( இங்கு அராஜகம் என்பது மார்க்சியக் கருத்து ஆக்கத்தில்) கோருவதுடன் பாட்டாளிவர்க்கம் அரசு ஆணையில் ஏறுவதை சகிக்க முடியாதவர்களின் கூக்குரலே இக் கட்டுரை.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரின் மார்க்சிய தத்துவங்கள் அதன் அடிப்படையை உடைத்து எல்லோருக்குமான ஒரு கட்சியாக சீரழிக்க கோருவதை எந்த மார்க்சிஸ்ட்டும் நினைத்துக்கூட பார்க்காதது மட்டுமின்றி அதற்கு எதிராக தீரமிக்க போராட்டத்தை நடாத்துவர். கடந்த காலத்தில் அதற்காகப் போராடி பாதுகாத்து எம் கைகளில் தந்துள்ள நிலையில் நாம் அதற்காக போராடி புரட்சியை முன்னெடுக்கும் பணி எம் எல்லோருக்கும் உள்ளது.

எல்லா வர்க்கப் பிரிவினரும் தமது வர்க்க நலன்களின் அடிப்படையில் ஒவ்வொரு பிரச்சனையையும் ஆராய்வர். அந்த வகையில் மார்க்ஸ்ட்டுக்களை அதை கைவிடக் கோருவது என்பது பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவத்துக்கு சேவை செய்யக் கோருவதே. இதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாததுடன் இக்கோட்பட்டை திட்டவட்டமாக முறியடிக்க வேண்டும். இதுவே இன்று தமிழ் முற்போக்கு பிரிவினரின் பிரதான கடமையாகும்.

"தேசிய வாதமானது முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தமாகவே பார்க்கப்பட்டது. ஏனெனில் தேசிய வாத சித்தாந்தமானது நிலப்பிரபுக்களுக்கு எதிராக வளர்ந்து வந்த முதலாளி வர்க்கத்திற்கு சேவை செய்தது." என்று கட்டுரை தொடர்கின்றது.

இது ஒரு பக்கம் மட்டுமே சரியானது. நிலப்பிரத்துவத்திற்கு எதிரான போராட்டங்கள் பாட்டாளிவர்க்கப் புரட்சியை முன்னெடுக்க முடியும். இதை மார்க்சியம் ஏற்றுள்ளது. தேசியப் போராட்டம் என்பது ஒரு நாட்டில் இருந்து பிரிவது மட்டுமல்ல காலனி, நவகாலனி நாடுகளின் விடுதலையும் தேசிய விடுதலைப் போராட்டங்களே. ஒரு நாட்டில் இருந்து இன்னுமொரு நாடு பிரியக் கோரி ஒரு இனம் போராடின் பெரும் தேசியஇனம் அல்லது அடக்கும் இனப் பாட்டாளிகள் பிரிவினை அங்கீகரித்த சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டும். அப்படி ஒருநிலை இல்லை எனில் ஒடுக்கப்படும் தேசிய இனம் பிரிந்து போவது எந்த வர்க்கம் தலைமையில் உள்ளதோ அதன் தலைமையில் விடுதலைகிடைக்கும். அதுவே தேசிய முதலாளித்துவ பிரிவாக தான் இருக்க வேண்டும் என்பது அல்ல.

"தேசிய போராட்டம் என்பது ஒரு குறிப்பான வடிவில் உள்ள வர்க்கப் போராட்டமேயாகும். ஆகவே இது சர்வ தேச அளவில் நடத்தப்பட வேண்டிய போராட்டமாகும். வர்க்க ரீதியிலான போராட்டத்தில் ஏற்படும் கூர்மையானது தேசிய போராட்டத்தை மழுங்கடித்து விடும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது" எனகட்டுரை தொடர்கிறது. வர்க்கப் போராட்டத்தின் கூர்மை தேசிய போராட்டத்தை இல்லாமல் ஒழிக்கிறது. ஏன் எனின் வர்க்கப் போராட்டம் தேசிய போராட்டத்துக்கு சரியான தீர்வை வைத்தது அவர்களுடன் ஐக்கியப் பட்டு புரட்சியை நடாத்தி முடிக்கின்றனர். சோவியத் புரட்சியில் தேசிய இனங்கள் ஐக்கியப் பட்டு போராடியதும், சீனாவில் தேசியம் ஐக்கியப்பட்டு போராடியதும் வரலாறு. அந்நாடுகளில் மார்க்சியத்துக்கு துரோகம் இழைத்து தேசிய இனங்களுக்கு மார்க்சியம் வழங்கிய உரிமையை மீறிய போது மீண்டும் தேசிய இனங்கள் போராடின. இன்று பிலிப்பைன்சில் மிந்தனா தேசிய விடுதலை இயக்கம், இன்று பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஐக்கியப்பட்டு போராடுகின்றனர். எனவே மார்க்சியம் சரியாக முன்னெடுக்கும் புரட்சிகளில் தேசிய இன முரண்பாடு மார்க்சியத்துக்குள் தீர்வை பெற்று இல்லாது போய்விடும். ஆனால் மார்க்சியத்துக்கு துரோகம் இழைத்து புரட்சி காட்டிக் கொடுக்கப்படும் போது மீண்டும் தேசிய இன முரண்பாடு முன்னுக்கு வருவது தவிர்க்க முடியாது.

விடுதலைப் போராட்டங்களும் உலகளாவிய போக்காக இக் கால கட்டத்தில் மாறிவிட்டுள்ளது இங்கு தேசிய வாதமே மறைவதற்குப் பதிலாக தேசிய வாதமே பிரதான போக்காக மாறி மார்க்சிய போராளிகளையே உள்ளிழுத்துக் கொண்டுள்ளதைக் காணமுடியும்." என கட்டுரை தொடர்கின்றது. இன்றைய சகாப்தம் வர்க்கப் போராட்ட சகாப்தமே.இன்று எங்கும் எல்லா இடத்திலும் என்றும் இல்லாத அளவில் வர்க்க முரண்பாடுகள் கூர்மையடைந்து போராட்டம் வீறு கொண்டுள்ளது. தேசிய விடுதலைப் போராட்டமும் வர்க்கப் போரட்டமே. தேசிய விடுதலைப் போராட்டமே வர்க்க போராட்டம் என்கின்ற போது தேசிய விடுதலைப் போரட்டம் வர்க்கப் போராட்டத்தின் பகுதி போராட்டமாகவே உள்ளது. இம் முரண்பாடு சிலவேளை பிரதான முரண்பாடாக முன்னிலையில் இருக்கலாம். ஆனால் எப்போதும் வர்க்கப் போராட்டத்தால் தான் தீர்வை பெறமுடியும். இது எமது போராட்டத்தில் எல்லா இயக்கங்களும் கற்றுத் தந்துள்ளது. எந்த முரண்பாடும்,எந்தப் போராட்டமும் பொருளாதாரம் சார்ந்த வர்க்க முரண்பாடே. ஒவ்வொரு தேசியப் போராட்டமும் வர்க்கம் சார்ந்த பொருளாதாரம் சார்ந்ததே. அங்கேயும் வர்க்கப்போராட்டமே நிகழ்கிறது. சீனாவில், வியட்நாமில், ..... என தொடர்ந்த விடுதலைப் போராட்டங்கள் வர்க்கம் சார்ந்த தேசிய விடுதலைப் போராட்டங்களே. இலங்கைக்கான வர்க்கப் போராட்டம் நடைபெறின் கூட அது இலங்கைக்கான தேசிய விடுதலைப் போராட்டமே.
மூன்றும் உலக நாடுகளோ, முன்னைய சோசலிச நாடுகளோ முதலாளித்துவ நாடுகள் அல்ல. அங்கு தேசிய இன முரண்பாடும், நவகாலனிக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டமாகவே பரிணமிக்கின்றது. இங்கு ஏகாதிபத்திய அடக்கு முறைக்கு எதிராக தேசிய வாதம் எழுவது இயல்பானதே. தேசத்தின் சுதந்திரத்தை மார்க்சிஸ்டுக்கள் கோருவர்.

இதைவிட பிரதான ஏகாதிபத்தியத்திற்கும் இரண்டாம் நிலையில் உள்ள நாட்டுக்கும் இடையில் கூட தேசிய முரண்பாடு இருக்கும். அமெரிக்கா ஒழுங்கு முறைக்கு எதிராக பிரான்ஸ், ...... போன்ற நாட்டுமக்கள் தேசிய உணர்வை கொண்டிருப்பர் இதை மார்க்சியம் அங்கீகரிக்கின்றது. அதற்காகவும் போராடுகின்றது.

"........ இன்றும் கூட உலகெங்கும் தேசியமே பிரதான போக்காகி புரட்சியாளருக்கே சவாலாக நிற்கின்றது." என்று கட்டுரை தொடர்கின்றது. இங்கு புரட்சிக்கு எதிராக தேசியத்தை நிறுத்தி இரண்டு வேறுவேறு ஆனதாக காட்டி திரிபை நியாயப் படுத்த முயன்றுள்ளார். வர்க்கப் போராட்டம் என்பது அனைத்து முரண்பாடுகளையும் உள்ளடக்கியதே. சில இடத்தில் பிரதான முரண்பாடாக தேசிய இன முரண்பாடும் வேறு இடத்தில் வர்க்க முரண்பாடும் என இருக்க முடியும். ஆனால் எல்லாம் இறுதியில் வர்க்கப் போராட்டத்தில் தான் தீர்வைப் பெறமுடியும். சமுதாயத்தில் தேசிய முரண்பாடு மட்டும் வானத்தில் இருந்து விழுந்து விடுவதில்லை. மாறாக சமுதாயத்தில் பொருளாதார அடிப்படையில் எழும் ஒரு முரண்பாடே. பொருளாதார அடிப்படையில் உருவான தேசிய முரண்பாடு வர்க்கப் போராட்டத்தில் மட்டுமே தீர்வை பெறமுடியும். மாறாக வேறு எந்த வழியிலும் பெற முடியாது. முரண்பாடும் அதன் தீர்வும் வர்க்கப் போராட்டத்துக்கு உட்பட்டதே. எந்த புரட்சியாளருக்கும் எல்லா முரண்பாடு போல் இதையும் கையாளும் ஒரு விடையமே.

"தேசத்தை மேற்கட்டுமானங்களின் ஒன்றாக கருதி அடிப்படையிலான உற்பத்தி முறையிலான [illegible] விடும் அல்லது பொருளாதாரக் காரணிகளே தீர்மானிப்பதாக குறைத்து மதிப்பிடுவதும் வெறும் யாந்திரிகமான கருத்துகளாகும். இவை பொருளாதா வாதத்தின் அப்பாற்பட்டவையுமாகும். இது தேசியத்தின் சார்பளவிலான சுயாதீனப் பண்பை அதன் அரசியல் அம்சத்தை, வரலாற்றை, ஏன் அடிப்படையான சமூக யதார்த்தத்தையே மறுக்கும் போக்காகும்.

தேசம் என்பது வெறும் மேற் கட்டுமானமல்ல. மொழி போன்றே தேசமும் அடித்தளக் கட்டுமானத்தின் ஒரு பகுதியாகும். ஈழத்தில் தேசியமானது எரியும் பிரச்சனையாக இருக்கும் போது சர்வதேசியம் என்ன சொல்கிறது என்பது முதன்மையானது அல்ல. இங்கு சர்வதேசியம் தான் மேல் கட்டுமானத்தைச் சேர்ந்ததாகும். அதனால் தான் வரலாற்றில் அலை கலபமாக தூக்கி எறியப்பட்டன.

தேசம் மேற்கட்டுமானங்களில் ஒன்றானதால் வரலாற்றில் நிரந்தரமில்லாத தற்காலிகமான ஒரு வகையினைச் சேர்ந்ததாகும் என்று மார்க்சியம் கொண்டிருந்த நம்பிக்கையானது மானுடத்தின் மானுடவியல் கூறுகளை, இயல்பான போக்குகளை மறுதலித்ததொன்றாகும். தேசம் என்பது வரலாற்றில் நிரந்தரமற்றது என்பது ஒருவகையில் உண்மையானதே என்ற போதிலும் இன்னோர் வகையில் இந்தக்கூற்றானது பொய்யானதுங் கூட என மார்க்சியத்தை குழிதோண்டி புதைக்க முயன்றுள்ளனர். மார்க்சியத்தை வரலாறு தூக்கி எறிந்து விட்டது என கூறி தமது முதலாளித்துவ கோட்பாட்டை உயர்த்து கின்றனர். அதனால் தான் ஈழத்தில் தேசியத்தை ஆராயும் போது சர்வதேசியம் என்ன சொல்கிறது என்பது முதன்மையானது அல்ல என்கின்றார்கள். அதாவது முதலாளித்துவ வாதிகளே சர்வதேசியத்தை தூக்கி எறிபவர்கள்.
வரலாற்றில் மார்க்சியம் தூக்கி எறியப்பட்டது என்பது முழுப் பூசணிக்காயை சேற்றில் மறைக்க முயலும் நாடகமே. வரலாறு மீண்டும் மீண்டும் மார்க்சியத்தை உயர்த்துவதுடன் உயிர்வாழ்வதும் அதுவே. புரட்சியின் தத்துவமாக இன்று வீறு நடை போடுகிறது.

மார்க்சியம் தோற்று விட்டது எனக் கூறி மார்க்சிய லெனினிய, மாவோ சிந்தனையை குழி தோண்டி புதைக்க முயல்கின்றனர். ஆனால் மார்க்சியத்தை உச்சசித்தபடி உள்ள இவ் முதலாளித்துவ வாதிகள் என்ன தான் மார்க்சியத்தை திரித்து புரட்டினாலும் மார்க்சியம் உயிர்வாழ்வது தவிர்க்க முடியாது. ஏன் எனின் இன்று உலகில் உள்ள ஒரே ஒரு சமூக விஞ்ஞானமாகும்
சோவியத்,சீனா தோல்விகள் மார்க்சியத்தின் தோல்வியல்ல. மாறாக மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட படி (இதை கரிகாலனின் கட்டுரையில் பார்க்கவும்) திரிபு வாதிகள் மார்க்சியத்தை உச்சரித்த படி முதலாளித்துவத்தை மார்க்சியத்தின் மீது நிறுவினர். இதை மார்க்சியம் தோற்றது என அதே திரிபு வாதிகள் உடன் (குருசேவ்-டெங் கும்பல்) கூட்டுச் சேர்ந்து கத்துவதால் மார்க்சியம் மரணித்து விடாது.

தேசியம் என்பது மேல்கட்டுமானமே. தேசியத்தின் எழுச்சி அடிக்கட்டுமான பொருளாதாரத்தில் எழுவதே. எந்த தேசிய போராட்டமும் அடிப்படை பொருளாதாரத்தில் இருந்தே எழுகிறது. சோவியத்தில் சோசலிசப் புரட்சி அடிக்கட்டுமான பொருளாதர தீர்வை தீர்க்கும் போது தேசியம் மறைந்து விட்டது. மீண்டும் சோவியத்தில் முதலாளித்துவ மீட்சி அடிக்கட்டுமான பொருளாதாரத்தை தகர்த்த போது மீண்டும் தேசிய போராட்டம் எழுகின்றது.

தேசியம் என்பது வரலாற்றில் நிரந்தரம் மற்றது என கட்டுரையாளர் ஏற்று அதை தலைகீழாக புரட்டி நிரந்தரமானது என குத்துக்கரணத்தை அடிக்கின்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒரு வித புரட்டலே. ஒன்றில் உண்மை எனின் அது பொய்யாக இருக்காது. இரண்டும் இருக்க முடியாது. இதுவே இக்கட்டுரை முழுக்க கையாண்டுள்ளார்.

தேசத்துக்கு சார்பளவிலான சுயாதீனம் என்பது என்ன? சுயாதீனம் என்பது எப்போதும் வர்க்கம் சார்ந்ததே. இன்றைய வர்க்க சமுதாயத்தில் சுயாதீனமானது எதுவும் கிடையாது. எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது. அது ஒவ்வொரு சடப்பொருளுக்கும் பொருந்தும். இதுபோல் மானுடத்தின் மானுடவியல் கூறுகளை இயல்பான கூறுகளை என்பதில் இயல்பான போக்குகளை என்பது என்ன? இயல்பான போக்கு என்று ஒன்று கிடையாது. எல்லாம் ஒன்றுடன் ஒன்று சம்மந்தப்பட்டது. ஒரு மனிதன் அவனின் சிந்தனை, இயக்கம், .... என அனைத்தும் சமூகம் அதை ஒட்டிய கருத்து சார்ந்ததே.

ஒரு மனிதன் தேசியத்தை கோருவானாயின் அவன் அத்தேசியத்தின் மீது பொருள் சார்ந்த தேவையை கொண்டதே. இது வேண்டும் எனின் இக்கட்டுரையாளருக்கும் பொருந்தும். இது புலிக்கும் பொருந்தும்.

ஒரு தேசியத்தின் வரலாறு என்பது வர்க்கம் சார்ந்த பொருள் சார்ந்ததே. வரலாறு கடந்து வந்த போது அங்கு வாழ்வுக்கான போராட்டத்தைக் கொண்டதாகவே எப்போதும் இருந்துள்ளது. அங்கு அப் போராட்டங்கள் பொருள் சார்ந்ததாக இருந்ததுடன் சரண்டப்படுவதும், சுரண்டுபவர்களின் வரலாறுகளும் இருந்துள்ளது. சமூகயதார்த்தத்தை மறுக்கும் போக்கும் என்பது என்ன? சமூகம் அதன் இயல்பு அதன் போக்கும் ஒரு பொருளாதார அமைப்பைக் கொண்டதே. அங்கு வெளிப்படும் அனைத்து செயற்பாடும், இருப்பும் எந்த சமூக அமைப்பு உள்ளதோ அது சார்ந்த வர்க்க இருப்பை பேணுவதாகவே இருக்கும்.

மார்க்சியத்தை மேற்கட்டுமானம் எனக் கூறி தேசியத்தை அடிக்கட்டுமானம் எனக்கூறுவது இயல்பில் புலிகளின் செயற்பாட்டை நியாயப்படுத்துகிறது. புலியின் தேசியம் அடிக்கட்டுமானமாகவும் சர்வதேசிய வாதிகளின் தேசியம் மேற்கட்டுமானமாகவும் கூறிய, "சர்வதேசியம் என்ன சொல்கின்றது என்பது முதன்மையானதல்ல" என்கின்றனர். பின் தாம் மார்க்சியத்தை திருத்துவதாக பிதற்றுவது முதலாளித்துவத்தை நிலைநாட்டவே. இக்கருத்தை ஒத்த கரிகாலன் புலிகளை வர்க்கம் இல்லை என்கின்றார். ஏனெனில் வர்க்கமற்ற சக்திகள் ஆட்சியை அமைக்கக் கோருகிறர் புதிய கட்டுரை ஊடாக. அதாவது கட்சி அரசு அமைக்கக் கூடாதாம். எல்லாம் முதலாளித்துவத்தை பாதுகாக்க மார்க்சியத்தை உச்சரித்தப்படி வெளிவரும் திரிபுவாதங்களே.

தேசமானது எப்போதும் பொருளாதாரக் காரணியால் தான் தீர்மானிக்கப் படுகிறது. அப் பொருளாதாரக் காரணியின் தோற்றுவாயாக உள்ளவை நிறம், மதம், கலாச்சாரம், மொழி, .... ஆகும். இலங்கை தேசிய இனமுரண்பாடு என்பது மக்களுக்கிடையில் வர்க்கமுரண்பாடாகும், அதன் கூர்மையை தடுக்கவே அரசு திட்டமிட்டு இனமுரண்பாட்டை மொழிரீதியாக முன்வைக்கின்றன. அது தரப்படுத்தல், நிலப்பறிப்பு, .... என அனைத்துவழிகளிலும் வெளிப்பட்டது. ஈழப்போராட்டத்தின் தோற்றம் பொருள்சார்ந்த வர்க்கப்போராட்டத்தில் தான் எழுந்தது. பொருளாதாரத்தின் அடிப்படையில் எழுந்த தோற்றுவாய்களே நிறம், மதம், இனம், ... என அனைத்தும்.

"........ மாற முடியாத அம்சமான கலாச்சார ஒழுங்கமைவானது ஒரு பூச்சியப் புள்ளியில் இருந்து தொடங்குகிறது. இந்த தொடக்கப் புள்ளி சடங்குகள் சம்பிரதாயங்கள் போன்றவற்றை திரும்பத் திரும்ப செய்வதற்கு வழி விடுவதால், இந்த காலம் மீள முடியாததாகிறது. இது வரலாற்றில்

பழங்குடிகள் தொடக்கம் தேசம் வளர்ந்து இன்றும் இன்னும் புதிய தொழில்நுட்ப வளர்ச்சியுடன் வளர்ந்து கொண்டே போகும் அம்சமாக உள்ளதே ஒழிய தேய்ந்து போகும் அம்சமாக இல்லை.

இப்படியாக மானுடத்தில் பதித்துவிடும் அம்சங்கள் தேசியத்திற்கான ஒரு அர்த்தத்தைத் தருகிறது. இது போன்ற இயற்கையான மானுடவியல் அம்சங்களை விளங்குவதற்கு குறுகிய மார்க்சியப் பார்வையில் இடமில்லை. வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தில் நாங்கள் என்ன உற்பத்தி செய்கிறேம் எதனை சிருஷ்டிக்கிறேம் என்று அறியாமலே ஒழிய நாங்கள் எவற்றை தீர்மானிக்க முடியாது என்று அறியவோ எவற்றால் உருவாக்கப் படுகிறேம் என்று அறியவோ வழியில்லை" என கட்டுரை தொடர்கிறது. இவ்விடத்தில் தான் மேல் விவாதத்தை விட சிறப்பாக தங்களை இனம் காட்டுகின்றனர். ஆனால் உயிர்ப்பு இதை சாதாரணமாக தட்டிக்கழிக்க முடியாது எனக் கூறி தோள்களில் கையைப்போட்ட படி ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக எம்மை தாக்கி தமது வர்க்க தன்மையை காட்டிவிடுகின்றனர்.

வரலாற்றை தவிடுபொடியாக்கிய மார்க்சியத்தை உச்சரித்த போலிகளின் முகமூடியின் பின் ஒளித்திருப்பது எந்த வர்க்கம் என்பதைப் பார்ப்போம். பொருள்முதல்வாதம் ஊடாக நாங்கள் எவற்றை தீர்மானிக்க முடியாது என்று அறியவோ, எவற்றால் உருவாக்கப் படுகிறேம் என்று அறியவோ வழியில்லை என்பதன் ஊடாக கருத்து முதல் வாதம் மூலம் அதாவது கடவுளே எல்லாம் படைக்கிறர் அவரே எல்லாம் அறிவார் என வக்காளத்து வாங்குகின்றர்கள் மார்க்சிய முகமூடிகள். அதுதான் வரலாற்றில் கலாச்சாரப் பூச்சியத்தில் இருந்த எந்த சமுதாயத்திலும் தோன்றுவதாகக் பிதற்றி உள்ளனர். கடவுளால் அருளப்பட்ட இப்பூமியும் அதன் செயல்களும் பூச்சியத்தில் இருந்து தோன்றுவது தவிர்க்க முடியாது எனக்கூறி முதலாளித்துவ இருப்பை பாதுகாக்க மார்க்சிய முகமூடிகள் பிராயத்தனம் செய்கின்றனர். உயிர்ப்பு ஆசிரியர் குழுவோ இக்கட்டுரையை போட்டு சாதாரணமாக தட்டிக்கழிக்க முடியாது எனப் போட்டு பின்கட்டுரையில் முக்கியமான பகுதி என கறுப்பால் அடையாளமிட்டு மார்க்சிய சூத்திரத்தில் இருந்து வளர்க்கிறர்களாம். இதை யாருக்கு போய்ச் சொல்லி அழ. உயிர்ப்புக்குமா? மனித வரலாறு என்பது பூமி உருவான நாட்கள் முதல் இருந்தது இல்லை மாறாக மனித இனம் பல லட்சம் ஆண்டுகள் பின்பே உருவானது. மனித இனம் உருவான உடன் கலாச்சாரம் உருவாகி விடவில்லை. அது பல ஆயிரம் வருடங்கள் வெறும் மந்தைக்கூட்டங்களாக வாழ்ந்தனர். இதன் பின் சொத்துரிமையை சமூகம் பேணத்தொடங்கியவுடன் கலாச்சாரம் உருவாகின. மக்கள் தமது சக்திக்கு முடியாதவைகளை கண்டு அவற்றை நோக்கி வழிபட்டனர். இது கூட்டத்துக்குக் கூட்டம் மாறுபட்ட வடிவில் இருந்தது. இது மனித சமுதாய வளர்ச்சியில் பல வழிபாட்டுப் பொருட்கள் இன்று மனிதனால் வெல்லப்பட்டு வரும் போது தகர்க்கத் தொடங்கியது. மனிதனின் கலாச்சாரம் என்பது வழிபாட்டுடன் கூடிய ஆணாதிக்க சமூக உருவாக்கத்துடன் பொருட்களை சொத்தாக மாற்றியதில் இருந்து தொடங்கியது. இன்று பல தகர்ந்துள்ளது. புதிய கலாச்சாரமாக இன்று உள்ள அரசு அமைப்புகளை ஒட்டி காணப்படுகின்றது. ஏகாதிபத்தியம் உள்ள இடத்தில் சீரழிவுக் கலாச்சாரமாக ....... வடிவுகளில் மாறுபடும். கலாச்சாரம் என்பது மாறுபடக் கூடியது. பின்தங்கிய கலாச்சாரம் அடித்து நொருக்கப்பட்டு அழிக்கப்படுகிறது.

மாறமுடியாத அம்சமாக கலாச்சாரம் உள்ளதாம். இது வரலாற்றை புரட்டுவதே. ஆதிகால சமுதாயத்தின் பெண் தலைமையில் இருந்த சமூகம் இன்று ஆணாதிக்க சமூகமாக மாறியுள்ளது. இது கலாச்சார மாற்றம் இல்லை என்கின்றர். இங்கு இவர்கள்

சமூகத்தையே. அதுதான் கலாச்சார மாற்றம் இல்லையாம். சமூகம் உருவான முதல் ஆணாதிக்க சமூகம் தொடர்ந்து உள்ளதாம். அது இன்று மாற்ற முடியாது. பெண்களே வாயை மூடுங்கள். இதுவே கட்டுரை. இதுவே உயிர்ப்பின் மார்க்சிய ஆய்வுக்கான தட்டிக்கழிக்க முடியாத விடையம்.

முதலாளித்துவ சமூகத்துக்கு முன் இருந்த நிலப்பிரபுத்துவ சமூகம் தகர்ந்த நாடுகளில் நிலப்பிரபுத்துவ கலாச்சாரம் நிலவுகின்றதா? இது அல்ல கட்டுரையாளர்களின் வாதம். மாறாக முதலாளித்துவ கலாச்சாரம் மாறமுடியாது பாட்டாளிகளே முதலாளிக்குக் கீழ் கைகட்டி வேலை பாருங்கள். எந்த ஏகாதிபத்தியமுங்களுக்கு பணம் தந்தது? இப்படிக் கூற.

யாழ்ப்பாணத்தில் கடந்த தலைமுறையில் தாழ்த்தப் பட்ட மக்கள் வீதியில் செல்லும் போது உயர் சாதியைச் சேர்ந்த ஒருவர் வரின் கைகட்டி நிற்க வேண்டும். இது கட்டுரையாளரின் மாறாத கலாச்சாரம். இதுவல்ல இவர்களின் வாதம். மாறாக இன்று உள்ள சாதி ஒடுக்கு முறையை மறந்து இப்படியே இருங்கள் என்றதன் ஊடாக இந்த சமூக அமைப்பையும் கலாச்சாரமு மாறாது எனக் கூறி தேசியத்தின் மீது விவாதிக்கின்றனர்.

இவரின் தேசியவாதம் வர்க்கப் போராட்டத்தை நிராகரிக்க இச்சமூக அமைப்பை நிலைநிறுத்த கலாச்சாரம் மாறாது எனக்கூறி பூச்சியத்தில் இருந்து தொடங்குவதாக பிதற்ற உயிர்ப்பு சாதாரணமாக தட்டிக்கழிகக முடியாது எனக் கூறினர். அதே நேரம் கறுப்பால் முக்கியமானது என உயிர்ப்பு அடையாளம் மிடுகின்றனர். மார்க்சியத்தை செழுமைப் படுத்துகின்றதாம் இக்கட்டுரை. பாவம் உயிர்ப்பு கட்டுரையாளர் அம்பலப் பட்டதை விட உயிர்ப்பு சேர்ந்து புதைகுழிக்குள் போகின்றனர் அவ்வளவே.

பொருள்முதல் வாதம் எவற்றை நிர்ணயிக்க முடியும், அத்துடன் எவற்றால் உருவாக்கப் படுகின்றது என்பதையும் அறிய முடியும். மனிதனின் தோற்றம் உயிர் வாழ்வு என அனைத்தையும் பொருள்முதல் வாதம் விளக்கியுள்ளது. அத்துடன் நாம் உற்பத்தியை எவ்வளவு என தீர்மானிக்க முடியும் அதுபோல் அவ் உற்பத்தி எவ் மூலப் பொருள்களினால் உருவாக்கப் படுகிறது என பொருள் முதல் வாதம் விளக்கும். எல்லாப் பொருளுக்கும், எல்லாக் கருத்துக்கும் இப் பொருள் முதல் வாதம் விளக்குவதுடன் தீர்மானிக்கவும், உருவாக்கவும், அழிக்கவும், ...... முடியும்.

உலகில் எழும் அனைத்து முரண்பாடும் பொருளாதார அடிப்படையில் இருந்தே உருவாகின்றன. இதன் வெளிப்பாடுகள் நாட்டுக்கு நாடு பிரதேசத்துக்கு பிரதேசம் மாறுபடும். இவ்மாறுபட்ட நிலைமைகளைக் கையாள நாட்டுக்கு நாடு பிரதேசத்துக்கு பிரதேசம், வேறுபட்ட யுத்த தந்திரத்தை கையாளவேண்டும். ஆனால் அனைத்தும் ஒன்றிணைக்க பொருளாதார இருப்பின் மீது இணைத்து நாட்டுக்குள்ளும் சர்வதேசிய ரீதியிலும் இணைக்க வேண்டும். அப்போதே புரட்சி நடைபெறும். முரண்பாடுகள் உலகில் ஒரேமாதிரி தோன்றுவதில்லை. அது தேசிய இன முரண்பாடு, வர்க்க முரண்பாடு .... என பலவாக இருக்கலாம். ஆனால் அதன் குவியமையம் எப்போதும் வர்க்கப் போராட்டமே. அங்குதான் தீர்வு பெறப்படும். ஒரு தேசம் பிற்போக்குத் தலைமையில் உருவாகின் மீண்டும் அங்கு போராட்டம் உருவாகின்றது. இவை எல்லாம் வர்க்கப் போராட்டமும் அதன் தீர்வையும் மீண்டும் மீண்டும் நிறுவுகின்றது.

கட்டுரையாளர் குறிப்பிடுகிறர் புராதன கொம்யூனிசம், அடிமை உடமை சமுதாயம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், சோசலிசம் போன்ற இந்த வகையான உற்பத்தி முறையூடாகவே வரும் என்பது கற்பனை வாதமாம். எவ்வளவு வேடிக்கையான வாதம் மட்டுமின்றி சோசலிசம்

கொம்யூனிசம், அடிமை உடமை சமுதாயம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் எல்லா நாட்டிலும் இந்நான்கும் உருவாகின. மூன்றும் உலக நாடுகளைப் பொறுத்த வரையில் முதலாளித்துவம் தரகு முதலாளித்துவத்தால் பிரதியிடப்பட்டு உள்ளது. கட்டுரையாளர் இவ் ஒழுங்கு கற்பனை ஆனது என்றதன் ஊடாக சோசலிசம் உருவாகாது எனக் கூறி முதலாளித்துவமே நிலையானது என வாதிட முற்பட்டுள்ளார். அது தான் கலாச்சாரப் பூச்சியத்தில் உள்ளதாம் முதலாளித்துவ கலாச்சாரம் நிலையான மாறாத தன்மை கொண்டதாம். ஆகவே கம்யூனிஸ்டுக்களே வாய்களை மூடுங்கள் என்கின்றர்.

மூன்றும் உலக நாடுகளில் தரகு முதலாளித்துவ வர்க்கம் தேசிய முதலாளித்துவத்தை உருவாக்க தடையாக உள்ளது. அவ் முரண்பாட்டையும் கடக்க அவ்நாடுகளில் புதிய ஜனநாயகப் புரட்சியின் ஊடாக முதலாளித்துவம், சோசலிசம் இரண்டையும் ஒரே புரட்சியாக இணைத்து நடாத்தப் படுகின்றது.

"....... வரலாறானது சீராக ஒழுங்கமைவாக முன்னேறுவதாகவும் கொள்வதானது தேசிய, கலாச்சார வேறுபாடுகளை குறைத்து மதிப்பிடுவதாகும்.

உண்மையில் இது முதலாளித்துவ ஆய்வு வகையைச் சேர்ந்ததாகும். மார்க்சியத்தில் தோன்றியுள்ள இந்தப் போக்கானது மேற்குலகின் மறுமலர்ச்சி கால மரபில் வேரூன்றியதாகும். இறுதியில் தேசிய வேறுபாடுகளின் குறிப்பான தனித்தன்மைகளை அழித்து சர்வதேசிய சோசலிசக் குடியரசை அமைக்க முடியும் என்ற லெனினிசத்தின் விநோதத்திற்கு இட்டுச் சென்றது

மறுமலர்ச்சிக்கால "பகுத்தறிவுவாத" மரபானது உணர்வுகள், ஆசைகள் போன்ற மாறுபட்ட அடிப்படைகளை மறுத்ததுடன் சுபாவமான அறிவு உள்ளுணர்வான அறிவு செல்லத் தகாததாக்கியது. இங்குதேசியமானது சுபாவமாகும். சர்வ தேசியமானது மனச்சாட்சியாகும். எப்போதும் தேசிய சுபாவம் சர்வதேசிய மனச்சாட்சியுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் ஆனால் தேசியத்திற்கே மக்கள் சக்தி அதிகம் உண்டு.

மறுமலர்ச்சிக்கால பகுத்தறிவு வாத மரபானது மார்க்சியத்தினுள்ளேயே தொடர்ந்து செல்வாக்கு செலுத்தி வந்ததான தேசியம் தொடர்பான பலதவறான நிலைப்பாட்டிற்கு காரண மாகியுள்ளது. சர்வதேசியத்தின் பேரால் ஐரோப்பாவை மையப்படுத்திய கருத்துக்கள் ஒருபுறம், ரஷ்சிய பெருந் தேசிய வாதக் கருத்துக்கள் மறுபுறம் வெளிப்பட்டதை மார்க்சியத்தின் வரலாற்றில் காணமுடியும்." என கட்டுரையாளர் தொடர்கின்றனர். எந்த ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளாக உள்ளீர்கள். ஏன் எனில் ஏகாதிபத்தியம் அலறும் கம்யூனிச அபாயம் சொல்வதை நீங்களும் வாந்தி எடுத்து கம்யூனிச அபாயத்தில் இருந்து தேசியங்களை மீட்க முயற்சிக்கின்றீர்கள்.

"மறுமலர்ச்சிக் காலம்" என்பது மார்க்ஸ், ஏங்கல்ஸ் காலகட்டமே. அக்காலத்திலேயே கருத்துமுதல் வாதக் கோட்பாடு பொருள்முதல் வாதக் கோட்பாட்டால் அடித்து நொருக்கப் பட்டது. அக்காலத்தில் தான் மார்க்சியம் ஒரு விஞ்ஞானமாக நிறுவப்பட்டது. இதனால் தான் அக்காலத்தை மரபானது எனவும், கூக்குரல் இட்டு மார்க்சியம் மீது சேறு அடிப்பு நிகழ்த்த முயல்கின்றனர். பகுத்தறிவுக்கு எதிரான கோட்பாடு கடவுள் உள்ளது என்பதே. பகுத்தறிவாளர்கள் கடவுள் இல்லை என்பதை நிறுவி அதற்கு எதிராக போராடியவர்கள். இக்கட்டுரையாளரும், சாதாரணமாக தட்டிக் கழிக்க முடியாத உயிர்ப்பும் மீண்டும் நிறுவ நினைப்பது பகுத்தறிவு கோட்டை இல்லாது ஒழிப்பதே. அதன் ஊடாக மார்க்சியத்தை அழிப்பதே.

www.tamilarangam.net



உலகில் உருவான முதல் சோசலிச நாடும், அது உலகப் புரட்சிக்கு அரைகூவல் இட்டது. இது கண்டு கம்யூனிஸ பூச்சாண்டி காட்டிய ஏகாதிபத்தியத்துடன் இணைந்து கட்டுரையாளர்கள் கூறுகின்றனர் சர்வதேச சோவியத் குடியரசை நிறுவ முயல்வதாக. அதுதான் தேசியத்தை காப்பாற்ற முயல்கின்றனராம். அதாவது கம்யூனிசம் உலகில் எல்லா நாடுகளிலும் இருப்பின் தமக்கிடையில் எல்லைகளை ஒழித்து மனிதர்களை மனிதர்களாக மதிப்பர். தேசம் என்று ஒன்று இல்லாது போய்விடும். புராதன கம்யூனிச சமுதாயத்தில் எப்படி தேசங்கள் இருக்க வில்லையோ அதுபோல் உருவாகும். எல்லைச் சண்டை இருக்காது அப்போது எப்படி தேசியம் எழும்.

ஆனால் தேசியத்தை எழுப்பி சுரண்ட நினைக்கும் இவ் முதலாளித்துவ வாதிகள் கூறுகின்றனர் மாறுபட்ட உணர்வுகள், ஆசைகளை மாக்சியம் நிராகரிக்கின்றதாம். ஆசை, உணர்வுகள் வர்க்கம் சார்ந்தவை. இவ் முதலாளித்துவ கட்டுரையாளரின் ஆசை உணர்வுகள் என்ன எனின் உழையாது சும்மா இருக்க சுரண்டிக் கொழுப்பது, மாடமாளிகைகளில் தாம் மட்டும் வாழ்வது, மற்றவர்களை அடக்கி ஒடுக்கி வாழ்வது, ஆபாச களியாட்டங்களை நடாத்துவது, .... என்பனவே. ஆனால் மார்க்சிஸ்ட்டுக்களின் உணர்வுகள், ஆசைகள் எல்லோரும் உழைத்தல், தேவைக்கு ஏற்ப எடுத்தல், சமூக கலாச்சாரத்தை வளர்த்தல் ........ என்பனவே. மனித உணர்வுகள் ஆசைகள் வர்க்கம் சார்ந்தது இதை மார்க்சியம் அங்கீகரிக்கின்றது. நீங்கள் தேசியம் எனக்கூறி சோசலிச சமூகம் உருவாவதற்கு எதிராக நின்று கோருவது சுரண்டல் அடிப்படையும் அதன் ஆசைகளையும், உணர்வுகளையுமே.

தேசிய சுபாபம் என்பது ஒவ்வோரு வர்க்கத்திற்கும் வேறு பட்டது. சுரண்டல் காரணிகளின் சுபாபம் சுரண்டுவதாகவே இருக்கும். இதுவே உங்களின் உணர்வும் கூட. இது உங்களின் நிலையுங் கூட. உங்கள் மனச்சாட்சிக்கு மட்டும் இன்றி நேரடியாகவும் சர்வ தேசியத்துடன் மோதுவீர்கள். ஏனெனின் உங்கள் வர்க்க குணம் அது. ஆனால் நீங்கள் நினைப்பது போல் தேசியம் வெற்றி பெற முடியாது. மாறாக சர்வதேசியமே வெற்றி பெறும். ஏனெனில் உங்கள் தேசியம் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டது என்பதுதான்.

உலகில் கம்யூனிசக் கருத்துக்கலின் ஆதிக்கத்தை ரஸ்சியா பெரும் தேசியமாக திரித்துப்பிரட்டி கம்யூனிசத்தை ஆக்கிரமிப்பாக ஏகாதிபத்தியத்துடன் இணைந்து கூக்குரல் இடுகின்றனர். இதில் இருந்தே சர்வதேச சோசலிசக் குடியரசை அமைக்க முனைவதாக அழுகின்றீர்கள். கம்யூனிச அபாயம் எந்த வர்க்க இருப்பை தகர்க்கின்றது என்பது யாரும் அறிந்ததே. உங்களின் வர்க்க இருப்பை கம்யூனிசத்தின் ஊடாக நாம் தகர்ப்போம் என்பதை மறந்து விடாதீர்கள்.

வரலாறு உங்களைப் போன்ற சுரண்டல்- பேர் வழிகளையும் உங்கள் அரசு அமைப்பையும் காப்பாற்ற முனையும் உங்கள் கோட்பாட்டையும் அடித்து நொருக்கும் என்பதை நினைவில் வைத்திருங்கள். லெனினிசம் என்பது மார்க்சியம். அதுவே உலகை மாற்றும் ஒரு தத்துவம். மார்க்சியத்தின் பேரால் செய்யும் எந்தப் புரட்டலும் நிர்வாணம் ஆனதே. மார்க்சியத்தின் பேரால் திரிபுகள், மார்க்சியத்தை வரட்டுச்சூத்திரம் என்று கூக்குரல் இடின் அது நகைப்பிற்குரியதே.

இவைகளை எல்லாம் உயிர்ப்பு "கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த வார்த்தைகளும் அதிக நேரத்திற்கு பயன்படாது." எனக் கூறி மார்க்சியம் கட்டிக் கொடுத்த சோறு என காட்டி இது அதிக நேரம் பயன்படாது எனக் கூறி மார்க்சியத்தை புதைக்க முயன்றுள்ளனர். முடியுமா? பாவம் உயிர்ப்பு.

உயிர்ப்பில் குறிப்பிடுகின்றனர் "மார்க்சியம் என்பது

மார்க்சிய முன்னோடிகளது, ஆசான்களது ஒரு சில படைப்புக்களே என்று குறிக்கிக் கொள்ளாமல் ........" என்றதன் ஊடாக மார்க்சிய விரோத முதலாளித்துவக் கருத்துக்களை உயர்த்துகின்றனர். மார்க்சியம் என்பது மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனையே. அதற்கு அப்பால் உள்ளவை மார்க்சியம் அல்ல. அவை முதலாளித்துவக் கோட்பாடே. முடியுமா உங்களால் மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனைக்கு அப்பால் உள்ளவை மார்க்சியம் என நிறுவ?

"ஸ்லாவிக் தேசங்கள வரலாறற்ற தேசங்கள் என எங்கெல்ஸ் எழுதியபோது ஆசிய மக்களை காட்டு மிராண்டிகள் என மார்க்ஸ் குறிப்பிட்ட போது தேசியம் தொடர்பான தவறன கருத்துக்கள் மார்க்சிய மூலவர்களிடமும் ......" என கட்டுரையாளர்கள் மூலவர்கள் மீது சேறு அடிப்பை தொடர்கின்றனர். சில தேசிய இனங்கள் வரலாறு இல்லாமல் உருவானவையே. அவ் தேசிய இனம் உருவான இருக்கின்ற பிரதேசத்தில் வரலாற்றை கொண்டவர்கள் அல்ல. இந்தவகையில் இலங்கை முஸ்லீம் மக்கள் வரலாற்றை கொண்டவர்கள் அல்ல. மாறாக மதம் மாறி அதன் ஊடாக ஒரு தேசிய இனமாக மதம் சார்ந்த கலாச்சாரத்தின் ஊடாக தம்மை இனம் காட்டினர். ஏங்கல்ஸ் ஸ்லாவிக் தேசிய இனம் இல்லை என விளக்க எடுத்த கோள்களை கட்டுரையாளர் குறிப்பிட வில்லை. மார்க்ஸ் ஆசிய மக்களின் சில குழுஉம்சங்களை காட்டுமிராண்டி சமூகத்துடன் ஒப்பிட்டாரே ஒழிய மொத்த சமூகத்தை அல்ல. மார்க்ஸ் இந்தியாப் புரட்சி தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டார். இக்கட்டுரையாளர்கள் மார்க்ஸ், ஏங்கல்சை பிழையாக காட்ட அவர்களின் கருத்துக்களை திரித்துப் புரட்டி தேசியத்தை பிழையாகப் பார்த்ததாக பிதற்றி உள்ளனர்.

"சர்வதேச பாட்டாளிவர்க்க புரட்சியின் பெயரால் பகுதிப் போராட்டங்களால் தேசிய எழுச்சிகளை புறக்கணிப்பதானது அதாவது சர்வ சர்வதேசியத்தின் பேரால் தேசியம் தியாகம் பண்ணப்பட வேண்டும் ........" என கட்டுரையாளர்கள் சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட தேசியத்தை கோருகின்றனர். சர்வதேச பாட்டாளிவர்க்கம் பகுதிப் போராட்டங்களை நிராகரிக்கின்றதாம். எவ்வளவு வேடிக்கையான புரட்டல்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சி அந்தரத்தில் இருந்து இறைவனால் உருவாக்கப் படுவது இல்லை. மாறாக தீர்மானிக்கப்பட்டு உருவாக்கப் படுபவையே. பாட்டாளி வர்க்கம் தனக்கான திட்டத்தை உருவாக்கி திட்டமிட்டு தீர்மானித்து செயல்படுகின்றது. அந்த வகையில் அனைத்து பகுதிப் போராட்டத்தையும் தனது கையில் எடுக்கின்றது. பெண்விடுதலை, சாதிஒடுக்குமுறை, தேசிய இன முரண்பாடு, கூலிப் போராட்டம், மாணவ போராட்டம், நிலப்பறிப்பு ...... என அனைத்துப் பகுதிப் போராட்டத்தின் மொத்த விளைவே சோசலிசம்.

ஆனால் இக்கட்டுரையாளர் தேசியத்தின் பேரால் கோரநினைப்பது பாட்டாளிகள் அல்லாத தேசிய விடுதலையை. அப்போதே உங்களால் சுதந்திரமாக சுரண்ட முடியும் அப்போதே உங்கள் ஆசைகளை, உணர்வுகளை ஒடுக்கப்பட்ட மக்கள் மீது நிறுவ முடியும் அல்லவா?

தேசிய விடுதலைப் போராட்டங்களை பாட்டாளி வர்க்கம் பகுதிப் போராட்டமாக ஏற்கிறது, அங்கீகரிக்கின்றது. அதற்காகவும் போராடுகின்றது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாட்டாளிகள் பங்கு கொள்ளக் கூடாதா? அப்படியாயின் உங்களுக்கு கைகட்டி சேவகம் செய்ய வேண்டுமா? இதைப் பாட்டாளிகள் ஒருக்காலும் அங்கீகரிக்க மாட்டார்கள். பாட்டாளிகள் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் தமது திட்டத்தில் இணைக்கின்றனர். அதற்கான தீர்வையும்

"மார்க்ஸ்சம், ஏங்கல்ஸ்சம் செக், குரோசியா, தெற்கு ஸ்லாவியா போன்ற தேசங்களது எழுச்சிகளை சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் பேரில் மறுத்திருந்தனர். இரண்டாம் உலக யுத்தத்தை அடுத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அமைந்த அனைத்து சோசலிச அரசுகளும் ரஸ்சிய பெருந் தேசிய வாதத்தின் அடிப்படையிலேயே அமைந்தன. 1956 இல் கங்கேரியிலும் 1960 இல் செக்கஸ்லாவாக்கியாவிலும் எழுச்சிகள் ரஸ்சியப் பெருந்தேசியத்திற்கு எதிரானவையே. இந்த எழுச்சிகள் மொஸ்கோ சோசலிசத்தின் பேரால் நசுக்கிய போதும் .......

இன்றைய கிழக்கு ஐரோப்பாவின் எல்லா தேசிய இனங்களும் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்றன. அப்படியாயின் இத்தனைகால சோசலிச ஆட்சி தேசியப் பிரச்சனையை கையாண்டது தொடர்பாக கேள்வி எழுப்புவதை தவிர்க்கத்தான் முடியுமா? 1989 போலாந்தில் நடைபெற்ற மாற்றங்கள் ரஸ்சியாவிற்கு எதிரான தன்மை கொண்டிருந்ததை என்னவென்பதாம்? இத்தேசிய இனங்களின் போராட்டங்களை குறுகிய மார்க்சியத்தில் எங்கு வைப்பதாம்? ....... தியான்மென் சதுக்கத்தில் மாணவர்கள் மேல் ரதம் ஓட்டிய கம்யூனிஸ தலைமைப் பீடம்" என கட்டுரையாளர் மாக்சியத்தை உச்சரித்த படி மார்க்சியத்தை திருத்துவதாகத் தொடர்கின்றனர். சோவியத்தில் ஸ்டாலினின் மறைவிற்குப் பின்பும் சீனாவில் டெங்கும்பல் ஆட்சியில் ஏறிய பின் அவ் அவ் நாடும் மார்க்சியத்தின் பேரால் திரிபு வாதத்தின் ஊடாக முதலாளித்துவ மீட்சியை ஏற்படுத்தினர். இவை தொடர்பாக இச்சஞ்சிகையில் வரும் கரிகாலனின் கட்டுரையைப் பார்க்கவும். உங்களைப்போல் மார்க்சியத்தை உச்சரித்தபடி முதலாளித்துவ கோட்பாட்டை உயர்த்திய சோவியத், சீனா அதற்கே உரிய முதலாளித்துவ சுரண்டலின் அடிப்படையில் அங்குள்ள தேசிய இனங்களை சுரண்டினர். அதன் ஊடாக அவ் அவ் தேசிய இனங்கள் போராட்டத்தை முன்னெடுத்தன. இவர்களின் போராட்டம் சமூக ஏகாதிபத்தியத்தை பலவீனப் படுத்துவதால் முற்போக்கானது. இதுவே சீனாவிலும் நடைபெற்றது.

இவ் நாடுகளின் ஒடுக்கு முறையும் அதற்கு எதிரான போராட்டமும் முற்போக்காக இருந்த அதே நேரம் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியங்கள் அப்போராட்டத்தை பயன் படுத்தின. ஒடுக்கப்பட்ட தேசிய இனம், மக்களின் போராட்டம் எவ்வளவு முற்போக்காக இருந்த போதும் ஒருபகுதி இன்னும் ஒரு ஏகாதிபத்தியத்தின் கைக்குள் சென்று பிற்போக்காக இருந்தது. போலாந்தில் (CIA), போப்பாண்டவர் நடத்திய கூட்டு மோசடி இன்று வெளிவந்துள்ளது.

கட்டுரையாளர்கள் மார்க்சியத்தின் மீது சேறடிப்பை நிகழ்த்த மார்க்சியத்தை கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டதை கண்டு கொள்ளாது நடித்தபடி, எல்லாம் மார்க்சியம் என சொன்னபடி தாமும் மார்க்சியத்தை கதைப்பதாக மார்க்சியத்தின் பெயரால் முதலாளித்துவ கோட்பாட்டை உயர்த்தி உள்ளார். இவர்களுக்கு கொர்பச்சோவின் தத்துவம் மார்க்சியமே. முதலில் மார்க்சியம் என்பது மார்க்சிய, லெனினிய, மாவோ சிந்தனையே.

ஒரு சோசலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்டமே எப்போதும் பிரதானமானது. இது சில தலைமுறை நீடிக்கும். வர்க்கப் போராட்டத்தை கைவிட்ட சோவியத், சீனா திரிபாகி இன்று எல்லோரும் அறிவதுபோல் (கட்டுரையாளர் தவிர) முதலாளித்துவமாக மாறியுள்ளது. முதலாளித்துவத்திற்கு உரிய தேசிய இன முரண்பாடுகள் ...... என அனைத்தையும் மார்க்சியத்தின் மீது சேறு அடிப்புக்காக பயன்படுத்த நினைக்கும் கட்டுரையாளர்கள் குருசேவ், டெங் கும்பல் வாரிசுகளே.

போட்டுள்ளதால் மார்க்சியம் வளரவில்லையாம். மார்க்சியத்தின் இறுகிய கட்சியமைப்பு விதிகளை நீக்கி கட்சியை எல்லா மக்களின் கட்சி, வர்க்கப் போராட்டம் அற்று விட்டது என 1956 இல் சோவியத்திலும் சீனாவிலும் டெங்கும்பல் கூறி கட்சியின் கதவைத் திறந்தனர். கட்சியின் இறுகிய கட்டமைப்பை உடைத்தனர். அதன் விளைவாக அக்கட்சிகள் திரிபாகி முதலாளித்துவத்தை மீட்டனர். இதை நடைமுறையாக உணர்ந்த மாவோ முன்கூட்டியே கட்சிக்கு எச்சரித்தும் திரிபு வாதிகள் (உங்களைப் போன்றவரக்ள்) இறுகிய கட்சி விதியை திறந்து சீனாவைச் சிதைத்தனர். கட்சி விதிகள் மேலும் மேலும் திருத்தப்பட்டு இறுக்கப்பட வேண்டுமே ஒழிய எல்லா பிழைப்பு, திரிபு வாதிகளுக்கும் திறக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும்.

ஒரு தேசிய இனத்தின் பிரிந்து போகும் உரிமையை அங்கீகரிப்பது என்பது பெருந்தேசிய இனம் எந்தளவிற்கு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றனர் என்பதைப் பொறுத்ததே. அத்துடன் ஒடுக்கப்படும் தேசிய இனம் எந்தளவிற்கு முற்போக்காக இருக்கின்றது என்பதையும் பொறுத்தும் உள்ளது. இரண்டும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

தேசிய இன முரண்பாடு பொருளாதார அடிப்படையில் உள்ள தேசிய இனங்களுக்கு இடையில் சமத்துவமான நிலையை கொண்டுள்ள வரை தேசிய இன முரண்பாடு மறைந்தே இருக்கும். மீண்டும் பொருளாதார அடிப்படையிலான முதலாளித்துவ மீட்சியும் தேசிய சமத்துவ இன்மையும் ஏற்படும் போது மீண்டும் போராட்டங்கள் ஏற்படுகின்றன. அவைகளில் சில தேசிய இன முரண்பாடாக வெளிப்படுகின்றன. வெளிப்பட்டு பிரிந்தவைக்குள் மீண்டும் மோதல். ஏன் எனில் மக்களின் வர்க்க முரண்பாட்டை மறைத்து சுரண்டலை நடாத்த தேசிய இன முரண்பாட்டை முன்தள்ளுகின்றனர். இதுவே முன்னைய சோசலிச நாடுகளில் நடைபெறுகின்றது. இங்கு பிரச்சனையாக உள்ளவை பொருளாதாரமே.

சீக்கிய, கஸ்மீர் பிரச்சனையை ஏகாதிபத்திய சதி என காட்டமுனையும் இடது சாரிகளும் உள்ளனராம் என்றதன் ஊடாக உங்களைப் போன்றவர்களை இடது சாரிகள் என்கின்றீர்கள். நீங்கள் உட்பட போலி இடது சாரிகள் கம்யூனிஸ்டுக்களே கிடையாது. மாறாக மார்க்சிய முலாம் பூசிய அப்பட்டமான கொர்பச்சோவ் போன்ற ஏகாதிபத்திய கைக்கூலிகளே. இடதுசாரிகள் முற்போக்கான ஏகாதிபத்தியத்தை பலவீனப் படுத்தும் அனைத்து தேசிய விடுதலை இயக்கங்களையும் விமர்சனங்களுடன் அங்கீகரிக்கின்றனர். இதை பார்க்க மறுத்து மார்க்சியம் மீது சேறடிக்க மார்க்சியத்தை உச்சரித்த படி நீங்கள் நடாத்தும் விவாதம் முதலாளித்துவக் கோட்பாடே.

ஸ்கொட்லான்ட் விரும்பின் தானாகப் பிரிந்து போகலாம் என முதலாளித்துவ வாதிகள் கூறும் போது சோசலிஸ்டுக்கள் இதில் இயலாது என்கின்றனர். எந்த முதலாளித்துவ அரசு அங்கீகரித்துள்ளனர். ஆனால் மார்க்சியம் அங்கீகரித்துள்ளது. மார்க்ஸ், ஏங்கல்ஸ் அன்றே அங்கீகரித்தனர். பாவம் மார்க்சியத்துக்கு சேறு அடிக்க மாக்சியத்தின் பேரால் முயலும் உங்கள் வாதத்திற்கு மார்க்ஸ், ஏங்கல்ஸ் அன்றே பதில் அளித்துள்ளனர்.

மூன்றாவது உலக நாடுகள் அனைத்தும் தேசம் ஊடாகவே போராட்டம் முன்னெடுக்கப் படுகின்றது. ஏன் எனில் அங்கு காலனி அல்லது நவகாலனி ஆதிக்கம் உள்ளன. அன்னிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டம் தேசியத்துடன் இணைந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியே. பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க புதிய ஜனநாயக புரட்சி வடிவை முன்னெடுக்கனர்.

www.tamilarangam.net



மீண்டும் கரிகாலன் புதிய தலைப்பான "கட்சி-அரசு-சிவில் சமூக நிறுவனங்களுக்கு இடையேயான உறவு" ஊடாக மார்க்சிய விரோதக் கட்டுரையை முன் வைத்துள்ளார். நாம் இவரின் கருத்தை விமர்சிக்கும் அதே நேரம் சரிநிகர் 13,14 ராஜன் என்பவர் எழுதிய இதே கருத்தை ஒட்டிய கட்டுரைக்கும் இது விமர்சனமாகும்.

இவரின் கட்டுரையை விமர்சிக்க முன் இக் கட்டுரையை ஒட்டி மனிதம் ஆசிரியர் குழு வெளியிட்ட கருத்தைப் பார்ப்போம். "சமர் பத்திரிகை மனிதத்தையும் கரிகாலனையும் திரிபுவாதிகள் என்று முத்திரை குத்தியமைக்கு கரிகாலன் எவ்வித பதிலையும் கொடுக்கவில்லை என்பது வாசகர் அறிந்ததே." என்கின்றனர். மனிதம் தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று வாதிட முனையும் அதே நேரம் கரிகாலன் இக்கட்டுரை ஊடாக மனிதத்தின் முகத்தில் அறைந்துள்ளார் அதைப்பார்ப்போம். "...... சிலர் அராஜக வாதம் என்ற முத்திரை குத்தலாம்" என்றதற்கு ஊடாக தனது இக்கருத்தை அராஜகவாதம் என்பதை ஏற்றபடி ஆனால் முத்திரை குத்த வேண்டாம் என்கின்றார். இது எப்படி. அராஜகம், திரிபு போன்ற கருத்தாக்கங்களுக்கு மார்க்சிய அர்த்தம் உண்டு. அதை ஏற்கின்றார் கரிகாலன். ஆனால் மனிதம் அல்ல. ஆனால் இதை முத்திரை குத்தல் என்கின்றார். இது எப்படி. இதை எப்படி மனிதமும் சொல்ல முடிகிறது. எல்லாம் திசை திருப்பல் ஊடாக மார்க்சியத்தை குழிதோண்டி புதைக்க முனைகின்றனர் அவ்வளவே.

"இக்கட்டுரையில் சமருக்குப் பதில் எழுதாமைக்குரிய காரணம் மார்க்ஸ், லெனின் போன்றோரின் மேற்கோள்களை மட்டும் நம்பி கட்டுரை எழுதும் சமர் போன்ற ஒரு பத்திரிகை திரிபுவாதி என்று குறிப்பிட்டதை நான் அசட்டை செய்து பதில் எழுதவில்லை" என கரிகாலன் குறிப்பிட்டு இதிலும் மனிதம் குழுவிற்கு முகத்தில் அறைந்துள்ளார். எப்படி எனின் சமர் 5,6 இல் கரிகாலனின் கட்டுரை மீதான விமர்சனத்தில் மார்க்சிய மூலவர்களின் எந்த மேற்கோளையும் சமர் பயன்படுத்தவில்லை. பயன்படுத்தியதாக ஒரு பொய்யைச் சொல்லி தனது நிலையை (திரிபை) பாதுகாக்க மனிதத்தைப் பயன்படுத்தி மனிதத்தையே முட்டாள் ஆக்கியுள்ளார்.

கரிகாலன் விமர்சிப்பது மார்க்சிய மூலவர்களின் கோட்பாடையே. அப்படி இருக்க அவர்களின் மேற்கோள்கள், மற்றும் கரிகாலன் கருத்துக்கள் மீதான அவர்களின் கருத்துக்களை வைப்பது தவிர்க்க முடியாது. இக்கட்டுரையில் மூலவர்களின் கருத்துக்கள் கட்டுரை மீது வைக்கப்படும்.

அடுத்து மூலவர்களை நம்பிய சமர் பத்திரிகைக்கு பதில் அளிக்க அசட்டை செய்யவில்லை என்கிறார். ஒரு விமர்சகர் தனது கருத்தை வெற்றி பெற வைக்க அக்கருத்தின் மீதான அனைத்துக் கருத்திற்கும் பதில் அளிக்க வேண்டும். இல்லாத போது பதில் அளிக்க முடியாத போது இயல்பாக இருகருத்துள்ள அமைப்புக்கள் உருவாகின் கருத்துக்குப் பதில் அளிக்க முடியாத அசட்டையானவர் துப்பாக்கி முனையிலேயே அடக்கு முறையைக் கையாள்வர். இதை

மனிதம் ஆசிரியர் குழு மேலும் "லெனினியக் கட்சிக் கோட்பாடுகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றி எற்கனவே இத்தாலியக் கம்யூனிஸ் கட்சியைச் சேர்ந்த சிலரும் பின்பு சான்ஸ் பெத்ல கீமும் அண்மைக்காலமாக இந்தியாவில் இருந்து சுமந்தா, பானர்ஜியும், வேறு சிலரும் ...... இன்றைய தேக்க நிலையில் இக் கருத்துக்களை விவாதத்திற்கு உட்படுத்த வேண்டியதன் தேவை குறித்து ......" என தொடர்கின்றனர். மார்க்சியக் கட்சிக் கோட்பாட்டை திருத்த முனையும் இவர்கள் அனைவரும் (மனிதம் தவிர) எல்லோரும் அறிந்தது போல் திரிபுவாதிகளே. இத்தாலிய கம்யூனிஸ் கட்சி ஒரு சீரழிந்த முதலாளித்துவக் கட்சி.

மார்க்சியத்திற்கு தேக்கமாம் யார் கூறுவது? திரிபுவாதிகளே. மார்க்சியம் தேக்கத்தைக் கொண்டது அல்ல. மாறாக மனிதம், உயிர்ப்பு தவிர மார்க்சிஸ்டுக்கள் உலகம்

கண்டு அஞ்சி நடுங்கி தப்பி ஓடியபடி மூலவர்களை முன் கொண்டு வரவேண்டாம் எனக் கூறி தப்பிக்க முயல்கின்றனர். நாங்கள் ஆவிகள் அல்ல உடல் உள்ள மனிதர்களே எனக்காட்டி மனிதர்களை ஏமாற்ற முயல்கின்றனர். ஆனால் மனிதர்கள் ஏமாற மாட்டார்கள். இன்று மூலவர்களின் சிலைகளைக் கண்டே ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் நடுங்கும் நிலையில் பெயரைக் கேட்டாலே திரிபுவாதிகள் அலறுகின்றனர். நாம் மூலவர்களுக்கு பதில் அளிக்க மாட்டேம் என ஓலம் இடுகின்றனர். பேய்கள் என்ன செய்யும் பூசாரியைக் கண்டால் அலறும் அவ்வளவே.

"அதற்கு முன்பாக நீங்கள் (இங்கு மாறனைக் குறிப்பிடுகின்றார்) எனது கட்டுரைக்குப் பதில் எழுதிய முறைக்கு நன்றி கூறுகிறேன். சமர் பத்திரிகையில் இருந்து மாறுபட்ட முறையில் நீங்கள் கருத்தைத் தெரிவித்த நாலேயே நான் உங்களுக்குப் பதில் எழுதுகின்றேன. ஒருவர்

## பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமே புரட்சியின் வாழ்வுக்கான முன் நிபந்தனை.

பூராகவும் புரட்சியில் வீறு நடை போடுகின்றனர்.

சோவியத், சீனாவில் நடந்த முதலாளித்துவ மீட்சி தொடர்பாக சோவியத்தில் முதலாளித்துவ மீட்சி நடந்த காலத்தில் மாவோ தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் மீண்டும் அவர்களின் தவறை சுட்டிக்காட்டினார். அதை நிராகரித்த சோவியத் கட்சி முதலாளித்துவத்தை மீட்டனர். இதுபோல் தனது கட்சிக்கு மாவோ பல தடவை எச்சரித்தார். ஆனால் அதை நிராகரித்த திரிபுவாதிகள் முதலாளித்துவத்தை மீட்டனர். மார்க்சிய மூலவர்கள் முன் கூட்டியும் சமகாலத்திலும் எச்சரித்ததற்கு மாறாக திரிபுவாதிகள் விடாப்பிடியாக முதலாளித்துவத்தை மீட்டனர். மார்க்சிய மூலவர்களின் கோட்பாடுகள் சரியாக இருக்கும் இன்றைய நிலையில் கட்சி அமைப்பு விதியே காரணம் என திசை திருப்பி மூலவர்கள் எச்சரித்த கோட்பாட்டு விடையங்களை புதை குழிக்கு அனுப்பிய டெங், குருசேவ் கும்பல் செய்ததை இவர்களும் செய்ய நினைக்கின்றனர்.

கரிகாலன் குறிப்பிடுகின்றார் மூலவர்களின் மேற் கோள்களை நம்பி சமர் உள்ளமையால் தான் பதில் அழிக்க வில்லை என்கின்றார். அதே நேரம் தான் மார்க்ஸியத்தை வளர்த்து எடுக்கின்றார் என்கின்றார். மார்க்சியம் என்பது என்ன? மார்க்ஸியத்தை சமூக விஞ்ஞானமாக உருவாக்கியவர் இவ். மார்க்சிய மூலவர்களே. இன்று மார்க்சியம் என நாம் ஆராயின் மார்க்ஸ், லெனின், மாவோ சிந்தனையே. இவர்களின் காலத்தில் இவர்களின் கருத்திற்கு எதிராக இருந்த அனைத்துத் தத்துவமும் மார்க்சியத்தை உச்சரித்தபடி திரி பாக இருந்த முதலாளித்துவக் கோட்பாடே. இன்று மார்க்சியம் என்பது இவர்களின் சிந்தனையே. இவர்களின் சிந்தனையை அடிப்படைக் கோட்பாட்டை நிராகரித்த எந்தக் கருத்தும் மார்க்சியம் அல்ல. மாறாக முதலாளித்துவக் கோட்பாடே.

இவர்களின் கோட்பாட்டை நிராகரித்து எழும் அனைத்துக் கருத்தும் முன்பே இவர்களால் பதிலளிக்கப்பட்டு புதைகுழிக்கு அனுப்பப்பட்டவையே. அவை

தனது சொந்த ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு மார்க்சியம், கட்சி போன்றவற்றை உபயோகிக்கக் கூடாது." என கரிகாலன் எழுதுகின்றார். மாறனின் கட்டுரையும், உங்கள் கட்டுரையை திரிபு என்றே சொல்கின்றார்.. மனிதம் 23 இலும், சமர் 9 இலும் எழுதிய மாறன் தெளிவாக உங்கள் கட்டுரையை திரிபு என்றே கூறுகின்றார். நாம் மிகத் தெளிவாக கூறுவதே மாறனின் அணுகு முறையில் இருந்து வேறுபட்டதாகத் தெரிகின்றது. ஆனால் விடையம் ஒன்றே.

ஒருவன் தனது சொந்த ஆளுமைக்கு மார்க்சியம், கட்சி. என்பவற்றை பயன்படுத்தியது எனின் எப்படி? ஆளுமை என்பது கருத்துப்பலத்துடன் கூடிய திறமையே. இது எப்போராட்டத் திலும் தவிர்க்க முடியாது. அதில் இருந்தே தலைவர்கள் உருவா கின்றனர். இதை சுயநலத்திற்குப் பயன்படுத்தின் தவறு. அப்படி சமர் செய்யவில்லை அப்படி செய்யின் கரிகாலன் அதை ஆதாரத்துடன் நிரூபிக்கவும். இல்லாத வரை வெறும் அவதூறே.

"அவர்களைப் பொறுத்த மட்டில் மேற்கோள்கள், ஆசான்கள், பத்திரிகை இவைதாம் முக்கியமே ஒழிய விடையங்கள் அல்ல. நாம் பேசும், எழுதும், படிக்கும் கருத்துக்களை அவர்கள் அலசி ஆராய்ந்து பார்ப்பதில்லை. பாவம் அவர்கள் உண்மையிலே பரிதாபத்திற்குரியவர்கள்" என்கின்றார் கரிகாலன். எம்மைப் பொறுத்தவரை மேற் கோள்கள் அதை எழுதிய ஆசான்கள், அதுசார்ந்த பத்திரிகை முக்கியமானதே. இது முக்கியம் இல்லை என்போர் முதலாளித்துவ வாதிகளே. உதாரணமாகப் பார்ப்பின் மார்க்சிய மூலவர்களின் சிலை முதல் அவர்களின் கருத்து அனைத்தையும் தடைசெய்து அழிப்புது யார். இன்று உலகை ஆளும் அனைத்து ஆட்சியாளர்களும் இதைத் தொடரும் போது அவர்கள் உடன் கரிகாலன் என்ன விதிவிலக்கு. கரிகாலனும் அதையே சொல்கிறார் செய்ய முனைகிறார். ஆட்சியாளர்களின் அடக்கு முறைக்கு உட்பட்டு அடிபடும்

அவரின் கருத்தை ஆராய்ந்து பார்க்கவில்லையாம். உங்களை விட நாம் உங்களின் ஒவ்வொரு வரியின் மீது கருத்தை வைக்கின்றோம். இது ஆராயாமல் எப்படி முடியும். எம்மை அடக்கு முறையாளர்கள் மூலவர்களின் கோட்பாட்டை உயர்த்தும் போது அடக்குவர். அதற்கு நீங்கள் பாவம் எனச் சொல்லி பரிதாபப் பட்டு அவர்களுக்கு துணைபோவதை விட எம்முடன் இணைந்து போராட மூலவர்களின் கருத்துக்களை பற்றி நிற்க அடக்கப்பட்ட நிலையில் நின்றும் கோருகின்றோம். வருவீர்களா?

மார்க்சியம் தேக்கத்திற்கு உள்ளாகியுள்ளது எனக் கூற முனையும் அனைவரும் திரிபுவாதிகளே. மார்க்சியம் எக்காலத்திலும் தேக்கத்திற்குள்ளாக வில்லை மாறாக அதுவே உலகில் புரட்சிக்கு தலைமை தாங்குகிறது. மார்க்சியம் தேக்கத்திற்கு உள்ளானதாக சோவியத், சீனாவை இவர்கள் அடிக்கடி காட்டி மார்க்சியத்தை திரித்துப்புரட்டி பின்பக்க கதவுகளை தட்டுகின்றனர். சோவியத் சீனாவில் நடைபெற்றது மார்க்சிய தேக்கத்தினால் அல்ல மாறாக மார்க்சிய லெனினிய, மாவோ சிந்தனையான கட்சிக்கோட்டைக் கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டனர். சோவியத் சீனாவில் அடிப்படை முரண்பாடான வர்க்கப் போராட்டம் கைவிடப் பட்டது. இதை மார்க்சிய ஆசான்கள் மீண்டும் மீண்டும் எச்சரித்தும் அதை புதைகுழிக்குள் அனுப்பினர். கரிகாலன் கோருவது போல் ஆன்மிக பண்பை, குருசேவ், டெங் கும்பல் வர்க்கப்போராட்டத்தை நிராகரித்து வர்க்கமற்ற சமுதாயத்தில் இப்படிக் கூறியபடி எல்லாருக்கும் வழங்கினர். அதன் ஊடாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிராகரித்து அனைத்து மக்கள் அரசை அமைத்தனர். அது முதலாளித்துவ மீட்சியாக இன்று எல்லோரும் அறியும் வண்ணம் உள்ளது.

" எந்த ஒரு பிரச்சனையை நாம் ஆராயும் போதும் அவற்றுக்கு மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோர் சொன்னவை என்ன? என்று பார்வையைத் தொடங்குவது, அவர்கள் சொன்னவற்றுக்கு ஏற்றவாறு பிரச்சனையை ஏற்கனவே உள்ள ஒரு சட்டகத்துக்குள் அடக்க முனைவதும் தவறு. இந்த அணுகுமுறையானது பிரச்சனையைப் பற்றிய அறிவை நாம் பெறுவதற்கோ அன்றிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கோ ஒரு போதும் உதவமாட்டாது. ......" என கரிகாலன் தொடர்கிறார். முதலில் நாம் பிரச்சனையை உணர்கின்றோம். பிரச்சனைக்கான தீர்வை தீர்ப்பதற்கு மார்க்சியமே உதவும் என நாம் காண்கின்றோம். அதாவது வர்க்கப் போராட்டமே. இதிலிருந்தே மார்க்சியத்தை ஆராய்கிறோம். இதுவே ஆய்வுமுறை. இந்த வகையில் மார்க்சியம் மீதான ஆய்வு இச்சமூகத்தை விஞ்ஞான பூர்வமாக ஆராய்வதை கண்டு அறிகின்றோம். அந்தவகையில் மார்க்ஸிய, லெனினிய, மாவோ சிந்தனையையே மார்க்சியமாக நாம் கொள்கின்றோம். அதற்கு அப்பால் உள்ள தத்துவங்கள் திரிபாக முதலாளித்துவ வழிப்பட் டதாக உள்ளது. மார்க்ஸிய, லெனினிய, மாவோ சிந்தனை தவிர எக்காலத்திலும் உள்ள எந்தத்தத்துவம் அல்லது அவர்களுக்கு எதிராக விவாதித்த எந்தத் தத்துவமும் மார்க்சியமாக உள்ளதா? இதை கரிகாலன், மனிதம், உயிர்ப்பு, ராஜன் போன்றவர்களிடம் முன்வைக்கும்

இன்று நாம் அவர்களின் காலத்தில் இருந்து சற்று பின் தங்கியுள்ளோம். நாம் மார்க்சியத்தால் தீர்வைத் பெறமுடியும் என நம்பும் போது மார்க்சியமாக உள்ளதை ஏற்கின்றோம். அதை மீண்டும் சரி பார்க்கின்றோம். அப்படி பிழை எனும் போது எது பிழை என விளக்கத்தினூடாக முன்வைக்க வேண்டும். மார்க்சியம் இன்று சரியாக உள்ளதுடன் அதுவே புரட்சியின் அடிப்படை விதியாகவும் உள்ளது. மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ என்ன சொன்னார்கள் எனப் பொருத்திப் பார்க்கவில்லை மாறாக அவர்கள் கூறியவை இன்று சரியாக உள்ளதைக் காண்கின்றோம். அந்த வகையில் உயர்த்திப் பிடிக்கின்றோம். ஒருவன் அறிவைப் பெற வேண்டின் பிரச்சனையின் அடிப்படையைப் புரிந்து கொள்ள வேண்டும். அங்கு இருந்து இச்சமுகத்தை ஆராய்ய வேண்டும். அதற்கு ஊடாகவே புரட்சிக்கான தத்துவத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். மார்க்சியத்தை புரட்சிக்கான தத்துவமாக ஏற்றுக்கொள்ள முனையும் ஒவ்வொருவரும் மார்க்சியமான மார்க்சிய, லெனினிய, மாவோ சிந்தனையினை நிராகரிக்க முடியாது. மார்க்சியமான மார்க்சிய, லெனினிய, மாவோ சிந்தனையை நிராகரிக்கும் யாவரும் மார்க்சியத்தை உச்சரிப்பின் திரிபுவாதமே.

"சோவியத் புரட்சியின் தோல்விக்கு வெறுமனே லெனினியக் கட்சி கோட்பாடுகள் மட்டும் காரணமென்பு நான் கருதவில்லை. உள் நாட்டு யுத்தம், பின்தங்கிய பொருளாதாரம், ஆரம்பகாலக் கட்சி ஊழியர்களை கட்சி இழந்தமை, அதிகாரத்தில் இருந்தவர்கள், புரட்சியின் பின் கட்சியில் ஒட்டிக் கொண்டமை, ஏகாதிபத்தியங்களின் யுத்தம் நெருக்கடி இப்படிப் பல ......" எனத் தொடர்கின்றார் கரிகாலன். சோவியத்தின் தோல்விக்கு இவைகள் காரணமல்ல. மாறாக வர்க்கப்போராட்டம் கைவிடப்பட்டமையே காரணம். இது காரணமாக இருக்க வேறு பல காரணத்தைக் காட்டி அதன் ஊடாக கட்சிக் கோட்பாட்டை புதைகுழிக்கு அனுப்ப முனைகிறார் கரிகாலன். சோவியத்தில் குருசேவ், பிரஸ்னேவ் வர்க்கப் போராட்டத்தை கைவிட்ட போது. மாவோவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தனர். அவ்விமர்சனத்தை ஏற்றிருப்பின் சோவியத் தோல்வி பெற்றிருக்காது. வர்க்கப் போராட்டம் சோவியத் சமுகத்தில் 4,5 தலைமுறைக்கு நீடிக்கும் என மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ எல்லோரும் மீண்டும் மீண்டும் கூறினர். மாவோ தனது கட்சிக்கு சோவியத் நிலைமையுடன் விளக்கி எச்சரித்தும் சீனத் திரிபு வாதிகள் வர்க்கப் போராட்டத்தை கைவிட்டனர். சோவியத், சீனாவின் தோல்வி மார்க்ஸிய, லெனினிய, மாவோவின் கட்சிக் கோட்பாட்டை நிராகரித்தமையால் எழுந்ததே. அதுவே இவ்விரு நாடுகளிலும் அவர்களின் சிலைமுதல் கட்சிக் கருத்துகளை புதைகுழிக்கு அனுப்பி வருகின்றனர். கட்சிக் கோட்பாட்டை நிராகரித்த இக் கட்சிகள் அவ்வவ் நாடுகளில் முதலாளித்துவத்தை மீட்டனர். அன்று கட்சிக் கோட்பாட்டை நிராகரித்த போது நீண்ட பல போராட்டங்களை மார்க்ஸிஸ்டுக்கள் நடத்தினர், நடத்தி வருகின்றனர். கரிகாலன், அவர் சார்ந்த பத்திரிகைகள் வரலாற்றை சேற்றுக்குள் மூட முனையும் வேலையில் தொடர்கின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்நாட்டு யுத்தம் என்பது ஒரு புரட்சியின் தவிர்க்க முடியாத அம்சம். ஒரு உள்நாட்டு யுத்தம் இன்றி ஒரு புரட்சி நடைபெறவே முடியாது. பின் தங்கிய பொருளாதாரம் என்பதன் ஊடாக வாதிட முற்படுபவர் வேறு வர்க்கப் போராட்டமின்றி பின்தங்கிய பொருளாதாரம் எனக் கூறின் டெங் திரிபை பாதுகாப்பவர்களே. டெங் கும்பல் சீனாவில் திரிபை ஏற்படுத்த உயர்த்தியது நவீன பொருளாதாரமே. ஒரு சமுதாயத்தில் பொருளாதாரம் வளர்க்கப்படல் வேண்டும் ஆனால் அது வர்க்கப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்தது. சோவியத்தில் 1955 க்கு முந்திய காலத்தில் பொருளாதாரம் மற்றைய நாடுகளுடன் போட்டி போடும் வகையில் முன்னேறியதாகவும், தரமிக்கதாகவும் இருந்தது. ஆரம்ப கால ஊழியர்களை இழந்ததும் அதிகாரத்தில் இருந்தவர்களும் காரணம் என்பதன் ஊடாக லெனின், ஸ்டாலின் மீது தாக்குதலை தொடுத்துள்ளார். லெனின், ஸ்டாலின் மரணிக்க வேண்டும் என விரும்பியவர் ஏகாதிபத்திய வாதிகள், திரிபுவாதிகள், கரிகாலன் போன்றோரே. அதுதான் அதிகாரத்தில் இருந்தோர் என்கின்றார். அதில் இருந்தே ஆரம்ப கால ஊழியர்களை இழந்து இருந்தாம். ஆரம்ப கால ஊழியர்கள் என கரிகாலன் கருதுவது ரொஸ்கி, புகாரின், —— போன்ற திரிபு வாதிகளையே. இவர்கள் கட்சியில் இருந்த காலத்தில் புரட்சிக்கு முன்பே இருந்தே தீர்க்கமான வர்க்கப் போராட்டத்தை இவர்களுக்கு எதிராக கட்சி நடத்தியது. இது புரட்சியின் பின்பும் தொடர்ந்தது. திரிபுகளின் ஏற்பட்ட பண்பு மாற்றம் பகை முரண்பாடாக மாறியது. கட்சி ஆட்சியை பிடித்த பின்பும் வர்க்கப் போராட்டமே பிரதானமானது எதிரி எங்கே என்கின்ற போது, கட்சிக்கு உள்ளேயே என்கின்றனர் மூலவர்கள் அதையும் பார்ப்போம்.

*"சோவியத்துக்களின் உறுப்பினர்களை நாடாளுமன்ற வாதியாக அல்லது அதிகார வர்க்கத்தினராக மாற்றும் குட்டி முதலாளித்துவப் போக்கு இருக்கிறது. இந்தப் போக்கை முறியடிக்க சோவியத்துகளின் எல்லா உறுப்பினர்களையும் நிர்வாக நடைமுறை வேலைகளில் இழுக்க வேண்டும்"* *(சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்-லெனின்)*

*"முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்வது ஒரு முழுமையான வரலாற்றுச் சகாப்தத்தையே குறிக்கிறது. இந்த சகாப்தம் முடிவுறும் வரை சுரண்டலாளர்கள் தவிர்க்க முடியாமல் மீட்சிக்கான நம்பிக்கையை, வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கை மீட்சிக்கான முயற்சிகளாக மாற்றப்படுகின்றன"* *(பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலிக் கவுட்ஸ்கியும்-லெனின்)*

*" வர்க்கப் போராட்டத்தையும் வர்க்கங்களையும் மறந்துவிட்டால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மறந்துவிட்டால், பிறகு நீண்ட காலம் பிடிக்காது. சில ஆண்டுகள் மட்டுமே அல்லது ஒரு பத்து அல்லது அதிகம் போனால் சில பத்து ஆண்டுகளுக்கு முன்பே எதிர் புரட்சி மீட்பு தேசிய அளவில் நடந்து விடும். மார்க்ஸிய, லெனினிய கட்சி சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு திரிபு வாதக் கட்சியாக மாறிவிடும். சீனத்தின் மொத்த நிறமும் மாறிவிடும். தோழர்களே இதுபற்றி சிந்தியுங்கள்.*

*(ஷ நூல் பக்கம் 164 1963 மாவோ)*

*"தற்போதைய இயக்கத்தின் பிரதான தாக்குதல் இலக்கு முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் அதிகாரத்தில் உள்ள கட்சி நபர்களாகும்.*
*(ஷ நூல் - மாவோ)*

*"நீங்கள் சோசலிசப் புரட்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இருப்பினும் முதலாளிகள் எங்கு இருக்கிறார்கள் என்பதை அறிய வில்லை. அவர்கள் பொதுவுடமைக் கட்சிக்குள்ளேயே இருக்கிறார்கள். அதிகாரத்தில் இருந்து கொண்டு முதலாளித்துவப் பாதையை மேற்கொள்கிறார்கள்.*
*(ஷ நூல் பக்கம் 31- மாவோ)*

கட்சிக்குள் உள்ள மார்க்சியத்தை உச்சரித்தபடி முதளாளித்துவத்தை மீட்க கட்சியின் அனைத்து மட்டத்திலும் முதலாளித்துவ மீட்பாளர்களாக இருந்த ரொஸ்கி, புகாரின் —— போன்றோர்களை கரிகாலன் காப்பாற்றக் குரல் கொடுத்ததுடன் கட்சிக் கோட்பாட்டு விதியை புதைகுழிக்கு அனுப்ப முயல்கின்றார். அதுதான் அதிகாரத்தில் இருந்தவர்கள் புரட்சிக்குப் பின் கட்சியில் ஒட்டிக் கொண்டமை எனக் கூறி தோல்விக்கு காரணம் கற்பிக்கின்றார். ஒருகட்சி தலைமை தாங்குபவர்கள் அதிகாரம் என்பதன் ஊடாக ஒரு பயங்கரமான அதிகார அடக்கு முறையாளராக காட்ட முனைகின்றார். ஒரு கட்சி என்கின்ற போது அது தனக்கே உரிய அமைப்பு வடிவத்தை கொண்டிருக்கும். இது தொடர்பாக கீழ் பார்ப்போம். புரட்சிக்குப் பின் ஒட்டிக் கொண்டனர் என்றதன் ஊடாக புரட்சியின் பின் அவர்கள் கட்சியை விட்டு நீங்க வேண்டும் என்கின்றார். இதை யார் விரும்புகின்றனர். ஏகாதிபத்தியமும், எதிர்ப்புரட்சி வாதியுமே ஒழிய புரட்சிவாதிகள் அல்ல. புரட்சி முன்னனிகள் விலக வேண்டும் என்பதும், கொன்று ஒழிக்க வேண்டும் என்பதும் ஒன்றே. ஒரு புரட்சியை நடத்த எவ்வளவு வளைவு சுழிவான வழிகள் ஊடாக வழிநடத்த முன்னணி சக்தி முனைகின்றது. அப்படி கிடைக்கும் முதல் படி வெற்றி பலத்த உயிர் சேதங்களின் ஊடாக ஏற்படுகின்றது. ஆனால் ஆட்சியைப் பிடித்தவுடன் முன்னணி சக்தியை கலையக் கோரும் கரிகாலன் போன்றோர் டெங், குருசேவ் வாரிசுகளே. அவர்களின் கனவுகள் இவைகள் மட்டுமின்றி ஏகாதிபத்திய சேவையும் கூட. வர்க்கப் போராட்டம் ஆட்சியைப் பிடிப்பது அல்ல மாறாக புரட்சியைத் தொடர்வதே. ஆட்சியைப் பிடிப்பது புரட்சியைத் தொடர்வதை விட இலகுவானது. புரட்சியைத் தொடர்வது என்பது வர்க்கப் போராட்டத்தை தொடர்ச்சியாக நிகழ்த்துவதே. அதற்கு புரட்சிக்கு முன் தலைமை தாங்கியவர்கள் தலைமை தாங்குவது யதார்த்தமானது. அதை நிராகரிப்பவர்கள் முதலாளித்துவ மீட்சிக்கான கனவு காண்பவர்களே. இவைகளை ஒட்டி மூலவர்கள் என்ன கூறுகின்றனர் எனப் பார்ப்போம்.

*"1) இழந்த சொர்க்கத்தை மீண்டும் பெறுவதற்காகத் தூக்கி எறியப் பட்ட சுரண்டலாளர்கள் ஆயிரத் தொரு வழிகளிலும் முயல*

*2) குட்டி முதலாளித்துவ சூழலில் முதலாளித்துவத்தின் புதிய சக்திகள் அல்லது நபர்கள் தொடர்ச்சியாகவும் தன்னியல்பாகவும் தோன்றிக் கொண்டே இருக்கின்றனர்.*

*3) குட்டி முதலாளித்துவத்தின் மாசுபடுத்தும் சூழல் முதலாளித்துவ செல்வாக்கு மற்றும் அது எங்கும் விரவி நிற்பதன் விளைவாக, பாட்டாளி வர்க்கத்தின் அணிவரிசையிலும், அரசாங்க அலுவலர்கள் மத்தியிலும் அரசியல் ரீதியில் சீரழிந்து போனவர்களும் புதிய முதலாளித்துவ நபர்களும் அல்லது சக்திகளும் தோன்றக் கூடும்.*

*4) சர்வ தேசிய முதலாளித்துவத்தின் முற்றுகை, ஆயுதந் தாங்கிய தலையீடு என்ற ஏகாதிபத்தியத்தின் அச்சுறுத்தல், அமைதிவழியில் சீரழிவைக் கொண்டு வருவதற்கான நாச வேலைகள் ஆகியவை சோசலிச நாட்டில் வர்க்கப் போராட்டம் தொடர்வதற்கான புறக்காரணிகளாகும்."*

என அக்டோபர் புரட்சிக்குப் பின் லெனின் பல தடவைகள் சுட்டிக்காட்டினார்

-சீனா விலகிப் போகிறதா பக்கம் 54- சி.பொக.1961

*"—— தூக்கி எறியப்பட்ட நிலப்பிரபுத்துவம் மற்றும் தரகு முதலாளித்துவ வர்க்கங்களின் மிச்ச சொச்சங்கள் இன்னமும் இருக்கின்றன. இன்னமும் முதலாளித்துவ வர்க்கம் இருக்கின்றது. குட்டி முதலாளித்துவ வர்க்கத்தை மறு வார்ப்பு செய்வது இப்பொழுது தான் தொடங்கி இருக்கின்றது."* *(சீனா விலகிப் போகின்றதா பக்கம்-154 மாவோ)*

சோசலிச சமுதாயத்தைப் பற்றி விளக்கிய மார்க்ஸ் சொன்னார் *"இங்கு நாம் கையாள வேண்டியது அதன் சொந்த அடித்தளத்தின் மீது வளர்ச்சியுற்ற என்கின்ற முறையிலான கம்யூனிச சமுதாயத்தைப் பற்றி அல்ல. ஆனால் மாறாக, முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் உதிக்கும் சமுதாயத்தைப் பற்றி, அது பொருளாதார ரீதியில், தார்மீக ரீதியில், அறிவித்துறை ரீதியில் இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் இன்னமும் அது உதிக்கும் கருப்பையான பழைய சமுதாயத்தின் பிறப்புசின்னங்களால் முத்திரை குத்திரை குத்தப்பட்டிருக்கிறது."* (கோதா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம்)

வர்க்கப் போராட்டம் என்பது ஆட்சியதிகாரத்தைப் பெற்ற பின்பே தீவிரமடைகின்றது. சொர்க்கத்தை இழந்த வர்க்கம் தனது கனவு டன் மிக தீவிரமாக முன்பு இருந் ததை விட போராட முனைகின் றது. அங்கு எப்படி ஒரு கட்சி ஆட்சிக்கு வர முடிந்ததோ அதே போன்றே கட்சி இருப்பதுடன் ஆட்சியை கைப்பற்ற முனையும் முதலாளித்துவமீட்பாளர்களிடமிருந்து ஆட்சியை பாதுகாக்க தீவிரமிக்க போராட்டத்தை நடத்து வர். இன்று ஒரு கரிகாலன் ஆட்சியை பிடிக்க முன் போராடு வது போல் அல்ல. ஆட்சியை பிடித்த பின் பல ஆயிரம் கரிகா லன்கள் பல முகத்துடன் வெளி வருவர். "உலகெங்கும் பெரும்பான்மையாக உள்ள புரட்சிகரக் கட்சிகள் குழுககள் தமது பெரும்பான்மை நிலைப்பாடுகளை போல்ஷிவிக் கட்சியில் பெற்றுக் கொண்டன. போல்ஷிவிக் கட்சி ... தலைமையில் அதன் சித்தாந்தங்கள் உருவாக்கப்பட்டன. அதனாலேயே லெனினியக் கட்சிக் கோட்பாடுகளை விமர்சனத்துக்குள்ளாக வேண்டும் என்கின்றேன்" என கரிகாலன் தொடர்கின்றார். இது மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்துகின்ற மார்க்சியத்தின் உலகளாவிய விஞ்ஞான உண்மையை சேறடிக்கின்ற முயற்சியே. உலகில் உள்ள கட்சிகள் போல்ஷிவிக் கட்சியில் இருந்து மட்டுமல்ல மாறாக மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனையிலிருந்தே மார்க்சியத்தைப் பெற்றன. லெனின் போல்ஷிவிக் கட்சிக்கான தனது சித்தாந்தத்தை வளர்த்து எடுத்தது மார்க்ஸ், எங்கல்ஸ் தத்துவத்திலிருந்தே. இன்று உள்ள கட்சிகள் மார்க்சிய, லெனினிய மாவோ சிந்தனையிலிருந்தே தம்மை உருவாக்குகின்றனர். வெறும் லெனின் என காட்ட முனைவது மார்க்சிய, மாவோ சிந்தனையை ஒன்றுக்கு ஒன்று எதிராக காட்டுவதுடன் கொச்சைப்படுத்துவதுமே. அடுத்து லெனினிய கட்சிக்கோட்பாட்டை விமர்சித்தவர், லெனின் கட்சிக்கோட்பாடு பற்றி என்ன சொன்னார் என சொல்ல முயலாதது அப்பட்டமான முதலாளித்துவ கோஷமே. லெனின் சிலைகளை தகர்க்க முனையும் இன்றைய ஏகாதிபத்தியவாதிகளுக்கும், லெனின் கருத்தை வைக்காதீர்கள் எனச் சொன்னபடி லெனின் தத்துவத்தை திரிக்க முனையும் / மறுக்க முனையும் இவர்களும் ஒரே வகைப்பட்டோரே. லெனினின் கட்சிக் கோட்பாடுகளை திரித்து புரட்டும் போது திரிக்கப்பட்ட கருத்தின் மேலான சரியான கருத்தை முன்வைத்தால் அவர்கள் ஆத்திரத்துடன் வைக்காதீர்கள் என அலறுவது ஏன் தான் என்பது நாம் எல்லோரும் அறிவோம்.

"லெனினியக் கட்சிக் கோட்பாடுகள் நடைமுறைகளுக்குள் ஊடுருவியிருக்கும் பொருளாதாரவாதத் தன்மைக்கு எதிராக எதிராக அவை பலமுறை விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. சமுதாய வளர்ச்சிக்கு தேவையான ஆன்மீகப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு லெனினியக் கட்சிகள் போதிய கவனம் செலுத்தவில்லை. இந்த விடயத்தின் போல்ஷிவிக் கட்சியிலிருந்து மிகவும் மாறுபட்ட தன்மையைக் கொண்டிருந்தாலேயே சீனக்கம்யூனிஸ்ட் கட்சி ஒரு கலாச்சாரப் புரட்சியை நடாத்த முன்வந்தது. என கரிகாலன் தொடர்கின்றார். சீன கலாச்சாரப் புரட்சியை சோவியத் புரட்சிக்கு முற்றாக மாறுபட்டதாக காட்ட முனைகின்றார். ஆன்மிகப் பண்பு எனக் கூறியபடி கலாச்சாரப் புரட்சியை ஏற்றபடி பொருளாதார வாதத்துக்கு எதிராக உள்ளார். இதை ஒட்டி சோவியத் சீனா புரட்சியை முன்னெடுத்தவர்கள் கூறியதைப் பார்ப்போம்.

கலாச்சாரப் புரட்சி பற்றி மாவோ. *"முதலாளித்துவ வர்க்கம் மற்றும் பிற அனைத்துச் சுரண்டல் வர்க்கங்களுக்கெதிராக பாட்டாளி வர்க்கம் நடத்திய ஒரு மாபெரும் அரசியல் புரட்சியாகும். அது கோமிண்டாங் பிற்போக்கு வாதிகளுக்கு எதிராக சீனப் பொதுவுடமைக் கட்சியும் அதன் தலைமையில் பரந்துபட்ட புரட்சிகர மக்கள் திரளினரும் தொடுத்த நீண்ட, நெடிய போராட்டத்தின் ஒரு தொடர்ச்சியாகும். பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தின் ஒரு*

*"இப்போதைய சோசலிசக் கல்வி மற்றும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் பிரதான இலக்கு முதலாளித்துவ பாதையை மேற் கொள்ளும் கட்சி நபர்களைத் தாக்குவதே."* (ஷ-நூல் மாவோ)

*"சோஷலிசத்தைக் கட்டியமைப்பதில் சோவியத் யூனியன் அப்பொழுது முதலாவது நாடாகும். தொடர்ந்து செல்ல அந்நிய அநுபவம் இல்லை. சோஷலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்டத்தின் விதிமுறைகள் பற்றிய அவரது புரிதலின் மார்க்சிய-லெனினிய இயங்கியலில் ஸ்டாலின் விலகிப்போனார். ஆகையால் விவசாயம் அடிப்படையில் கூட்டுத்துவ மயமான பிறகு சோவியத் யூனியனில் பகைமையான வர்க்கங்கள் இனி மேலும் இல்லாமல் போய் விட்டன, வர்க்க மோதலிலிருந்து விடுதலையடைந்து விட்டது என்று (அவ்வாறு நடப்பதற்கு முன்பே) முதிராத நிலையிலேயே பிரகடனப் படுத்தினார். சோசலிச சமுதாயத்தின் உக்கிரமான தன்மைக்கு ஒரு தலையாய அழுத்தம் கொடுத்தார். அதன் முரண்பாடுகளை அலட்சியம் செய்தார். முதலாளித்துவத்துக்கெதிரான மற்றும் பரந்து பட்ட மக்களைச் சார்ந்திருக்கத் தவறி விட்டார். முதலாளித்துவ மீட்சிக்கான வாய்ப்பு சர்வதேசிய ஏகாதிபத்தியத்தின் ஆயுதமேந்திய தாக்குதலோடு மட்டுமே இணைந்திருப்பதாக கருதினார். இக்கோட்பாடு நடைமுறை இரண்டிலும் பிழையானது. எவ்வாறாயினும் ஸ்டாலின் ஒரு மாபெரும் மார்க்சிய-லெனினிய வாதியாக இருந்தார். சோவியத் கட்சி மற்றும் அரசினை அவர் வழிநடத்திய வரை, அவர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் சோசலிசப் பாதையையும் உறுதியாகப் பற்றி நின்றார். ஒரு மார்க்சிய லெனினிய பாதையைக் கடைப்பிடித்தார். சோசலிசப் பாதையில் வெற்றிகரமாக சோவியத் யூனியன் முன்னேறுவதை உறுதி செய்தார்.*
*(சீனா விலகிப் போகிறதா ?- பக்கம் 61-62-மாவோ)*

*"முழுக்கட்சியும் பாட்டாளி வர்க்கக் கலாச்சார புரட்சியின் மாபெரும் பதாகையை உயர்த்திப் பிடிக்க வேண்டும். கட்சியையும் சோசலிசத்தையும் எதிர்க்கிற கற்றறிந்த பண்டிதர்கள் எனக் கூறப்படுபவர்களின் பிற்போக்கு நிலைப்பாட்டை முற்றிலும் அம்பலப்படுத்த வேண்டும். நடைமுறை சாரா ஆராய்ச்சிப்பணி, கல்வி, பத்திரிகைத் துறை, இலக்கியம் மற்றும் கலைப்பிரசுரம் ஆகிய துறைகளில் உள்ள பிற்போக்கு முதலாளித்துவக் கருத்துக்களை முற்றிலுமாக மறுதலிக்க வேண்டும். இந்த கலாச்சாரத் துறைகளில் தலைமையைக் கைப்பற்ற வேண்டும்."* -பீகிங் ரிவ்யூ
*67 தொகுதி 2 எண் -10 -*

*"போதுமான அளவு கலாச்சாரம் வளர்ந்திராத ஒரு நாட்டில் சோசலிசத்தை நிலை நாட்டுவதை மேற்கொள்வதில் நாம் மிகவும் அவசரப்பட்டு விட்டோம் என்று நமது எதிர்ப்பாளர்கள் திரும்பத் திரும்ப நம்மிடம் கூறிவருகிறார்கள். தத்துவத்தில் குறிப்பிட்டுள்ள முடிவுக்கு நேர்மாறான முடிவிலிருந்து நாம் தொடங்கியதால் அவர்கள் இத் தவறான கருத்துக்கு வருகிறார்கள். நமது நாட்டில் அரசியல் மற்றும் சமூகப் புரட்சி, கலாச்சாரப் புரட்சியை முந்தி விட்டது. ஆயினும் அதே கலாச்சாரப் புரட்சி இப்போது நம்மை எதிர் கொண்டு உள்ளது*

www.tamilarangam.net



சீனாவில் கலாச்சாரப் புரட்சி என்பது ஒரு வர்க்கப் போராட்டமே. அது பொருள் சார்ந்ததே. கரிகாலன் நினைப்பது போல் ஆன்மீகத்தின் அனைத்து விருப்புகளையும் அங்கீகரிக்க வில்லை. பாட்டாளி வர்க்கம் சார்ந்த விருப்புகளை நிறைவு செய்யவே கலாச்சாரப் புரட்சி நடத்தப்பட்டது. இதையே போல்சுவிக் கட்சியும் செய்தது. லெனின் கலாச்சாரப் புரட்சி எமது அடுத்த கட்ட இலக்கு என்கிறார். அது தொடர்ச்சியான ஸ்டாலினின் சில தவறுகளும், முன் அனுபவம் இன்மையுமே ஒரு கலாச்சாரப் புரட்சியையோ, மக்களையோ சார்ந்திருக்கத் தவறினார். 1930 பிந்திய 1935 இக்கு முந்திய கட்சி விரோத திரிபுவாதிகளை அழிப்பதில் மக்களை சார்ந்திருக்கத் தவறினார். மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி ஒரு புரட்சி ஊடாக அழிப்பதில் தவறு இழைத்தார். ஆனால் அவர் சோசலிசத்தை முன்னெடுப்பில் எப்போதும் உறுதியாக இருந்தார். சீனக் கலாச்சாரப் புரட்சி முதலாளித்துவ சிந்தனையை அதன் அனைத்து மூலகத்திலும் அழிப்பதை கொண்டிருந்தது. இது லெனினிய வழிகாட்டலில் உருவாக்கப்பட்டது. ஆனால் கரிகாலன் ஒன்றுக் கொன்று எதிராகக் காட்டி தனது திரிபை லெனினியத்தின் மீது கையாண்டுள்ளார். மனிதனின் ஆன்மீக ஆக அவனின் உணர்வு வெளிப்பாட்டின் விருப்புகளே. இதை லெனினியக் கட்சி நிராகரிக்கின்றது என்றதன் ஊடாக முதலாளித்துவ திரிபை உயர்த்திப் பிடித்துள்ளார். மனித விருப்புகள் அவனின் வர்க்க இருப்பில் ஆனது. ஒருவன் உல்லாசமாக வாழ மற்றவனை சுரண்டி, உழைக்காமல் இருக்க விரும்பின் அதை லெனினியக் கட்சி அங்கீகரிக்க மறுக்கின்றது. இதுவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். இதையே மாவோவும் கலாச்சாரப் புரட்சியும் செய்ததாகும்.

ஆனால் கரிகாலன் ஒன்றுக் கொன்று முரணாக, லெனின் மாவோவைக் காட்டி திரிபை புகுத்த முனையும் பாதை ஆன்மீகமாகப் புலப்படுகின்றது. பாட்டாளி வர்க்கத்திற்கு எதிரான எந்த ஆன்மீகத்தையும் மார்க்சியம் அங்கீகரிப்பதில்லை அதை மறுதலிக்கின்றது. அதை அழிக்கின்றது. அது இல்லாத சமூகம் உருவாகும் போதே வர்க்கமற்ற சமுதாயம் உருவாகின்றது. அப்போதே அரசும் உதிர்கின்றது. "1) லெனினியக் கட்சி அமைப்பு வடிவம், உழியர்களுக்கிடையிலான உறவு.
2) அரசு-கட்சி உறவு பற்றிய நிலைப்பாடுகள்
3) கட்சி-சிவில் சமூக நிறுவனங்களுக்கிடையிலான உறவு
மேலே குறிப்பிட்ட மூன்று விடயங்களிலும் பல வடிவங்களாகப் பாரிய மாற்றங்கள் எதுவும் இல்லாமல் இறுகிய நிலைப்பாட்டையே லெனினியக் கட்சிக் கோட்பாடுகள் கொண்டுள்ளன. நடந்து முடிந்த எத்தனையோ புரட்சிகள் அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியாமல் தேக்க நிலையை அடைந்த போதும் இந்த விடயங்களில் எந்த ஒரு மாற்றமும் நடைபெற வில்லை" என கரிகாலன் கட்சிக்கோட்பாட்டை அதன் அடிப்படை விதிகளை டெங், குருசேவ் கும்பல் உடன் இணைந்து தாக்குகின்றார். சோவியத் சீனா கட்சிக் கோட்பாடுகளை குருசேவும் சீனாவும் கரிகாலன் விரும்புவது போல்

நாம் மேல் உள்ள அட்டவணை ஆதாரத்தின் ஊடாகப் பார்க்கலாம்.

| காங்கிரஸ் | வருடம் | தொழிலாளர் | விவசாயிகள் | அறிவுஜீவிகள் |
|---|---|---|---|---|
| அறிவுஜீவிகள | | | | |
| 13 | 1924 | 63.2 வீதம | 5.4 வீதம் | 31.4 வீதம் |
| 15 | 1927 | 71.0 | 5.7 | 23.3 |
| 16 | 1930 | 71.2 | 6.7 | 22.1 |
| 17 | 1934 | 60.0 | 8.0 | 32 |
| 20 | 1956* | 18.5 * | 13.8* | 67.7* |

*புள்ளடி இடப்பட்டவை குருசேவ் மாற்றி அமைத்த அங்கத்தவர்களின் விபரமே இறுகிய கட்சிக் கோட்பாட்டை கரிகாலன் விரும்புவது போல் திறந்து ஆன்மீகத்தை உயர்த்திப் பிடித்து திரிபுவாதக் கட்சியாக மாற்றினார்.

– நன்றி சஞ்சிவி –

சோவியத் கட்சியை எல்லா மக்கள் கட்சி எனக் கூறி கட்சிக் கட்டுப்பாடுகளை நீக்கி திறந்த கட்சியாக்கி பாட்டாளிவர்க்கக் கட்சியையே திரிபுவாத முதலாளித்துவக் கட்சியாக மாற்றினார். கரிகாலன் கட்சிக் கட்டுப்பாட்டை நீக்கக் கோருவது திரிபுவாதக் கட்சியாக ஆரம்பம் முதலேகொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவே. (உ-ம்) மா .. இன்று உள்ள மூன்றாவது பாதைத் திட்டம் இருக்கம் கூடியது திறந்து விடுங்கள் எனக் கோருபவர்கள் யாராக இருக்க முடியும் திரிபு வாதிகளும், பிழைப்பு வாதிகளுமே. இன்று மனிதம் வேண்டுமெனின் யாரும் வந்து செல்லும் வடிவங் கொண்ட ஒரு கதம்பக் கூட்டமாக இருக்கலாம். ஆனால் கட்சி அப்படி அல்ல. அது தனக்கென வகுக்கப்பட்ட கொள்கையை என்றும் விட்டுக் கொடுக்காத உறுதியான தலைமையைக் கொண்ட வடிவமே. அது இறுக்கமானதாக இல்லாத போது புரட்சி ஏற்படாது. உலகில் இன்று புரட்சிக்கு தேக்கம் எனக் கூறுவது வரலாற்றில் நகைப்பிற்கு உரியது. இன்று புரட்சியை முன்னெடுத்துச் செல்வதில் முன்னேறியுள்ள அனைத்துக் கட்சியும் இறுக்கமான கட்சிக் கோட்பாட்டைக் கொண்டவையே.

"இதுவரை காலமும் நிலவி வந்த லெனினியக் கட்சி வடிவம் செயலாளர், அரசியல் குழு, மத்திய குழு, ஏனைய குழுக்கள், அமைப்பாளர்கள், கிளைகள் என்ற வடிவத்தில் உள்ள மிகவும் இறுக்கமான . மத்தியப்படுத்தப்பட்ட வடிவத்தையே கொண்டுள்ளது. கம்யூனிசத்தை இலட்சியமாகக் கொண்ட புரட்சிகரக் குழுக்கள், கட்சிகள் எவையும் தமது ஊழியர்களில் பெரும்பாலானவர்களை கம்யூனிஸ்ட்டுக்களாகக் கொண்டிருப்பதில்லை. மாறாக அதன் ஊழியர்கள் கம்யூனிஸ்ட்டுக்களாக வளரவேண்டும். அதற்கேற்றவாறு ஸ்தாபன கட்டமைப்பை ஸ்தாபனம் கொண்டிருக்க வேண்டும். —— இங்கு நான் சொந்த நலன்கள் என்று வெறும் பொருளாதார நலன்களை மட்டும் குறிப்பிடவில்லை." என கரிகாலன் தொடர்கிறார். ஒரு கட்சி தனது அங்கத்தவர்களைத் தவிர பொது கட்சிக்கு வெளியில் ஊழியர்களாகக் கொண்டுள்ளது. இவர்களை கட்சிக்குள் உள்வாங்க வேண்டின் இவர்களின் அரசியல் வளர்ச்சி மட்டம் உயர வேண்டும். இங்கு அவர்களின் அரசியல் தத்துவ தரத்திற்கு ஏற்ப கட்சி விதியை மாற்றுதல் என்ற பேச்சுக்கு இடமில்லை. அதே நேரம் இவ்வூழியர்களைக் கொண்ட கட்சி ஸ்தாபன அமைப்பு ஊடாக அரசியல் தரத்தை உயர்த்துகின்றது. அந்த வகையில் கட்சியில் அல்லாத ஊழியர்கள் பெண்கள் அமைப்பு, மாணவர் அமைப்பு, தொழிலாளர் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள், கலாச்சார அமைப்புகள், —— என எண்ணற்ற வடிவத்தில் இவர்களை ஸ்தாபனப்படுத்தி அரசியல் மயப்படுத்தப்படுகின்றனர். இங்கு அரசியல் மயப்படுத்தலை செய்வோர் கட்சி ஊழியர்களாக இருக்கின்றனர். இது பகிரங்கமாகவும், இரகசியமாகவும் நிலமைகள் உடன் கையாளப்படுகின்றன. அதுபோல் இப்படி உள்ள வெகுஜன அமைப்புகள் கட்சியின் நேரடியான கட்டுப்பாட்டுக்குட்பட்டதும், சில மறைமுகக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகவும் இருக்கின்றது. இது அவ் அமைப்பின் அரசியல் வளர்ச்சியுடன் இரு ஸ்தாபன வடிவத்தில் உள்ள உறவு தொடர்பான நிலைப்பாடுகள் சம் மந்தப்பட்டது.

அடுத்து கரிகாலன் குறிப்பிடும் சொந்த நலன் என்பது பொருளாதார நலன்களை மட்டும் குறிப்பிடவில்லை என்கின்றார். அங்கு சொந்த நலன் என்பது அனைத்தும் பொருளாதார நலன் சார்ந்ததே. பொருளாதார நலன் சாராத, வர்க்கம் சாராத ஒரு சொந்த நலனை காட்ட முடியுமா? ஏதோ வர்க்கமற்ற கம்யூனிஸ சமூகம் உருவாகி விட்டது என்ற கனவோ என்னவோ புரியவில்லை.

"லெனினியக் கட்சிகள், ஸ்தாபனங்கள் கூட்டுத்தலைமை உடையன என்று பிரகடனப் படுத்தினாலும் நடைமுறையில் அது உண்மை அல்ல. நடைமுறையில் அங்கு தனிநபர் அதிகாரங்களே நிலவின, நிலவுகின்றன. லெனினியக் கட்சியின் தலைமைக்கு ஒருவர் வருவாராயின் அவருக்கு எதிராக ஒரு கவிழ்ப்பு நடந்தால் ஒழிய அவர் சாகும்வரை தலைவராக இருந்தே சாவார். இதற்கு லெனின், ஸ்டாலின், மாவோ, சண்முகதாசன் போன்ற எத்தனையோ பேரைக் நாம் உதாரணமாகக் காணலாம். ஒரு முறை தலைமையில் இருந்த அங்கத்தவர்கள் கீழே இறங்கிப் போய 'கீழ் அணியில் வேலை செய்வதற்குரிய ஸ்தாபன அமைப்பு விதிகள் அங்கே இல்லை. எந்த ஒரு நபரும் நீண்டகாலம் மேல் மட்ட பொறுப்புக்கள் மட்டுமே செய்து கொண்டிருக்க முடியாதவாறு புதிய விதிகள் உருவாக்க வேண்டும் எந்த ஒரு நபரும் தனக்குத் தரப்பட்ட உயர்மட்டப் பொறுப்புக்கள் தான் மீண்டும் கீழ் மட்டத்திற்கு சென்று வேலை செய்வதிலிருந்து தன்னைக் காப்பாற்ற மாட்டாது என உணர வேண்டும். அப்போதுதான் ஒருவர் தனது சொந்த நலன்களைத் தான் சார்ந்த ஸ்தாபனத்தின ஊடாக அடைவதை தடுப்பதற்கான அடிப்படையை ஏற்படுத்த முடியும். ஆக அதிகாரங்கள் உடைய பொறுப்புகளை ஸ்தாபனத்தின் தனிநபர்கள் குறிப்பிட்ட காலமே வகிக்கக் கூடியவாறு விதிகள் உருவாக்கப் படவேண்டும்.

தகுதியும், திறமையும் உடையவர்கள் ஸ்தாபனத்தின் உயர் பொறுப்புகளை ஏற்பது நல்லது தானே எனறு சிலர் வாதிடலாம். மாறாக தகுதியும் திறமையும் உடையவர்கள் ஸ்தாபனத்தின் உயர் பொறுப்புகளை வகித்தால் கட்சிக்கு வெளிப்படுத்துவார்களா? கீழ் அணியில் இருந்து தமது பங்களிப்பை வழங்க முடியாதா?" எனக் கரிகாலன் தனது திரிபு வாதத்தை மிகச் சிறப்பாக கையாள நரித்தனத்துடன் முனைகின்றார். கரிகாலன் யாருக்காக வக்காலத்து வாங்குகின்றார் என நாம் பார்ப்பின் ஏகாதிபத்தியங்கள் கூறும் ஜனநாயகத்தைக் காப்பாற்றவும், வர்க்கப் போராட்டமே பிரதான கண்ணி என்பதை நிராகரிப்பதையுமே. இது தொடர்பாக கரிகாலன் புதிய கவலையுடன் எழுப்பும் அதே நேரம் இது முன்பே லெனினுக்கு அவர் சார்ந்த மத்திய கமிட்டிக்கு எதிராக எழுப்பப்பட்டு லெனினால் முறியடிக்கப் பட்டவையே. லெனின் குறிப்பிடுகின்றார் தலைவர்கள் எப்போதும் நிரந்தரமான வர்கள் ஏன்னின் அவர்கள் நீண்ட நெடிய பல போராட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்டவர்கள்.

பல நீண்ட நெழிவு சுழிவான போராட்டத்தின் ஊடாக உருவாகும் தலைவர்களை தள்ளி விட முனைபவர்கள் யார்? அழித்து விட முனைபவர்கள் யார்? எதிர் புரட்சி வாதிகளே. லெனின் தனது அரசியல் வரலாற்றில் 2ம் அகிலத்தின் எப்போதும் சிறுபான்மையாக இருந்தார். அதில் இருந்து விலகி தனது அரசியலை தனித்துவமாகப் பிரதி செய்தவர். அதுபோல் சோவியத்தில் போல்சுவிக், மென்சுவிக் கட்சிகள் பிரிய முன்பு லெனின் பெரும்பான்மையாக இருந்ததில்லை. லெனினின் தலைமை போல்சுவிக் வரலாற்றுடன்தான் தொடங்குகிறது. இக்காலம் முதல் 1917 வரை லெனினின் போன்ற தலைமையை, கீழ் சென்று வேலை செய்யக் கோருவது, தலைமைப் பொறுப்பில் இருந்து விலகக் கோருவது யார்? என நாம் பார்ப்பின் எதிர்புரட்சி வாதிகளே. அவர்களின் தேவையே அது. ஸ்டாலின் ஆட்சியில் ஸ்டாலின் மரணிப்பதை, விலகுவதை கோரும் கரிகாலன் யாரைப் பாதுகாக்க முனைகின்றார் என்றால் ரொஸ்கி, புகாரின், குருசேவ் கும்பல்களையே.

மாவோ சீனக் கம்யூனிஸ் கட்சியில் 20ம் நூற்றாண்டுகளில் இணைந்த போது அவர் தலைவராக இருந்ததில்லை. நீண்ட படையெடுப்புடன்தான் கட்சியின் பெரும்பான்மையைப் பெறுகின்றார். மாவோவைத் தலைமையில் இருந்து இறக்க விரும்பியோர் யார்? திரிபு வாதிகளே. அதாவது டெங் கும்பல் வகையறாக்களே. என்ன கரிகாலன் விதிவிலக்கா? சண்முகதாசனைக் குறிப்பிடுகிறார். சண்முகதாசனின் கட்சி ஒரு புரட்சிகர கட்சியாக தன்னை மாற்றிக் கொள்ள முடியாது போனதுடன் அது சிதைந்து பல கூறுகள் பல வடிவங்களாக மாறின. சண்முகதாசனின் அமைப்பு ஒரு சில தனிநபர்கள் கொண்ட ஒரு வடிவமே ஒழிய கட்சி அல்ல. கட்சி என்பது பரந்த மக்களை தன்னகத்தே அணிதிரட்டும் செயற்பாட்டை கொண்டதாக இருக்க வேண்டும். ஒரு கட்சி அமைப்பு அதில் உள்ள நபர்கள் தவறிழைக்கும் பட்சத்தில் அதைத் தடுப்பது எப்படி? கட்சி ஊழியர்கள் மத்தியில் வேலை செய்வதை உறுதிப் படுத்த வேண்டும். தொடர்ச்சியான வர்க்கப் போராட்டத்தை கட்சிக்குள் நடத்த வேண்டும். ஒரு போராட்டத்தில் வர்க்கப் போராட்டம் எவ்வளவு பிரமாண்டமான மாறுதலைச் செய்கின்றதோ அதை கட்சிக்குள்ளும் இருந்தே மொத்த சமூகம் மீது தவறுகள், வர்க்க விரோத சக்திகள் துடைத்தெறியப் படுகின்றனர். இது ஆட்சியைப் பெற்ற பின் பிரதான பணி மட்டுமின்றி கம்யூனிஸ சமூகம் உருவாக்கப் படும் வரை 20 முறையல்ல 30 முறை நடாத்தப்பட வேண்டும். சீனா, சோவியத்தின் தோல்வி வர்க்கப் போராட்டத்தை நிராகரித்ததே. ஸ்ராலின் போன்றோரின் தவறுகள் வர்க்கப் போராட்டத்தை சோவியத்துக்குள் குறைத்து மதிப்பிட்டதும் மக்களை சார்ந்து நிற்கத் தவறியதும் தனது பாட்டாளி வர்க்கப் சொந்த விருப்பின் மீது சார்ந்து நின்றதுமே. இவைகூட அமைப்புக்குள்ளான வர்க்கப் போராட்டத்தை நடத்துவதை குறிக்கோளாகக் கொண்டு வரையறுக்க வேண்டும். கம்யூனிஸ சமுதாயம் உருவாகும் வரை வர்க்கப் போராட்டமே பிரதான வடிவம் என்பதை கட்சித் திட்டம் மேலும் சிறப்பாக வரையறுக்க வேண்டும்.

கட்சி கூட்டுத்தலைமை இல்லை என்ற வாதம் சுத்த அபத்தமானது. புரட்சியில் வெற்றி பெற்ற, வீறு நடை போடுகின்ற அனைத்துக்கட்சியும் கூட்டுத் தலைமையைக் கொண்டே செயற் படுகின்றன. அங்கு ஒருவர், ஒன்றுக்கு மேற்பட்டோரின் கருத்து ஆதிக்கம் இயல்பானதே. எல்லா மனிதரும் ஒரே மாதிரி ஒரே அளவு சிந்தனையைக் கொண்டிருப்பது இல்லை. இது மத்திய குழுவுக்கும் பொருந்தும். ஆனால் எல்லாம் விவாதிக்கப் படுகின்றன. கூட்டுத்தலைமையை நிராகரிக்கின்ற போக்கு அல்லது சொந்த நலனை (இது வர்க்கம் சார்ந்தது) கட்சியில் ஒருவர் அல்லது குழு செய்ய முனையும் போது வர்க்கப் போராட்டமே அங்கு நிகழ்த்தப்பட வேண்டும். வெறும் விதிகள் எதையும் செய்து விடாது. வர்க்கப் போராட்டத்தை நிராகரிப்பவர்களே வெறும் விதிகளை பெயரளவில் கோருவதும் பேசுவதும் ஆரம்ப முதல் புரட்சி ஆட்சியை பிடிக்காது தடுக்கவே.

ஒரு கட்சியில் தலைவர் 5 வருடம் இருக்கலாம் எனின் சீனா, சோவியத் எதிலும் புரட்சி நடைபெற்று இருக்க முடியாது. ஒரு புரட்சி சரியாக முன்னெடுக்கப்பட முன் நிபந்தனையானது ஒரு கட்சி. கட்சி இருந்தால் மட்டும் போதாது. சிறந்த தலைவர்களும் இருக்க வேண்டும். தலைவர்கள் தவறு இழைக்கும் பட்சத்தில் கட்சியே முற்றாக அழிகின்றது. சிறந்த தலைவர்கள் வானத்திலிருந்து விழுபவர்கள் அல்ல. மாறாக நீண்ட பல தியாகங்களுடன் கீழ் இருந்து வேலை செய்து உருவாகுபவர்களே. புரட்சிக்கு ஒருகட்சி தேவை. அது போல் சிறந்த தத்துவத்தால் உருவான சிறந்த தலைவர்களால் கட்சி வழிநடத்தப் படவும் வேண்டும். தலைவர்கள் தமது பொறுப்புகளிலிருந்து கீழிறங்கி வேலை செய்ய வேண்டும். அது ஒரு புரட்சியாளனுக்கு பெரிய விடயமல்ல. பிரச்சனை தலைமையை ஏற்க அவரை விட சரியான தத்துவத்தைக் கொண்ட சிறந்த தலைவர்கள் இருக்க வேண்டும். அதுவே தலையாய பிரச்சனை. எல்லோரையும் விட சிறந்த தலைவர்களே நாட்டை சிறப்பாக வழிநடத்த முடியும். உதாரணமாக ஒரு சிற்பத்தை, ஒரு ஓவியப் படத்தை பலர் தனித்தனியாக படைக்க முடியும். ஆனால் அதில் ஒன்றே சிறப்பானதாகவும் பிரமிக்கத்தக்க தாகவும் இருக்கும். அவ் ஓவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடாது எனக் கூறி வேறு வேலைக்கு அனுப்பின் ஓவியக் கலையின் அழிவுக்கே வழி யிடப்படும். நீ ஐந்து வருடம் வரைந்தால் போதும் என்பது கலைஞனின் கண்டுபிடிப்புக்கள் பரப்பப்படாது தடுத்து அக்கலை சீரழிக்கப்படுகின்றது. இதை யார் செய்வார் எனின் அக்கலையை எதிர்க்கின்ற ஓவியன் போல் நடிப்பவனே.

சிறந்த ஓவியனை அல்லது சிற்பியை எல்லாச் சிற்பிக்கும் வழிகாட்டும் ஒரு தலைவராக நியமிக்க வேண்டும். அங்கு எல்லாரின் திறமைகளையும் மையப்படுத்த வேண்டும். தலைவர் அகங்காரமாக மற்றைய திறமை களை நிராகரிப்பின் அவருக்கு எதிராக போராட வேண்டும். இதுவே பிரச்சனை. தலைவர்கள் எழுந்தமானமாக ஒரு கூட்டத்தில் உருவாகுபவர்கள் அல்ல. மாறாக சிறு சிறு போராட்டங்களில் இருந்து மிக நீண்ட போராட்டங்களினூடாக மக்களால் உருவாக்கப்படுபவர்கள். மக்களை தட்டி எழுப்புவதன் ஊடாகவே தலைவர்களின் சரி, பிழைகளை சோதிக்க முடியும். அதுவே வர்க்கப் போராட்டம். இங்கு வர்க்கப் போராட்டம் என்பது ஆட்சியை கைப்பற்று வது மட்டும் அல்ல. அதன் பின் தொடரப்படவும் வேண்டும்.

" அரசுக்கும் வர்க்கங்களுக்கும் இடையிலான மதிப்பீட்டில் அரசை வெறுமனே வர்க்கங்களின் கருவியாக மட்டுமே கணிதத் தேற்றம் போல் பிரயோகிப்பது தவறு— பொருளாதார வளர்ச்சி குன்றிய பல நாடுகளில் அரசு வர்க்கங்களின கருவியாக செயற் படுவதற்கு மாறாக அரசுக்கு தகவமைந்து வர்க்கங்கள் இயங்க வேண்டிய தேவையுள்ளது. இவை இரண்டிற்கும் இடைமி லான உறவை ஒன்றின் கருவி மற்றொன்று என்று நேரடியாகப் பார்ப்பது தவறு——".

"— ஸ்ரீ லங்கா போன்ற நாடுகளில் அரசு என்பது வர்க்கங்களின் மேல் தீர்மானகரமான பங்கைச் செலுத்த கூடிய நிறுவனம். அங்கே அரசு என்ற இயந்திரத்தின் மீது வர்க்கங்கள் காத்திரமான பங்கை ஆற்றி விட முடியாது. சில சமுதாயங்களில் வர்க்கங்கள் அரசின் மேல் மேலாதிக்கம் புரிவதையும் சில சமுதாயங்களில் அரசுகள் வர்க்கங்களின் மேல் மேலாதிக்கம் புரிவதையும் நாம் அவதானிக்கலாம்—— எதுவும் எதன் மீதும் நேரடியான ஆதிக்கம் கொள்ளவில்லை என நாம் கொள்ள வேண்டும். " எனக் கரிகாலன் தொடர்கின்றார்.

மார்க்சியத்தை ஆய்வு செய்வதாகக் கூறிக் கொண்டு மார்க்சியத்தின் அரிச்சுவட்டையே புதைகுழிக்கு அனுப்ப முனைகின்றார். இதிலிருந்தே வர்க்கமற்ற புலிகளை முன்வைத்து இச்சமூக அமைப்பை பேண முனைகின்றார். சோவியத்தில் வர்க்கமற்ற சமூகம் உருவாகி விட்டதாக குருசேவ், பிரஸ்னேவ் கூறி எல்லாமக்கள் அரசு எனக்கூறி அரசு வர்க்க மற்றது என பிதற்றி திரிபை புகுத்தி முதலாளித்துவத்தை மீட்டதை நாம் அறிவோம். கரிகாலன் என்னவெனின் புரட்சியே நடக்க முன் வர்க்கமற்ற அரசு உள்ளதாக கூறி போராட்டத்தை அரசுக்கு எதிராக மாற்றுவதை தடுக்க முனைகின்றார். அதே நேரம் இச்சமூக அமைப்பை பாதுகாக்க முனைகினறார்.

மார்க்சிஸ்டுக்கள் போராட முனைவது வர்க்கமற்ற சமுதாயத்தை

தை கடந்து அரசு உதிர்கின்ற காலகட்டத்தில் தான் வர்க்கமற்ற சமூகம் பரிணமிக்க முடியும். சுரண்டலற்ற சமூகம் பரிணமிக்க வேண்டும். ஆனால் கரிகாலன் இந்த சமூக அமைப்புக்குள் வர்க்கமற்ற அரசை காட்ட முனைவது திரிபு இல்லாமல் என்ன?—இது எல்லா மக்களின் அரசு எல்லா மக்களின் ஜனநாயகம் என ஏகாதிபத்தியங்கள், இவ் வரசுகள் கூறுவதை அப்படியே மார்க்சியம் பூசி வாந்தி எடுக்கின்றார். அவ்வளவே.

பொருளாதாரம் குன்றிய நாடுகளில் அதாவது மூன்றாவது உலக நாடுகளின் அரசுகள் வர்க்க அரசு இல்லையாம். இது தொடர்பாக முன்பு நாம் கரிகாலன் கட்டுரையில் மீண்டும் மீண்டும் விவாதித்தோம். மூன்றாம் உலக நாடுகள் அனைத்தும் இன்று எந்த விதிவிலக்கும் இல்லாமல் நவகாலனியாக ஏகாதிபத்தியத்தின் கீழ் உள்ளது. இவ் நவகாலனித்துவ நாடுகளின் அரசுகள் ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்யும் வகையில் உள்ளது. அதாவது தரகு முதலாளித்துவமாகவும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகள் ஆகவும் உள்ளன. இவை இரண்டையும் கொண்ட அரசுகளின் இருப்பை மட்டுமே ஏகாதிபத்தியங்கள் அங்கீகரிக்கின்றன. இதற்கு மாறாக கரிகாலன் அரசு வர்க்கத்தின் கருவி அல்ல என வாதிட முற்படுவது இவ்வரசுகளைக் காப்பாற்றவே.

தரகு முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவ உற்பத்தியை (பொருளாதாரத்தை) மட்டும் அங்கீகரிக்கின்ற ஒரு அரசாகவே உள்ளது. உதாரணமாக தேசிய முதலாளித்துவ உற்பத்திகளை இன்று கட்டுப்படுத்துதல், அல்லது அழித்தல் விழுங்குதல் என, இருந்து வந்த முதலாளித்துவ சொத்துக்கள் நொருக்கப்பட்டே வருகின்றன. தேசிய சுய உற்பத்திகள் இன்று பல்நாட்டுக் கம்பனிகளால் நிறுத்த நிர்ப்பந்திக்கப்பட்டு நிறுத்தப்பட்டு வருகின்றன. இது இலங்கை முதல் உலகெங்கும் பல ஆதாரத்துடன் எம் கண்முன் நீளக் காண முடிகின்றது. அப்படியாயின் இதை நடைமுறைப்படுத்தும் அரசு எது?. அது தரகு முதலாளித்துவ அரை நிலப்பிரபுத்துவ அரசே.

இலங்கை அரசு வர்க்கங்கள் மீது ஆதிக்கம் செலுத்த முடியும் என்கிறார். ஆனால் வர்க்கங்கள் அரசின் மீது வர்க்க ஆதிக்கம் செலுத்த முடியாது என்று கூறும் கரிகாலன் நரித்தனமான வகையில் தனது திரிபை புகுத்த முனைகின்றார். எல்லா வர்க்கங்களையும் ஒரே தட்டில் வைத்து இவ் வர்க்க இருப்பை காப்பாற்ற முனைகிறார். அரசு வர்க்கங்கள் மீது ஆதிக்கம் செலுத்த முடியும் என்பது எந்த வர்க்கம் மீது என்பதை சொல்லவில்லை. அது போல் வர்க்கங்கள் அரசின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது என்கிறார். அது எந்த வர்க்கம்?. இது கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்க சொல்ல முனையும் வாதத்தின் ஊடாக இச்சமூக அமைப்பை பேண மார்க்சியத்தை திரித்துப் புரட்டும் கோமாளித்தன மான செயற்பாடே.

அரசு வர்க்கங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் என்கின்ற போது தரகு, நிலப்பிரபுத்துவ பிரிவின் மீது சாத்தியமே இல்லை. அரசினால் முடியுமா இன்று அந்நிய தரகு நிறுவனங்களை அகற்ற?. உள்ளூர் உற்பத்தி உள்ள பொருட்களின்

எனில் அரசே அதுவாகவும் அது சார்ந்தும் உள்ளது. அவர்களின் பிரதிநிதிகளே அரசை ஆள்கின்றனர். வர்க்கங்கள் அரசின் மீது ஆதிக்கம் புரிய முடியாது என்கின்ற போது தரகு நிலப்பிரபுத்துவ பிரிவுகள் ஆதிக்கம் புரிய முடியாதா?. ஏகாதிபத்திய தரகு முதலாளிகள் அரசுகளிடம் விரும்பியதை செய்ய முடியாது உள்ளதா?. அரசுகள் தரகு, நிலப்பிரபுத்துவ பிரிவுகளால் உள்ள போது இவ் வர்க்கமே அரசாகவும் உள்ளது.

அரசு சுயாதீனம் என்பது கிடையாது. ஒவ்வொரு மனிதனின் ஒவ்வொரு செயற்பாடும் வர்க்க உலகம் சார்ந்ததே. அரசு என்ற கூட்டுமையம் வர்க்க உலகம் சார்ந்ததே. சுயாதீனமானது என்பது கற்பனையானது. அது ஒரு வர்க்கம் சார்ந்ததே. அரசுகள் எப்படி உருவாகின என்பதே இதற்கு பதில் அளிக்கிறது.

" செய்யப்பட வேண்டியது வர்க்கப் போராட்டம் மட்டுமா? அரசு என்ற சமுதாய வளர்ச்சிக்குத் தடையான இயந்திரத்துக்கு எதிரானது இல்லையா?—வர்க்கப் போராட்டத்தின் போது அல்லது கம்யூனிச சமுதாயத்தில் அரசு உதிர்ந்து விடும் என்கிறார்கள். அது நடைபெறவில்லை. அரசு தானாக உலர்ந்து உதிர்ந்து விட மாட்டாது. உலர்ந்து உதிர்ந்து விடுவது என்பது தனக்குள்ளேயே நடக்கும் மாற்றத்தைக் குறிக்கின்றது. அரசு இயந்திரம் என்பது தனக்குள்ளேயே நடக்கும் மாற்றத்தால் இல்லாது ஒழிந்து போக மாட்டாது. மாறாக வெளிச்சக்திகள் செயற்பாட்டிலேயே இல்லாது ஒழிக்கப்படும். —

அரசு என்ற சமுதாய வளர்ச்சிக்கு தடையாக உள்ள இயந்திரத்துக்கு எதிராக நாம் ஒரு புரட்சிகர ஸ்தாபனத்தை முன்னிறுத்த வேண்டும். — அது (இங்கு அரசைக் குறிக்கும்) தானாக மடியும் என்றார்கள். அதுவும் நடைபெறவில்லை— . ஆக சமுதாய வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் சகல அம்சங்களுக்கும் எதிராக போராடும் போது அரசு இயந்திரத்துக்கு எதிராகவும் போராட வேண்டியுள்ளது. ஆகவே ஒரு புரட்சிகர ஸ்தாபன மானது ஒரு அரசைக் கைப்பற்றவோ அன்றி அரசு போன்ற ஒரு நிறுவனத்தை உருவாக்குவதையோ திட்டமாகக் கொண்டு போராடக் கூடாது. எப்பவும் புரட்சிகர ஸ்தாபனம் அரசு என்ற இயந்திரத்துக்கு எதிராக தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். இதனை சிலர் அராஜகவாதம் (அழுத்தம் எம்முடையது) என்று முத்திரை குத்தலாம்." — சமுதாயத்தில் ஒவ்வொரு கால கட்டத்திற்கும் தேவையான நிர்வாக அமைப்புகள் நிறுவப்பட வேண்டும். நிர்வகிக்கப்பட வேண்டும். மாறாக அது இன்றைய இறுகிய மையப்படுத்தப்பட்ட வடிவத்தில் இருக்கக் கூடாது. — " என கரிகாலன் தனது முதலாளித்துவ கோட்பாட்டை திரிபுவாதத்தின் ஊடாக உயர்த்துகின்றார். அரசு உதிர்வதில்லை என மார்க்சிய மூலவர்கள் சொன்னதாக திரித்துப் புரட்டுகிறார். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என நாம் பார்ப்போம்.

"(ஒரே நாட்டில் கூட ) தூக்கி யெறியப் படுவதால் அதன் எதிர்ப்பை பத்து மடங்கு அதிகரித்திருக்கும் ஒரு சக்தி வாய்ந்த

*தீர்க்கமான, தீர்மானகரமான, மிகவும் ஈவிரக்கமற்ற ஒரு யுத்தம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகும். முதலாளித்துவ வர்க்கத்தின் சக்தி அதன் சர்வ தேச மூலதனத்தில் மட்டுமல்ல, முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வதேசிய தொடர்புகளின் பலத்திலும் நம்பகமான தன்மையிலும் மட்டுமல்ல, பழக்க வழக்கங்களின் சக்தி வாய்ந்த பிடிப்பிலும் சிறு உற்பத்தியின் பலத்திலும் கூட இருக்கின்றது. ஏனெனில் துரதிருஷ்டவசமாக உலகில் இன்றும் மிகப் பரந்த அளவிலான சிறு உற்பத்தி இருக்கிறது. இடையறாதும், தினந் தோறும், மணிதோறும், தன்னியல் பாகவும் ஒரு திரளான அளவிலும் முதலாளித்துவம் முதலாளித்துவ வர்க்கத்துக்கான தோற்றுவாய்க்கும் காரணமாக சிறு உற்பத்தி இருக்கின்றது. இந்தக் காரணங்களினால் எல்லாம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இன்றியமையாததாக இருக்கின்றது. சளையாத கட்டுப்பாடான உறுதியான, வெல்லற்க மற்றும் திடசித்தம் ஆகியவற்றைக் கோரும் ஒரு யுத்தமின்றி, நீண்ட உடும்புப் பிடியான மற்றும் ஜீவ மரண" யுத்தமின்றி முதலாளித்துவத்தின் மீது வெற்றி சாத்தியமில்லை."*

*(லெனின்: இடதுசாரி கம்யூனிஸம்)*

*"அரசு உலர்நது உதிர்கிறது" என்னும் தொடர் நன்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஏன்எனில் இத்தொடர் இந்த நிகழ்ச்சிப்போக்கின் படிப்படியாய் நடந்தேறும் தன்மை, தன்னியல்பாய்த் தானே நடந்தேறும் தன்மை ஆகிய இரண்டையும் குறிப்பிடுவதாய் உள்ளது. பழக்கத்தால் மட்டுமே இதுபோன்ற விளைவு ஏற்பட முடியும், ஐக்கியப்பாட்டிற்கு இடமின்றி நிச்சயம் ஏற்படவும் செய்யும். ஏன் எனில் சுரண்டல் இல்லாத போது, ஆத்திரம் உண்டாக்கக் கூடியதும் கண்டனத்தையும் காலத்தையும் எழச் செய்து அடக்க வேண்டியதற்கான தேவையை தோற்றுவிப்பதும் இல்லாத போது, மக்கள் எப்படித் தயக்கமின்றி சமுதாய ஒட்டுறவுக்கு அவசியமான விதிகளை பற்றியொழுகப் பழகிக் கொண்டு விடுகிறார்கள் என்பதற்கு லச்சோப லட்சக் கணக்கான எடுத்துக் காட்டுகளை நம்மைச் சுற்றிலும் காண்கின் றோம்.*

*(அரசும் புரட்சியும்–லெனின்)*

*வர்க்கங்கள் ஒழியும் போது அரசும் ஒழிந்துவிடும் என்று தான் மார்க்சியம் எப்போழுதுமே போதித்து வந்திருக்கிறது. டுரிங்குககு மறுபபு எனும் நூலில் "அரசு உலர்ந்து உதிர்வது" பற்றிக் கூறும் புகழ் பெற்ற வாசகம் அராஜக வாதிகளைச் சாடுவது அவர்கள் திடுதிப்பென "ஒரே நாளில்" அரசை ஒழித்து விடலாமென உபதேசிக் கிறார்கள் என்பதற்காகவே அன்றி, அரசு ஒழிவதை ஆதரிக்கிறார்கள் என்பதற்காக அல்ல*

*(அரசும் புரட்சியும்–லெனின்)*

*கம்யூனிஸ சமுதாயத்தில் தான் – முதலாளிகளுடைய எதிர்ப்பு அடியோடு நசுக்கப்பட்டு, முதலாளி கள் மறைந்து போய், வர்க்கங்கள் இல்லாமல் போய்விடும் (அதாவது, சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே சமுதாய உற்பத்திச் சாதனங்களுடன் அவர்களுக்குள்ள உறவு சம்மந்தமாய் எந்தப் பாகுபடும் இல்லாமற் போய்விடும்) அப்போ மட்டும் தான்*

*பேசுவது சாத்தியமாகிறது"*

*(அரசும் புரட்சியும்–லெனின்)*

*இல்லை, ஜனநாயகமும், சிறுபான்மையோர் பெரும் பான்மையோருக்கு கீழ்ப் படிதலும் ஒன்றல்ல சிறுபான்மையோர் பெரும்பான்மை யோருக்கு கீழ் படிதலை அங்கீகரிக்கும் அரசுதான ஜனநாயகம் எனப்படுவது; அதாவது ஒரு வர்க்கம் பிறிதொன்றின் மீது, மக்கள் தொகையில் ஒரு பகுதி பிறிதொன்றின் மீது, முறைப்படி பலாதகாரதஹைப் பிரயோகிப்பதற்கான ஒழுங்கமைப்பே ஜனநாயகம் எனப்படுவது.*

*(அரசும் புரட்சியும்–லெனின்)*

*கம்யூனிஸ சமுதாயத்தின் முதல் படி நிலையில் (வழக்கமாக சோசலிசம் என்றழைக்கப் படுவது) முதலாளித்துவ உரிமை அதன் முழுமையில் ஒழிக்கப் படவில்லை. ஆனால் ஒரு பகுதி மட்டுமே, எதுவரை பொருளாதாரப் புரட்சி எட்டியிருக்கிறதோ அதற்கு நேர்விகிதத்தில் மட்டும், அதாவது உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்து மட்டுமே ஒழிக்கப்பட்டிருக்கிறது. "முதலாளித்துவ உரிமை" அவற்றை தனி நபர்களது சொத்துடமையை அங்கீகரிக்கிறது. சோசலிசம் அவற்றை சொத்துடமையாக மாற்றுகின்றது. ஒரு குறிப்பிட்டளவு மேலும் ஒரு குறிப்பிட்டளவு மட்டுமே முதலாளித்துவ உரிமை வீழ்த்தப்படுகிறது. (அரசும் புரட்சியும்–லெனின்)*

*ருஸ்சியாவில் தற்போதுள்ள நமது அமைப்பு முறையில் கம்யூனிஸத் தன்மையுடையது ஏதாவது இருக்குமானால் அது சேவை உழைப்புகள் (சப்போத்னிக்குகள்), மட்டுமே. மற்றெதுவும் சோசலிசத்தை உறுதிப்படுத்துவதற்கான முதலாளித்துவத்திற் கெதிரான ஒரு பேரம் தவிர வேறில்லை. ——*

*(ரு.பொகட்சி (போ) இன் மொஸ்கோ மகாநாட்டில் சப்போத்னிக்குகள் பற்றி அறிக்கை–லெனின்) "அதிகார எதிர்ப்பாளர்கள் அரசியல் அதிகாரத்தை எதிர்த்து, கூச்சலிடுவதோடு நிறுத்திக் கொண்டால் என்ன? வருகிற சமுதாயப் புரட்சியின் விளைவாய் அரசும் அதனுடைய அரசியல் அதிகாரமும் மறைந்து விடும் என்று, அதாவது பொதுப்பணிகள் அவற்றின் அரசியல் குணத்தை இழந்து சமுதாய நலன்களைக் கண்காணித்துக் கொள்ளும் வெறும் நிர்வாகப் பணிகளாகி விடும் என்று எல்லா சோஷலிஸ்டுக்களும் ஒத்துக் கொள்கிறார்கள் ஆனால் அதிகார–எதிர்ப்பாளர்கள் அரசியல் வழியிலான அரசினை, அதைப் பெற்றெடுத்த சமூக உறவுகள் அழிக்கப்படுவதற்கு முன்பே, ஒரே மூச்சில் உடனடியாக அழித்துவிட வேண்டுமெனக் கோருகின்றனர். அதிகாரத்தை ஒழித்து விடுவதே சமுதாய புரட்சியின் முதற் செயலாயிருக்க வேண்டுமெனக் கோருகிறார்கள்.*

*"இந்தக் கனவான்கள் எப்போதாவது புரட்சியைப் பார்த்திருப்பார்களா? புரட்சியைப் போல அதிகார ஆதிக்கம் செலுத்தும் எதுவுமே இருக்க முடியாது. துப்பாக்கிகளும் துப்பாக்கிக் குத்தீட்டுகளும் பீரங்கிகளும் கொண்டு– இவை எதுவுமே மிகக் கடுமையான அதிகார ஆதிக்கச் சாதனங்கள் – ஒரு பகுதி மக்கள் எஞ்சிய*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net



*படைப்பலம் பிற்போக்கு வாதிகளிடத்தே உண்டாகும் குலை நடுக்கப் பயங்கரத்தின் மூலமாய் தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்டாக வேண்டும். பாரிஸ் கம்யூன் முதலாளித்துவ வர்க்கத்தினருக்க எதிராய் ஆயுதமேந்திய மக்களுடைய அதிகாரத்தை பிரயோகிக்காது இருந்தால் அதனால் ஒரு நாளுக்கு மேல் நீடித்திருக்க முடியுமா? அதிகாரத்தை பிரயோகித்த தென்று கண்டிப்பதற்குப் பதில் இந்த அதிகாரத்தை மிகச் சொற்பமாகவே உபயோகித்தது என்றல்லவா அதன் மீது குற்றம் சாட்ட வேண்டும்? ஆகவே இரண்டில் ஒன்று தான் உண்மை: ஒன்று அதிகார– எதிர்ப்பாளர்கள் என்று பேசுகிறோம் என்பது தெரியாமலே பேசிக் கொண்டிருக்கிறார்கள் – அப்படியானால் அவர்கள் குழப்பம் உண்டாக்குவதைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை, அல்லது அவர்கள் தெரிந்தே பேசுகிறார்கள் என்றால், பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியத்துக்குத் துரோகம் புரிகின்றனர். இரண்டில் எதுவாயினும், அவர்கள் பிற் போக்குப் பணியாற்றுவோரேயாவர்" (பக்கம் 39)*

*(அரசும் புரட்சியும்–லெனின்)*

*"போல்ஷிவிக்குகள் எவ்வளவு தான் ஏளனமாகப் பேசினாலும் சரி– பழைய இயந்திரத்தை விலக்கி இன்னொன்றை அதனிடத்தில் நிறுவுவதல்ல விஷயம்., அந்தப் பழைய இயந்திரத்தை சீர்திருத்தவது மட்டுமே விஷயமாகும்— ":*

*தோழர் பலாராவின் இந்த வாதங்கள் எல்லாம் முதலாளி வர்க்கத்தின் வாதங்களின் மறுபிரதியாகவும், அதன் வர்க்கப் பார்வையின் ஒரு பிரதிபலிப்பாகவும், வியக்கத்தக்க விதத்தில் பயனற்றவையாகவும் இருக்கின்றன.*

*உண்மையில், ருஷ்யாவில் எங்காவது சோவியத்துக்கள் "பூரண அதிகாரம்" பெற்றுள்ளன என்று கூறுவது (முதலாளிகள் கூறிவரும், தன்னலங் கருதும், வர்க்கச் சார்பான பொய்யைத் திரும்பச் சொல்வதாகும், இல்லையேல் கேலிக்கிடமாகும். பூரண அதிகாரம் என்பது எல்லா நிலத்தின் மீதும், எல்லா வங்கிகள் மீதும் எல்லா ஆலைகள் மீதும் எனப் பொருள்படும். வரலாறு கொஞ்சமாவது தெரிந்தவரும், அரசியலுக்கும் பொருளாதாரத்துக்குமுள்ள தொடர்பு பற்றி விஞ்ஞான பூர்வமான விஷய விபரங்களைக் கொஞ்சமாவது அறிந்தவரும் இந்த "அற்ப" விஷயத்தை "மறந்து போயிருக்க முடியாது."*

*(அரசும் புரட்சியும் – லெனின்)*

*"— நமது நோக்கம் ஒவ்வொரு உழைப்பாளரும் உற்பத்திக்கான உழைப்பில் எட்டு மணி நேரப் பணியை முடித்த பிறகு ஊதியமின்றி அரசுப்பணிகள் ஆற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும். இதற்கான மாறுதல் குறிப்பான இடர்பாடுகள் நிறைந்தது. ஆனால் இந்த மாறுதல் மட்டுமே சோஷலிசத்தின் இறுதி உறுதிப்படுத்தலை உத்திரவாதம் செய்ய முடியும்."*

*(சோவியத் அரசாங்கத்தின் உடனடிப்பணிகள்– லெனின்)*

*" தொழிலாளர் வர்க்கம் பழைய முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து ஒரு இனப் பெருஞ் சுவற்றால் பிரிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் ஒரு தனிநபர் இறந்து போகும் விவகாரத்தில் இறந்தவர் சதாரணமாக தூக்கிச்*

*பழைய சமுதாயம் சிதைவுறும் போது அதன் பிணத்தை சவப் பெட்டியில் வைத்து ஆணி அடித்து சவக் குழியில் புதைத்துவிட முடியாது. நமது மத்தியிலேயே அது உருக்குலைகிறது, பிணம் அழுகுகிறது , நமக்கு நச்சிடுகிறது.*

*(லெனின்– பஞ்சத்தை முறியடிப்பதன் மீதான அறிக்கை)*

*"சோவியத் பெறியியலாளர்கள், சோவியத் ஆசிரியர்கள் சலுகை பெற்றவர்கள் அதாவது மிகவும் அதி உயர் திறனும் மிகச் சிறந்த அந்தஸ்த்தும் உள்ளவர்கள் மத்தியில், சோவியத் ஆலைகளில் உள்ள தொழிலாளர்கள் மத்தியிலும் முதலாளித்துவ நாடாளுமன்ற வாதத்திற்கே உரித்தான முற்றும் முழுதான எல்லா எதிர்மறைத் தன்மைகளும் இடையறாது நெடிய, விப்பிடியான மாற்றம் மீண்டம் மீண்டும் நடத்தும் போராட்டத்தில் பாட்டாளி வர்க்க ஸ்தாபணம் கட்டுப்பாட்டில் மட்டும் சிறுக சிறுக இந்தச் சனியனை வெற்றி கோள்கிறோம்.*

*(லெனின்– இடதசாரிக் கம்யூனிஸம்)*

*"ஒரு கம்யூனிஸ சமுதாயத்திற்கு முதலாளித்துவ சமுதாயத்தில் இருந்து மாற்றமடைவது கம்யூனிசத்தை நோக்கி அது வளர்வது ஒரு அரசியல் ரீதியில் மாறுதலடையும் காலகட்டமின்றி சாத்தியமில்லை. இந்தக் கால கட்டத்தில் அரசு புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக மட்டுமே இருக்க முடியும்.*

*(லெனின்– அரசும் புரட்சியும்)*

*"எல்லாப் புரட்சிகளில் இந்த வரலாற்று அனுபவத்தைத் தான், இந்த வரலாற்றுப் பொருளாதார, அரசியல் படிப்பினையைத்தான் மார்க்ஸ் தனது இரத்தினச் சுருக்கமான, கூர்மையான, தெளிவான வரையறுக்கப் பட்ட சூத்திரமாகத் தொகுத்தது தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்"*

*(லெனின்– சோவியத் அரசாங்கத்தின் உடனடிக் கடமைகள்)*

*"ஒவ்வொருவரிடம் இருந்தும் அவருடைய ஆற்றலுக்கு கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக் ஏற்ப" என்னும் விதியை சமுதாயம் அனுசரிக் கையில் தான், அதாவது மக்கள் தாமே மனமுவந்து தமது ஆற்றலுக ஏற்ப வேலை செய்யும் படி சமுதாய ஒட்டுறவுக்கான அடிப்படை விதிகளைப் பற்றியொழுக அந்த அளவுக்குப் பழகிக் கொண்டு விடும்போது, அவர்களுடைய உழைப்பு அந்த அளவுக்குப் பொருளுற்பத்தி ஆற்றல் மிக்கதாகிவிடும் போதும் தான் அரசு பூரணமாய் உலர்ந்து உதிர முடியும். வேறொருவரை விட நாம் அரை மணிநேரம் அதிகம் வேலை செய்யவில்லையா, வேறொருவரை விட நாம் குறைவாய் சம்பளம் பெறவில்லையா என்று ஷைலாக்கின் கல்நெஞ்சுடன் கணக்கிட்டுப் பார்க்கும்படி நிர்ப்பந்தம் செய்யும் "முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு" அப்பொழுது கடக்கப்பட்டு விடும். அப்பொழுது சமுதாயத்தின் உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கையில் அவரவரும் பெற வேண்டிய அளவை ஒழுங்கு செய்ய வேண்டிய தேவையிருக்காது; ஒவ்வொருவரும் "தமது தேவைகளுக் கோற்ப" தடங்கலின்றி சுதந்திரமாய் எடுத்துக் கொள்வர்.*

*பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வர்க்கப் போராட்டத்தின் முடிவல்ல. ஆனால் புதிய வடிவங்கள் அதன் தொடர்ச்சியாகும் தோற்கடிக்கப்பட்ட ஆனால் துடைத் தெறியப்படாத ஒரு முதலாளித்துவ வர்க்கத்திற் கெதிராக, மறைந்து போகாத எதிர்ப்பைத் தருவதை நிறுத்தாத, ஆனால் எதிர்ப்பை மேலும் ஆழப்படுத்தியுள்ள ஒரு முதலாளித்துவ வர்க்கத்திற் கெதிராக வெற்றி பெற்று அரசியல் அதிகாரத்தை கரங்களில் எடுத்துக்கொண்ட பாட்டாளி வர்க்கத்தால் தொடுக்கப்படும் போரட்டமே பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமாகும்"*

*(லெனின்– சுதந்திரம், சமத்துவம் என்ற முழக்கங்களால் மக்களை ஏமாற்றுவது பற்றி உரைக்கு முன்னுரை)*

மேற்கூறிய ஆசான்களின் வாதங்கள் ஒரு கம்யூனிஸ சமுதாயத்தின் உருவாக்க மிக நீண்ட நெடிய வர்க்கப் போராட்டத்தை தொடர்வதையும் அது பாட்டாளிவர்க்கம் தனது கைகளில் அரசை தக்க வைப்பது அவசியமானது என்பதை காட்டுகின்றது. (அதாவது சோஸலிச சமுதாயத்தில்) மொத்த மக்களின் உடமை முறைக்கும் கூட்டறவு உடமை முறைக்கும் இடையிலான வேறுபாடுகள் நீடிக்கின்றன. தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்குமிடையில் நகரத்துக்கும் கிராமத்திற்கும், உடல் உழைப்பிற்கும், மூளை உழைப்பிற்கும் தேவைக் கோற்றவாறு இல்லாது உழைப்பிற் கோற்றவாறு இல்லாது உழைப்பிற்கு ஏற்றவாறு உதியம், விநியோகம் இருக்கும் வரை செல்வத்தைப் பகிர்ந்து கொள்வதிலும், வெறுபாடுகள் தொடர்கின்றன. இங்கு வர்க்கப் போராட்டம் தொடர்கின்றது. இப் போராட்டம் இத் தன்மை இல்லாது ஒழிகின்ற பொது வர்க்கத்தைப் போல் அரசு அற்றுப் போகின்றது.

இப்படி இருக்க கரிகாலன் மார்க்ஸியத்தின் மீது நடத்தும் தாக்குதல் மார்க்சியத்தை திரிபாக்கி முதலாளித்துவ மீட்க முனை கிறார். அரசு உதிரக்காணவில்லை என்கிறார். சோஸலிசத்தில் ஒரு அரசு உதிர்வது இல்லை. மாறாக அங்கு வர்க்கப் போராட்டம் பிரதானமானது. இவ் சோஸலிச காலகட்டம் சில தலைமுறைக்கத் தொடரும். சோஸலிச கால கட்டத்தின் முடிவிலேயே அரசு உதிரத் தொடர்கிறது. இங்கு அரசு உதிர்வது என்பது நீண்ட நெடிய போராட்டம் அரசுக்குள்ளும் நடைபெறுகின்றது. அது வர்க்கப் போராட்டத்தின் ஊடாக தொடர்கின்றது. அரசை பாட்டாளி வர்க்கம் கைப்பற்றக் கூடாது என்ற கரிகாலனின் வாதம் அப்படியே ஏகாதிபத்தியத்திடம் இருந்து வாந்தி எடுத்ததே. அரசையும் கைப்பற்றக் கூடாது என்ற எதையும் சாதிக்க முடியாது. கரிகாலன் விரும்பியது போல் சோவியத்தில் குருசேவ் எல்லா மக்களின் அரசு எனக் கூறி கதவைத் திறந்த போது (மேல் அட்டவணை பார்க்கவும்) அங்கு பாட்டாளி வர்க்கம் பாதுகாத்த உரிமைகள் புதைகுழிக்கு அனுப்பப்பட்டு உள்ளது. அரசு என்பது ஒரு வர்க்கம் சார்ந்ததே. அரசு எந்த வர்க்க அரசோ அது சார்ந்த சமுகம் இருக்கும். ஒரு புரட்சியில் பாட்டாளி வாக்கம் ஆட்சியைக் கைப்பற்றி முதலாளித்துவத்திடம் (தலையை மாற்றி) ஒப்படைக்கக் ஏகாதிபத்தியங்களே. கரிகாலன் என்ன விதிவிலக்கா.

ஒரு அரசுக் கெதிராக போராட பாட்டாளி வர்க்கம் சார்ந்த அரசை உரவாக்கும் நோக்கம் கொண்டது. அது தனக்கே உரிய வடிவத்தை முன்வைக்கும். இதை அக் கட்சியே செய்ய முடியும். அப்படி இருக்க பெயர் தெரியாத இச் சமுதாயத்தில் உள்ள . யாரோ ஒரு முதலாளித்துவ சிந்தனையாளரை ஆட்சியில் அமர்த்த வேண்டும் என குரல் கொடுப்பது என்பது எந்த வாக்கத்துக்கு கரிகாலன் சேவை செய்கின்றார் என்பதை நாம் அறிய முடியும்.

சோவியத் சரி சீனா சரி ஆட்சியைக் கைப்பற்றிய பின் வர்க்கப் போராட்டம் கட்சியில் தீவிர மடைகின்றது. அங்கு முதலாளித்துவ கட்சிக்குள் இருந்தே திரிபுவாதமாக வெளிப் படுகின்றது. அங்கு கட்சி தொடர்ச்சியான போராட்டத்தை நடத்துகின்றது. கட்சிக்குள் இருவழிப் போராட்டம் பிரதானமாக இருப்பாகவும் இருக்கின்றது. எப்போதும் இதுவே பிரதானமாகவும் உள்ளது. கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் எல்லா முதலாளித்துவ வாதிகளும் கட்சியின் ஏதோ ஒரு கருத்தின் பின் அணிதிரண்ட்டு போராட்டம் கட்சிக்குள் தீவிர மடைகின்றது. இங்கு அரசைக் கைப்பற்ற இரு வர்க்கமும் போராட்டத்தை கட்சிக்குள் தொடர்கின்றது. இது தொடர்ச்சியாக ஒவ்வொரு கணமும் நிகழ்கிறது.

அரசு உதிர்ந்து உலர்வது என்பது தன்னகத்தே தனக்குள் நிகழ்கின்றது. இங்கு அரசு எனகின்ற போது படிமுறை வளர்ச்சியின் ஊடாக நீண்ட போக்குகள் ஊடாக அனைத்து மக்கள் அரசாக மாற்றம் பெறுகின்றன. ஒரு பூ காயாகி பழமாகி பின் உலர்வது என்பது தனக்குள் மாறுகின்றது. தனக்குள் பல போராட்டத்தை நிகழ்த்துகின்றது. இது போல் தான் அருசும் உலாந்து உதிர்கின்றது.

அரசு என்பது ஒரு வர்க்கத்தை அடக்க இன்னுமொரு வர்க்கம் பயன்படுத்தும் அடக்குமுறை கருவியே. அந்த வகையில் பாட்டாளி வர்க்கம் அரசைக் கைப்பற்றவும் தொடர்ந்து அதை பாதுகாக்கவும் சுரண்டும் வர்க்கம் மீது அடக்குமுறை கைக் கொள்ளவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கையாள வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் ஜனநாயகம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமானதே. அது போல் சமத்துவமும் இங்கு அனைத்து வகை முதலாளித்துவ செயற்பாட்டுக்கும் சுதந்திரமும் சமத்துவமும் மறுக்கப்படும். படிப்படியாக அழிக்கப்படும். இது நீடித்த ஒரு வர்க்கப் போராட்டமே. இதை நிகழ்த்த பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு தேவையானது.

இதை எல்லாம் நிராகரிக்கின்ற கரிகாலன் சுரண்டும் வர்க்கம் ஆட்சியை பேண முன்கூட்டியே அரசைக் கைப்பற்ற கூடாது எனவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இருக்கக் கூடாது எனகின்றனர். கட்சிக் கோட்பாட்டின் இறுக்கத்தை இல்லாது ஒழிக்க வேண்டும் என்கிறார். அதாவது குருசேவ் செய்தது போல் (அட்டவணையைப் பார்க்கவும்) செய்ய வேண்டும் என்கிறார். கரிகாலன் கனவுகள் திரிபான கட்சியாக மாறும் போது கரிகாலன் முன்கூட்டி கட்சிகளைத் திரிபாக்க முனையும் முயற்சி அடித்து நொருக்கப்படும். குருசேவ் செய்ததை இன்றே ஆரம்பத்தில் செய்ய முனையும் கரிகாலன் போன்ற முதலாளித்துவ திரிபு வாதிகள் என்ன தான் முக்கினாலும் முடியாது. ஏன் எனில் மக்கள் வரலாற்றை அதன் போலித்தனமான ஜனநாயகக் கூக்குரல்களையும், போலிச் சோஷலிசத்தையும், போலிக் கம்யூனிசத்தையும் கண்டு அதிலிருந்தே தம்மை புரட்சியுடன் இணைக்கின்றனர்.

கரிகாலன் போன்றோரும் அது சார்ந்த மார்க்சிச முகமூடிகளும் எல்லா விடுதலைப் போராட்டத்திலும் உருவாகினார்கள், உருவாகுவார்கள். ஏன எனின் சமுதாயம் வர்க்கங்களாக பிளவுபட்டு உள்ளது. வர்க்க ஆதிக்கத்துக்கு உள்ளானவர்களே மக்கள். பாட்டாளிகளுக்கு எதிராக மட்டுமல்ல முதலாளியின் நண்பனாகவும் தோழனாகவும் நின்று போராட முனைகின்றனர் திரிபு வாதிகள். இதுவே கரிகாலன் போன்ற அவதாரிகள். குருசேவ், டெங், கரிகாலன் என யாரும் சமுதாயத்தில் தவிர்க்க முடியாது தொடர்ந்து உருவாகும் முதலாளித்துவ மீட்பாளர்களே. இவர்கள் மிக அபாயகரமானவர்கள். கரிகாலனின் கருத்தையே கொண்டுள்ள மனிதம், உயிர்ப்பு சந்தர்ப்ப வாதமாக இருந்த படி ஒரு இரு சொற்களால் வெளிவரகின்றனர்.

*"உழைக்கும் மக்களுக்கு உடனடியாக வெறுப்புட்டும் அப்பட்டமான சந்தர்ப்ப வாதம் மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்ப வாதத்தைப் போன்று அபாயகரமானதும் ஊறுவிளைவிக்கக் கூடியதும் அல்ல மூடி மறைக்கப் பட்ட சந்தர்ப்ப வாதம் தனது சந்தர்ப்ப வாத நடைமுறைக்கு உரிய தருணம் வரவில்லை என்றும் இன்ன பிறவாகும் நிருபிக்க அடுக்கடுக்காக மார்க்சிய சொற்றொடர்களைப் பயன் படுத்துகிறது.*

–லெனின்–

இன்று அரசு இயந்திரம் (பொலிஸ், இரானுவம், நிர்வாக அமைப்புகள்—— என அனைத்தும்) மீது வர்க்கம் (தரகு, நிலப்பிரபுத்துவம்) ஆதிக்கம் செலுத்த வில்லை என கரிகாலன் வாதிடுகின்றார். அப்படியாயின் இந்த அரசு இயந்திரம் சரியானது என்கின்றார். நபர்களை மாற்றினால் அதாவது நல்லவர்களை மாற்றினால் சரி என்கின்றார் அதுவே பாட்டாளிகளின் கடமை என்கின்றார். எவ்வளவு கடைக்கோடித்தனமான திரிபுவாதத்துடன் கூடிய முதலாளித்துவ மீட்பே.

புரட்சிகர அமைப்பு ஆட்சியைக் கைப்பற்றாது தொடர்ச்சியாக பல ஆயிரம் வருடங்கள் புரட்சியை நடத்திக் கொண்டிருக்க வேண்டும் என்கின்றார் கரிகாலன். கடந்து முடிந்த சமுதாயங்களில் பாட்டாளி வர்க்கம் இருந்தது போல் தொடர்ந்து போராடுவது (அரசு அதிகாரத்துக்க அல்ல) பின் மீண்டும் போரடவது என இருக்க வேண்டும் என்கின்றார். இது தொழிற்சங்க வாத பொருளாதார வாத கோரிக்கையையே. அரசு அதிகாரத்தை கைப்பற்றாத கோரிக்கையாக 1 அகிலம், 2 அகிலம் இன்று உள்ள திரிபு வாதக் கட்சிகள் போல் போரட வேண்டும் என்கின்றார். அதாவது இச்சமூக அமைப்பை பேனவேண்டும், வெறும் சீர்திருத்தங்களை கோர

www.tamilarangam.net



அதிகாரத்தை கைப்பற்ற முனையாத அனைத்துப் போராட்டங்களும் எவ்வளவு முற்போக்காக இருந்தாலும் இச்சமூக அமைப்பை பேணுவதையே செய்யும். அதை தலைமை தாங்குவோர் நோக்கம் முதலாளித்துவமே. இதை கரிகாலன் மார்க்ஸியத்தை திரித்த படி முதலாளித்துவம், ஏகாதிபத்தியத்தோடு சேவை செய்கின்றார்.

இறுதியாக சிவில் சமூக நிறுவனங்கள் தொடர்பாக கரிகாலன் தொடர்கின்றார். இன்று உள்ள சமூக அமைப்பில் உள்ள சமூக அமைப்பில் உள்ள சிவில் மற்றும் சமூக வடிவங்கள் அனைத்தும் காப்பாற்ற முனைகின்றார். இவ் அரசு அமைப்பை பேண தன்னால் இயன்றளவு வன்முறை வன்முறை சாராத பகுதியின் ஊடாக போராடுகின்றது. இவ் அரசு முரன்பாட்டின் வெளிப்பாடாக இச் சிவில் சமூக நிறுவனத்தில் இருந்து அன்னியப் பட்டாலும் அதே சிவில் சமூக அமைப்புக்கள் இருப்பதுடன் நபர்கள் மாறுகின்றனர். அங்கு அச் சிவில் நிறுவனங்கள் எந்த மாற்றமும் நிகழ்வதில்லை. மாறி மாறி அதே சமூக அமைப்பை பேணுவதை பல வழிகளில் இச் சிவில் சமூக அமைப்புகள் செய்கின்றனர்.

இதே நேரம் ஒரு புரட்சிகர அமைப்பு இயங்கும் போது அரசமைப்பைக் கைப்பற்றுவதை தனது குறிக் கோளாகக் கொள்கின்றது. அப்போது பதிய சமூக சிவில் சமூக அமைப்புகளை முற்றிலும் மாறாக அமைக்க முனைகிறது. அதாவது பழையதுக்க மாற்றாக உருவாக்குவதுடன் அதைச் சார்ந்ததுமே புரட்சிகர அமைப்பு செயல்படுகின்றது. அரசமைப்பு உருவாகும் போது முற்றாக பழைய அமைப்பு அடித்து நொருக்கப்பட்டு புதிய அமைப்புக்கள் (இவர்கள் உருவாக்கிய) சமூக வடிவங்களாக உருவாகின்றன. இவைகளின் செயற்பாட்டில் மட்டுமே அரசு உள்ளது. இங்கு தொடர்ந்தும் கட்சி வர்க்கப் போராட்டத்தை தனது இலக்காகக் கொண்டிருக்கின்றது. இச் சிவில் சமூக அமைப்புக்களுடன் இனைந்து கட்சி தனக்குள் வர்க்கப் போராட்டத்தை பகமை, பகமை அல்லாத வழிகளின் ஊடாகபு போராடுகிறது. சினாவில் நடைபெற்ற கலாச்சாரப் புரட்சி ஒரு வர்க்கப் போராட்டம், அங்கு அழிவுகள் நிகழ்கின்றன. புதியன பிறக்கின்றன. இது 20 அல்லத 30 முறை சோஷலிச சமூதாயத்தில் நிகழ்கின்றது.

சிவில் சமூக அமைப்புகளுக்கான சுதந்திரம் என்ற விடையத்தில் சில வடிவங்கள் கட்சியின் நேரடி வழிகாட்டலின் ஊடாகவும், சில மறைமுக வழிகாட்டலுக்கும் உள்ளாகின்றது. இது நிலமைகள் காலகட்டங்கள் —— என பல மாறுபட்ட சூழ்நிலையுடன் மாறிக் கொண்டே இருக்கும். சுரண்டலை அங்கீகரிக்கும் சீரழிவைக் கோரும் அல்லது இது போன்ற அனைத்தும் ஒரு புரட்சிகர அரசின் கீழ் தடை செய்யப்படும். அதே நேரம் சுரண்டலை எதிர்க்கின்ற அனைத்துக் கருத்துகளும், அனைத்து சமூக வடிவங்களும் அங்கீகரிக்கப் படுகின்றன. அதாவது சோஷலிச கால கட்டத்தில் ஜனநாயகம், சமத்துவம் என்பது எல்லோருக்குமானது அல்ல. அங்கு இவை ஒடுக்கப்படும் மக்களுக்க மட்டுமே இவை அனுமதிக்கப் படுகின்றது. மற்றைய வர்க்கங்கள் அடக்கப் படுகின்றன. அவர்கள் அனைத்து வடிவங்களிலும் எப்படி வரினும் அனுமதிக்கப் படுவதில்லை.

# பாரிஸில் துப்பாக்கி பிரயோகம்

31.12.93 இரவு பரிஸில் லாச்சப்பல் எனும் இடத்தில் எம்மவர்களுக்கிடையில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. இதில் ஒருவரின் கழுத்தில் குண்டு பாய்ந்தது.

தமிழ் மக்களின் கூடிய கடைகளைக் கொண்ட லாச் சப்பலில் லுண் கடைக்கு முன்பே இத் துப்பாக்கி சண்டை நடைபெற்றது. லுண் கடையினரே இத் துப்பாக்கி பிரயோகத்தை செய்ததுடன் இவர்கள் புலி உறுப்பினருமாவார்.

எம்மண்ணில் நடந்த ஒரு கொலை தொடர்பாக 2 மாதத்திற்கு முன்பு நடந்த வாக்கு வாதத்தில் புலிகள் ஒருவருக்கு கத்திக் குத்தை நிகழ்த்தினர்.

இதன் தொடர்ச்சியாக நடந்து வந்த வாக்கு வாதம் 31.12.93 துப்பாக்கிப் பிரயோகம் வரை சென்றது.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் முன்பு மாத்தையா தொடர்பாகவும் வாக்குவாதப் பட்டவர்கள் பின் கைகலப்பில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இது போன்ற வன்முறைகளை வாடிக்கையாகக் கொண்ட புலிகள் ஐரோப்பா முழுக்க இதுவே தொடர் கதையாக்க முனை கின்றனர்.

புலிகளின் எந்த தரப்பினரும் சரி கேள்வி கேட்கும் போது பதில் அளிக்க முடியாது வன்முறையே பதிலாக கொடுத்து வருகின்றனர்.

இக்கைகலப்பில் புலிக்கு எதிராக பல்வேறு சக்திகள் எதிர்த்து நின்றதைக் காணக் கூடியதாக இருந்தது. 1.1.94 லாச்சப்பலின் மக்கள் இடம் நியாயம் கேட்டு சுவரொட்டிகள் கணப்பட்டன. எம் மண்ணின் அராஜகம் இங்குமா என்ற கருத்துப்பட இருந்த சுவரொட்டிகள் மக்கள் பார்க்க முன்பே அவசரம் அவசரமாக அகற்றப்பட்டது.

நடந்த உண்மை நிலையை மறைக்க பல பொய்யான பிரச்சாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளது. இம்மோதல் அரசியல் ரீதியானதாக இருந்த போதும் இக் கைகலப்பில் வேறு பல சக்திகள் பங்கு பற்றியது பிரச்சனையை வேறு பக்கம் இனம் கணக் கூடியதாகவும் உள்ளது.

அரசியல் ரீதியில் புலிகள் உடன் முரண்படுபவர்கள் அரசியல் ரீதியில் தெளிவு கொண்டு மக்களைச் சார்ந்து இருக்க வேண்டும். மாறாக இப்படி சிறு வாக்கு வாதம், மோதல் இப்பிரச்சனையை இல்லாது ஒழித்து விடாது. மாறாக அதே இயக்க அரசியலையே தொடரும்.

# புலிகளுள்பிளவு

பிரான்ஸ், டென்மார்க் புலிகள் அவ்வவ் நாடுகளில் இரண்டமைப்பாக உடைந்துள்ளனர். புலிகளின் வெளிநாட்டுப் புலிப் பொறுப்பாளர்களின் கண்மூடித்தனமான அடக்கு முறையுடன் கூடிய ஜனநாயக மறுப்பு சிலரை வெளியேற்ற வைத்துள்ளது. இவர்கள் வெளியேறிய போதும் தமிழீழத் தலைமைக்கு விசுவாசகமாகவே உள்ளனர்.

எந்த இயக்கத்தில் இருந்து வெளியேறும் எவரும் அரசியல் ரீதியில் கடந்தவற்றை விமர்சிக்காதவரை இவ் வெளியேற்றம எதையும் சாதிக்காது. மாறாக மீண்டும் ஒரு புலியை நோக்கிச் செல்வர்.

அதுவே பிரிந்தவர்கள் தமிழீழத் தலைமைக்கு விசுவாசகமாக உள்ளனர்.

தமிழீழம் எனினும், இங்கு தலைமை என்றும் ஒரே அரசியல் வகைப்பட்டதே. வெளியேற்றம் என்பது அரசியல் ரீதியில் முறிவைக் கொண்டிருக்க வேண்டும். பிரிந்தோர் உங்கள் அரசியலை திரும்பப் பாருங்கள். அப்போதே புரியும் எங்கே தவறு இழைத்தீர்கள் என்று. இல்லாதவரை தலைமையில் நபர் மாற்றத்தை எதிர்ப்பதென்பது மீண்டும் ஜனநாயகம் அற்ற அதே தலைமையைக் கோருவதே.

# ஜெகோவாவின் பித்தலாட்டம்

மேற்கு நாடுகளில் ஜெகோவா என்ற சமய பித்தலாட்டவாதிகள் மக்களை திசை திருப்ப முயன்று வருகின்றனர். சர்வதேச ரீதியில் சுரண்டும் வர்க்கம் மக்கள் மீது நடத்தும் காட்டுமிராண்டித் தனமான அடக்கு முறைக்கு உள்ளாகிய பலர் அந்நிய நாடுகளில் அரசியல் புகலிடத்தை தேடுகின்றனர். அவர்கள் மத்தியில் மிகத் திட்டமிட்ட வகையில் ஜெகோவா பித்தலாட்டவாதிகள் செயலாற்றுகின்றனர். இன்று உலகில் காணப்படும் சுரண்டல் அமைப்பை எதிர் கொண்டு போராடிய மக்களை திசைதிருப்ப முயலும் இவர்கள் ஏகாதிபத்தியத்தை காப்பாற்ற முனைகின்றனர்.

இவர்கள் இன்று உலகில் காணப்படும் பிரச்சனைகளைக் காட்டி ஜெகோவாவை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவைகளை தீர்த்து விட முடியும் எனக் கூறி பித்தலாட்டம் ஆடுகின்றனர். யூக்கோசிலாவியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு ஜெகோவாவை ஏற்றுக் கொள்ளாமையே காரணம் எனக் கூறிப் பிதற்றுகின்றனர்.

யூகோசிலாவியா பிரச்சனை சுரண்டும் வர்க்கம் சுரண்டக் கையாண்ட யுத்தமே. இலங்கையில் எமது இனப் பிரச்சனை சுரண்டும் வர்க்கம் தமது நலன்களைப் பேண எப்படி இனவாதத்தை முதன்மைப்படுத்தி ஆட்சியில் இருக்க முடிகிறதோ அது போல் தான் உலகில் உள்ள பிரச்சனைகள்

இது போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்ள போராடுவதே ஒரே வழி. அதை விடுத்து ஜெகோவாவை வழிபடுவதால் இப் பிரச்சனைகள் தீர்க்கப்பட மாட்டாது.

இலங்கையில் இனப்படு கொலையை நிறுத்த போராடுவதே ஒரே வழி. அதைவிடுத்து ஜெகோவாவை வழிபடின் இனப் பிரச்சனை தீர்வு பெற மாட்டாது.

இன்று பிரான்சில் 8 மணி நேர வேலை நேரத்தை தொழிலாளர்கள் போராடித்தான் பெற்றனர். மாறாக ஜெகோவாவை கும்பிட்டபடி இருப்பின் அது 12–16 மணி நேரமாகவே இருந்திருக்கும்.

நீங்கள் ஒரு நாட்டில் பெறும் அனைத்து உரிமைகளும் போராடியதால் கிடைத்தவைதான். மாறாக ஜெகோவாவை கும்பிட்டு கிடைத்தவை அல்ல. உங்கள் எந்தப் பிரச்சனைக்கும் எந்தச் சமயமும் தீர்வு தர மாட்டாது. மாறாக போராடுவதன் ஊடாகவே தீர்வைப் பெற முடியும்.

# வாசகர்களும் நாங்களும்

புதிய ஜனநாயகப் புரட்சி மூலம். சோஷலிச தமிழீழத்தையே உருவாக்க வேண்டும் என்பது எனது கருத்து. நாம் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ முடியாது என்று தான் தமிழீழம் என்ற முடிவெடுத்தோம். ஆனால் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சில மாற்றங்கள் செய்வதில் தவறில்லை. ஆனால் இன வெறியானது சிங்கள மக்கள் மத்தியில் UNP, SLFP, "ஜாதிக சிந்தனா" உறுமாய மற்றும் பிக்குகளால் சிங்கள மக்கள் மத்தியில் பச்சைப்படியே இனவாதம் தூவப் பட்டு இனவாதம் கூர்மை அடைந்து முழுத் தமிழர்களையும் புலியாகவும் அவர்களுடைய பயங்கர எதிரியாகவும் நினைக்கின்றார்கள். அத்துடன் அங்கு முற்போக்கு அணி உருவாக்குவதற்கான வாய்ப்புகளும் மறைந்து வருவதை அண்மைக்கால வரலாறுகள் எடுத்துக்காட்டின. அப்படி உருவானாலும் இன வாத வலைக்குள் அவை விழுந்து விடுகின்றன. உதாரணம் 33 ஆவது சரிநிகர் பத்திரிகையில் "ராவய" பத்திரிகையின் மாறுபட்ட நிலையை வெளிப்படுத்தினார்கள் ஜே.வி.பி ஆரம்பம் கம்யூனிச அமைப்பு என்று கூறி பின்பு இனவாதத்தை காட்டிக் கொண்டதும் யாவரும் அறிவார்கள் காலப் போக்கில் முற்போக்கு என்று கூறும் சக்திகளும் காலப் போக்கில் பேரினவாத நீரோட்டத்தில் கலந்து விடுவார்கள் உண்மை. இதன் பின்பு ஐக்கியம் ...

கற்பனைக் கதையாகவே போய் விடும். அத்துடன் நாமும் இவர்களுடன் இணைந்து அழியும் அபாயம் உள்ளது.

மேலும் "சமர்" பற்றிய கருத்தைக் கேட்டிருந்தீர்கள். வைத்த கருத்தின் மேல் உறுதியும் தளர்வின்றியும் சரியான முனையில் விமர்சனப் பாணியும் எம்மத்தியில் வேண்டிய ஒன்றே. ஓர் புரட்சிகர தலைமையை உருவாக்குவதற்கு எம் மத்தியில் உள்ள தவறான விடையங்கள் களையப்பட வேண்டிய ஒன்று என்று போராடுவதால் தான் சமரை வாசிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

வரதன்
சுவிஸ்

தோழமையுடன் சமருக்கு

உங்களுக்கு மனிதம் பற்றிய விமர்சனம் உள்ளது போல் எனக்கு சரிநிகர் பற்றிய நிறைய விமர்சனம் உள்ளது. (தூண்டில்) மனிதம் போல் சரிநிகர் திரிபு வாதிகள் இல்லை. ஒரு ஸ்திரமான நிலைப்பாடு இல்லை. வெறும் கதம்பமாலையாகத்தான் இருக்கின்றது. ஆனாலும் அவர்களை இன்று நிராகரிக்க முடியாது. நாங்களும் அப்பத்திரிகைகளைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டு.

சோவியத்தின் வீழ்ச்சி என்பது (சமுக ஏகாதிபத்தியம் என்பது பரந்துபட்ட மக்களுக்குரியது) மக்கள் மத்தியில் சோஷலிச ... உள்ளது. இன்று லெனினையே புதைகுழிக்குள் அனுப்ப ஏகாதிபத்தியம் முழுமுயற்சியில் ஈடுபட்டுள்ளது. வர்க்க் பேத சமூகத்தின் கடந்து வந்த வரலாற்றில் ஆளும் வர்க்கம் புரட்சியாளர்களின் மாபெரும் தலைவர்களை கொலை செய்த பின் அவ்ர்களை புனிதர்களாக்கி தமக்கு தமக்கு சாதகமாக்கி வந்துள்ளனர். (புதிய பாதை) ஆனால் லெனினை சமூக ஏகாதிபத்தியம் ஒரு திரையாகப் பயன்படுத்தினும் இன்று அவரது பூதவுடலைக் கண்டே பயந்து சாகின்றனர். அந்த அளவில் லெனின் மாபெரும் புரட்சியாளன் மாத்திரமல்ல விரைவில் அவரது சிந்தனைகள் சுடர்விட்டெரியும். என்ற திடமான நம்பிக்கையுண்டு. ஆனாலும் இதற்கு சிலகாலம் எடுக்கும். எனவேதான் ஐக்கிய முன்னணியை மையமாக வைத்து நாங்கள் செயற்பட வேண்டும். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டுதான் செயல்பட வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்திய உபகண்டத்தில் வடக்கே காஷ்மீரிலும் தெற்கே இலங்கையிலும் காலூன்றலாம் என்பது எனது அபிப்பிராயம். இந்த நிலையில் எங்கிருந்து தொடங்குவது? எவ்வாறு செயல்படுவது? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.


மாஸ்டர்
இத்தாலி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாசிசத்தின் வெற்றி (ரஷ்யத் தேர்தல்)




ரஷ்யத்தேர்தல் சமீபத்தில்(12.12.93) நடைபெற்றது. "கம்யூனிஸ்டுக்கள் அடியோடு ஒழிந்து போவார்கள், மக்கள் ஜெல்சினைத்தான் தெரிவு செய்வார்கள், மீண்டும் ஜெல்சினே சந்தேகமின்றி பெரும் வாக்குகள் பெற்று வெற்றி பெறுவார்" என்று கனவுகண்ட மேற்குலக அரசியல் வாதிகள் மாத்திரமல்ல பாசிச ஆதரவாளர்கள் தவிர யாவரும் அதிர்ச்சிக்குள்ளாகிப் போனார்கள். பாராளுமன்றமா? ஜெல்சினா? என்ற அதிகாரப் போட்டியின் விளைவாக 1993 ஒக்டோபர் போரில் பிரஸ் னேவ் கும்பல் ஆதரவான கஸ்பு லாட்டோவ் கும்பல் அடக்கப் பட்டதும், பாராளுமன்றத்துக்கு தீ வைக்கப்பட்ட போதும் உச்சி குளிர்ந்த முதலாளிய ஆதரவு சக்திகள் ஜெல்சின் மீதும் ரஷ்யத் தேர்தல் மீதும் வைத்த நம்பிக்கையை தேர்தலில் "எதிர்பாராத" வெற்றி பெற்ற லிபரல் ஜனநாயக கட்சியின் தலைவரும், பாசிஸ்டுமான விலாடிமிர் ஜிரினோவ்ஸ்கி (Vladimir Gjrinoviski)தகர்த்தெறிந்துள்ளார்.

ஜெல்சின் கும்பல் மயிரிழையில் தப்பியுள்ளது. நேற்று வரை "கம்யூனிசம்" என்ற பூதத்தைக் காட்டி பீதியைக் கிளப்பியவர்கள் இப்போது பாசிசத்தின் வெற்றி கண்டு வாயடைத்துப் போயுள்ளனர். முதலாளிய சக்திகள் உபதேசித்த முதலாளித்துவ பாராளுமன்ற வாசல் ஊடாக பாசிச அரக்கன் தன்னை வெளிப்படுத்தியுள்ளான்.

இத்தேர்தலில் 12 கட்சிகள் பங்கு கொண்டன. அவைகளில் முக்கியமானவை.

1. லிபரல் கட்சி (ஜிரினோவ்ஸ்கி) 24 வீதம்
2. ரஷ்ய விருப்பக் கட்சி 15 வீதம்
3. ரஷ்ய ஜனநாயக கட்சி 5.5 வீதம்
4. பிரஸ் கட்சி (Pres) 5.7 வீதம்
5. அக்ரார்கட்சி (Agrar) (கம்யூனிஸ ஆதரவு கட்சி) 8.0 வீதம்
6. ஜாப்லாகோ (JABLOKO) 7.0 வீதம்
7. ரஷ்ய பெண்கள் அமைப்பு 8.7 வீதம்
8. கம்யூனிஸ்ட்கட்சி (பிரஸ்னேவ் ஆதரவு குழு ) 11.0 வீதம்

தனது திடீர் வெற்றி குறித்து ஜிரினோவ்ஸ்கி பரபரப்பான பேட்டி ஒன்றில் ரஷ்ய ஆதிக்க வெறியை மறைத்து கொள்ளவில்லை. தான் விஜயம் செய்த வெளிநாடுகளின் வெறுப்பைச் சம்பாதித்துள்ளார்.

பேட்டிகளின் சாராம்சத்தை கீழ் வருமாறு தொகுக்கலாம் .

*மேற்கு நாடுகள் ரஷ்ய உள் விவகாரங்களில் தலையிட்டால் அணுகுண்டுகள கட்டவிழ்த்து விடப்படும். குறிப்பாக ஜேர்மனி எச்சரிக்கப்பட்டது .

*1917ம் ஆண்டுக்கு முன்னிருந்த ரஷ்ய எல்லைகளைத் திருப்பி பெறவேண்டும். முன்னாள் சோவியத் யூனியனில் அங்கம் வகித்த குடியரசுகள் மீண்டும் இணைக்கப்படுதல் வேண்டும்.

*மேற்குநாடுகள் ஆயுதம் உற்பத்தி செய்து விற்பது தொடரும் வரை ரஷ்யாவும் ஆயுதம் உற்பத்தி செய்து விற்பனை செய்யும்.

ரஷ்யா உற்பத்தி செய்து 200 'மில்லியன் பிறாங்கிற்கு விற்பனை செய்யும்.

ஜேர்மனிய பாசிச அமைப்பான "ஜேர்மனிய மக்கள்" யூனியனின் தலைவரான GEHARD FREY வாழ்த்து செய்தியின் மூலம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார். இக்கட்சி ஜேர்மனியின் BAYER மாநில அதிதீவிர வகுப்புவாத கட்சியாகும். PASSAU என்ற இடத்தில் சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் நடைபெற்ற இக்கட்சியின் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஜிரினோவ்ஸ்கி "ரஷ்யாவும் ஜேர்மனியும் ஐரோப்பாவை பங்கு போடுவது பற்றி" கருத்து தெரிவித்தான்.

1917 ம் ஆண்டு புரட்சிக்குப்பின் நடைபெற்ற உண்மையான சுதந்திர ஜனநாயக தேர்தல் இது வென ஐரோப்பாவும், அமெரிக்காவும் புகழ்ந்தன. ஆனால் உண்மையில் இது ஒரு தில்லுமுல்லு தேர்தல் தான் என்பதில் சந்தேகமில்லை. 52 வீத மக்கள் தான் இதில் பங்கெடுத்துள்ளனர். மேலும், நடைமுறையில் இல்லாத ஒருசட்ட அமைப்பின் அடிப்படையில் நடைபெற்றுள்ளது. அமெரிக்க பாராளுமன்ற பாணியிலும், ஜார்மன்னனின் பாராளுமன்ற (டுமா) பாணியிலுமான ஓர் கலவையாக உள்ள இச் சட்டம் இன்னமும் ஒரு பரிந்துரையாகவே உள்ளது. அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படாத சட்டமாகவே உள்ளது.

ஜெல்சின் தனது சதி மூலம் 'தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற பிரதிநிதிகளை" வெளியில் துரத்துவதற்காக தனது கையில் முழு அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டார். ஜெல்சினின் சர்வாதிகாரச் சட்டம் இத் தேர்தல் நடைபெறும் முன்னமே செயற்பாட்டுக்கு வந்து விட்டது.

தேர்தல் வாக்குகள் எண்ணப்படுவதற்கு முன்னரேயே ஜெல்சினின் பேச்சாளர் "ஜனாதிபதியின் அரசியல்திட்டம் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டது என்றும், 70 வீதமானோர் ஜெல்சின் திட்டங்களுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாவும்" அறிவித்தார். செய்தித் தொடர்பு சாதனங்கள் ஜெல்சினின் கட்டுப்பாட்டிலிருந்தது என்பது இங்கு முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டும். ஏனெனில் " எதுவும் பிழையாகப் போய்விடக் கூடாது என்பதற்காக" இவை தங்கள் கட்டுப்பாட்டில் வைக்கப் பட்டுள்ளதாக ஜெல்சினே கூறினார்.

"தனது திட்டங்களை எதிர்ப்பவர்களுக்கும், விமர்சிப்பவர்களுக்கும் TV இல் தேர்தல் பிரச்சாரம் செய்ய அனுமதி வழங்க முடியாது" என துள்ளிக்குதித்தார் ஜெல்சின். இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டே மேற்கத்திய செய்தி ஊடகங்கள் "ரஷ்யாவின் உண்மையான, சுதந்திர, ஜனநாயக தேர்தல்" என புகழ்ந்து உறுதியளித்தன.

செலவானதுமாகும். ரஷ்ய இராணுவம் எமது எல்லைக்குள்ளேயே நிற்கவேண்டும். அதாவது மத்திய தரைக்கடல், இந்து சமுத்திரக்கடல் எல்லை வரை. இது எப்படி சாத்தியம்? ஜிரினோவ்ஸ்கி விளக்குகிறார்.

* உலகை வடக்குத் தெற்காக நான்காகப் பிரிக்க வேண்டும். உலக மக்கள் சமாதானமாக வாழ்வார்கள், போர் நின்றுவிடும்.


* சீனாவும், ஜப்பானும் அவஸ்ரேலியாவையும், இந்தோனேசியாவையும் எடுத்துக் கொள்ளும். கனடாவும், அமெரிக்காவும் தென்னமெரிக்காவை எடுத்துக் கொள்ளும்.

*நான் ஒருபோதும் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகிக்கவில்லை.

ஜிரினோஸ்கி கூறியவைகளின் அரைப்பங்கு உண்மை என்றால் அதுவே போதுமான அளவு பயங்கரமானதாகும்: என்று சுவீடன் ஜனநாயகக் கட்சித் தலைவர் INGVAR CARLSON கூறியுள்ளார்.

## ஹிடலர்–ஜிரினொஸகி: ஒரு வரலாற்று ஒப்பிடு

அடிப்படையில ஹிட்லரையும் ஆரம்பத்தில் ஒருவரும் பெரிது




தனது துயரமான குழந்தைப் பருவத்தைப் பற்றியும் தனது தற்போதைய உலக அரசியல் நோக்குகளையும் 1993 ம் ஆண்டு வெளிவந்த "தெற்குக்கான இறுதிப் பாதை" என்ற நூலில் ஜிரினோவ்ஸ்கி கூறியுள்ள கருத்துக்கள் கோமாளித்தனமானவை.

ஒரு சில கருத்துக்கள்:

ரஷ்யா அங்கோலா, மொசாம்பிக், கியூபா, எதியோப்பியா, வியட்நாம் போன்ற நாடுகளுக்கு இராணுவத்தை முன்னர் அனுப்பியது. அது எமக்கு தேவையில்லை.

ஐரோப்பா ஆபிரிக்காவை எடுத்துக் கொள்ளும்.
முன்னாள் சோவியத் யூனியனில் அங்கம் வகித்த நாடுகளையும், ஈரான், ஈராக், இஸ்ரேல், துருக்கி, அரபு நாடுகளையும், இந்தியா, பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான், போன்ற நாடுகளை ரஷ்சியாவும் வளைத்துக் கொள்ளும். தென்னாபிரிக்கா மாத்திரம் சிறப்புப் பிரதேசமாக விளங்கும்.

*ரஷ்ய இராணுவத்தினர் இந்து சமுத்திர வெப்பநீரில் தங்கள் சப்பாத்துக்களைக் கழுவவும், மெல்லிய உடை அணிந்தும், மெல்லிய தொப்பி அணிந்தும், சிறிய கைத்துப்பாக்கிகளுடன் ரோந்து வருவதை நினைத்துப்

படுத்தவில்லை. ஹிட்லரின் மெயின் காம்ப்(mein kamp) சுத்த கற்பனையானது . 10 வருடங்களின் பின் அது நாஜிகளின் அரசியல் சூத்திரமானது. இதே கதி தான் இன்று ஜிரினேவ்ஸ்கிக்கும் ஏற்பட்டுள்ளது. ரஷ்ய அரசியல் வாதிகள் இவரை ஓர் பழைய பாணிப் பேச்சாளன் என்று கருதினர். ஆயினும் இந்த வெறும் பேச்சாளனுக்கு 24 வீத மக்கள் வாக்களித்து உள்ளனர். ஏழை ரஷ்சியர்கள் தான் இதற்கு காரணம் என சர்வாதிகாரி ஜெல்சின் குற்றம் சாட்டியுள்ளார். இந்த ஏழ்மைக்குக் காரணம் யார்? போலிக் கம்யூனிஸ்டுகளும், ஜெல்சினும் தான்.

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வறுமையிலும், பட்டினியிலும் வாடுவதாக அரசே ஒத்துக் கொள் கிறது.

ரஷ்ய ராணுவத்தில் 70 வீதமானோர் ஜிரினோவ்ஸ்கியை ஆதரித்துள்ளனர். ரஷ்யா வரலாற்றில் எந்த ஒரு போரிலும் தோற்கவில்லை. ஆனால் பனிப்போரில் தோற்றது. அது கொர்பச்சோவின் ஆட்சியுடன் நடைபெற்றது.
கிழக்கு ஐரோப்பாவில் இருந்து படைவிலகல் warsaw ஒப்பந்தக் கலைப்பு, ரஷ்யா உடனேயே காலம் காலமாக இருந்த நாடுகள் பிரிந்தமை (உ–ம் உக்கிரேன்) போன்றவை சாதாரண ரஷ்யர்களிடமும், ராணுவத்தினரிடமும் ஒருவிதமான தோல்வி மனப்பான்மையை ஏற்படுத்தி உள்ளதாகவும், அதன் பிரதிபலன் ரஷ்ய தேசிய உணர்வு பலம் பெறக் காரணமாயுள்ளது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.
super power ஆக இருந்த ரஷ்யா ஓர் போரில் கலந்து கொள்ளாமலேயே தோற்கடிக்கப்பட்டது யாரால்? கொர்பசேவ் – ஜெல்சின் கும்பலால் தான்.

முதலாம் உலகப் போரில் தோல்வியுற்று, சோம்பிக கிடந்த ஜேர்மனியரின் பழிவாங்கும் வெறியை தட்டி எழுப்பினான் ஹிட்லர், 1932 வசந்த காலத்தில் நடைபெற்ற தேர்தலில் ஹிட்லர், வான் கின்டான்பர்க்கிடம் (VON HINDENBERG) படுதோல்வி அடைந்தான். 1991ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில ஜெல்சினிடம் ஜிரினோவ்ஸ்கி படுதோல்வி அடைந்தார்.

1932 யூலை மாதம் நாஜி கட்சி மிகவும் பெரிதாக வளர்ந்தது. ஆயினும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறவில்லை. 1993 தேர்தலில் லிபரல் ஜனநாயகக் கட்சி மிகவும் பெரிய கட்சியாக வளர்ந்தபோதிலும், பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் பெறவில்லை.

ஹிட்லர் பிரதமர் பதவியைக் கோரினான். ஆனால் ஜனாதிபதி கிண்டன்பர்க், பிரதமர் VON PAPEN அரசில் வேறு ஓர் பதவி தருவதாக கூற ஹிடலர் மறுத்துவிட்டான்.

தேர்தல் வெற்றி பெற்ற ஜிரினோவ்ஸ்கி தான் அரசமைக்கப் போவதாக கூற ஜெல்சின் கும்பல் மறுத்துள்ளது. ஆயினும் ஜெல்சியினின் பேச்சாளர் ஜிரினோவ்ஸ்கி மந்திரிப்பதவி பெறுவது என்பதை மறுத்துரைக்கவில்லை.

ஜெல்சினின் சர்வாதிகார சட்டப்படி அவர் தெரியும் பிரதமரை பாராளுமன்றம் நிராகரிக்குமாயின், பாராளுமன்றத்தை கலைக்கவும், புதிய தேர்தல் வைக்கவும் ஜனாதிபதிக்கு உரிமை உண்டு.

1932ல் VON PAPEN அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளால் பாராளுமன்றம் இயங்க முடியாததால் புதிய தேர்தலை VON PAPEN அறிவிக்க வேண்டியாயிற்று. தேர்தலில் நாஜிகளின் செல்வாக்கு முன்னிருந்ததை விட குறைந்தது. ஆயினும் இரண்டு மாதங்களின் பின் கின்டன்பார்க்(VON HINDENBURG) ஹிட்லருக்கு பிரதமர் பதவியைக் கொடுப்பதைத் தவிர வேறு வழியின்றிப் போனது. அதுதான் பின்னாளில மனிதகுலம் அவஸ்த்தைப் படுவதற்கான ஆரம்பப் படியாக அமைந்தது. முடிவு 6 வருடங்களின் பின் இரண்டாம் உலகப்போரை உருவாக்கியது.

சோவியத் யூனியனின் முன்னாள் தலைவனான ஸ்டாலின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான வழிநடத்தலினால் நாஜிகள் அம்பலப்படுத்தப்பட்டு உலக மக்களின் தார்மீக ஆதரவுடனும், செம்படையின் உறுதி வாய்ந்த, உக்கிரமான தாக்குதலாலும் நாஜிசத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது. நாஜிசம், பாஸிசத்தின் பரம எதிரி கம்யூனிஸ்ட்டுக்கள் தான். மேற்கத்தய முதலாளித்துவ ஜனநாயக வாதிகளல்ல. இதை வரலாறு ஏற்கனவே ஓர் முறை நிருபித்து காட்டியுள்ளது. நாசிசம், பாசிசம் முதலாளித்துவத்திற்கு உள்ளே தான் மறைந்திருக்கிறது.

ஐரோப்பா வானில் பாசிசம் எனும் இருள் படிந்து வருகிறது. இன்றைய ரஷ்ய, ஐரோப்பிய நிலமைகள் 1930 களை மீண்டும் நினைவு படுத்துவதாக உள்ளன.

ரஷ்யத்தேர்தலை கணிசமான மக்களும், கட்சிகளும் புறக்கணித்துள்ளனர். கம்யூனிச ஆதரவாளர்களும் இதில் அடங்குவர். ஆனால் துரதிஷ்டவசமாக கம்யூனிஸ்டுகள் கருத்து முரண்பாடுகளால் பிளவுண்டு போயுள்ளனர்.
நினைத்தது போல ஜெல்சின் கும்பலுக்கு அறுதிப் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை. பாசிச ஆதரவு கட்சியின் வெற்றி பாசிச வழியில் ரஷ்யா நடைபோடப் போவதை பறை சாற்றுகின்றன. அதற்கான அடிப்படையாக ஜெல்சினின் பாசிச, சர்வாதிகார ஆட்சி அமைந்துள்ளது. ✷

| புத்தகம் | எழுதியோர் | விலை பிராங்கில் | தபாற் செலவு (ஐரோப்பிய நாடுகள்) | தபாற் செலவு (மற்றைய நாடுகள்) |
|---|---|---|---|---|
| 1. மலைகளையே பிளந்திடுவோம் | செரபண்டாஜி | 16 | 8 | 10 |
| 2. நடைமுறை பற்றி | மா. சே. துங் | 11 | 7 | 9 |
| 3. சீனப் புரட்சியும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் | மா. சே. துங் | 17 | 8 | 9 |
| 4. மகளிர் விடுதலை இயக்கங்கள் | கிளாரா ஜெட்கின் | 14 | 7 | 9 |
| 5. போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம் | புதிய ஜனநாயகம் | 11 | 7 | 9 |
| 6: பாசிச–பார்ப்பன ஜெயா கும்மலின் ஆடம்பர–ஊழல்–ஊதாரி ஆட்சியை அகற்றிட அணி திரள்வோம் | புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி | 11 | 7 | 9 |
| 7. காந்தி–காங்கிரஸ் துரோக வரலாறு | புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி | 11 | 7 | 9 |
| 8. சுண்டூர் கோரக் கொலைகள் | ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக்கமிட்டி அறிக்கை | 9 | 5 | 7 |
| 9. ஹீனான் விவசாயிகள் இயக்கம் பற்றிய ஓர் ஆய்வறிக்கை | மா.சே.துங் | 14 | 8 | 10 |
| 10.சிலந்தியும் ஈயும் | லீப் னெஹட் | 9 | 5 | 7 |
| 11.மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப் படியின் உழைப்பின் பாத்திரம் | எங்கெல்ஸ் | 10 | 5 | 7 |
| 12.கம்யூனிசத்தின் கோட்பாடுகள் | எங்கெல்ஸ் | 11 | 7 | 9 |
| 13.ஸ்தாபனத்தைப் பற்றி | ஸ்டாலின், டமிட்ரொலி காகனோவிச் மா.சே.துங் | 16 | 8 | 10 |
| 14.ரஷ்யக் கரடியின் உண்மை முகம் | கா.ராசன் | 20 | 13 | 15 |
| 15.கட்சி நிறுவனக் கோட்பாடுகள் | லெனின் | | | |
| 16.ஆயுதம் தாங்கிய மன நோயாளிகள் | புலிகளின் வதைமுகாமிலிருந்து தப்பியவர் கதை | 11 | 7 | 9 |
| 17.சோசலிசப் புரட்சியும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும் | லெனின் | 9 | 5 | 7 |
| 18.மா:சே:துங் மேற்கோள் பகுதி 1, 2 | புதிய ஜனநாயகம் | 22 | 13 | 15 |
| 19.முரண்பாடுகள் பற்றி | மா.சே.துங் | 20 | 13 | 15 |
| 20.திரிபுவாதப் பாரம்பரியத்தையும் முதலாளித்துவ தேசியவாதத்தையும் தூக்கி எறியுங்கள்! புரட்சி பாதையில் அணிதிரளுங்கள! | புதிய ஜனநாயகம் | 11 | 7 | 9 |

* இப்புத்தகங்கள் போட்டோ பிரதி மூலம் சமர் மறுபதிப்பு செய்து உள்ளது. இதை பெற விரும்புவோர் புத்தகத்தின் பட்டியலைக் குறிப்பிட்டு தபாற் செலவு உட்பட பணத்தை சமர் முகவரிக்கே அனுப்பி வைக்கவும். பணத்தை சமரின் கணக்கிலக்கத்துக்கு அல்லது [illegible]
முழுப் புத்தகத்தையும் ஒன்றாக [illegible]

18 ம் பக்கத் தொடர்ச்சி

சோவியத் 1919 களிலும், 1941 இலும் தேசிய உணர்வுகள் உந்தப்பட்டன. உண்மையே. அது நாட்டைப் பாதுகாக்கக் கோருவதே. இது எந்த நாட்டிற்கும் பொருந்தும். இதை மார்க்ஸியம் நிராகரிக்கவில்லையே. ஆனால் சோவியத் தாக்கப்பட்ட போது மற்றைய நாட்டுப் பாட்டாளிகள் தமது நாட்டிற்கு எதிராகப் போராடினர். அவ்வவ் நாட்டு தேசிய யுத்த வெறிக்கு எதிராகப் போராடினர். தேசியம் என்பது முற்போக்காக இருந்தால் மார்க்சியம் அங்கீகரிக்கின்றது. சமூக ஏகாதிபத்திய வாதிகளை எதிர்க்கின்றது.

இலங்கையில் சிங்கள இனவெறி அரசின் தேசிய வெறி எதிர்க்கப்பட வேண்டும் நீங்கள் வேண்டுமெனின் ஆதரியுங்கள். அதுபோல் புலிகளின் தேசிய வெறியும் எதிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல், ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான தாக்குதல் என்பன தேசிய வெறியின் பேரால் நிகழ்கின்றன. நீங்கள் வேண்டுமெனின் சிறிலங்கா, புலிகளின் தேசியத்தை அங்கீகரியுங்கள். ஏனெனில் உங்களுக்கு தேசியம் பூச்சிய கலாச்சாரமாக தொடங்குவதும், பொருளாதார மானுடவியல் கூறுகளைக் கொண்டதும் சர்வதேசியம் என்ன சொல்கிறது என்பது தேவையில்லை, மற்றும் உணர்வுகள், ஆசைகள் என்பனவே தீர்மானிக்கின்றன. நாம் இது போன்ற தேசியத்தை எதிர்க்கின்றோம்.

சர்வதேசமயமாக்கல் என்பது மார்க்சிற்கு எல்லா தனித் தன்மைகளையும் ஒன்று கலத்தல் என்று பொருள்பட்டது. ஆனால் இன்றைய யதார்த்தத்தில் தேசிய பிராந்திய அபிலாஷைகளை உயர்த்திப் பிடிப்பதானது பொருளாதார சமத்துவத்திற்கு அவசியமானதொன்றாகிறது. " எல்லாத் தனித் தன்மையையும் ஒன்று கலக்க முடியும் என மார்க்ஸ் சொன்னதாக மார்க்சியத்தின் பேரால் மார்க்ஸ் மீது சேறடிப்பு நிகழ்த்தப்பட்டு உள்ளது. ஒரு பொருளையும் இன்னொரு பொருளையும் கலக்கும் போது சில பொருட்கள் அப்படியேயும் சில பொருட்கள் கலந்தும் விடுகின்றன. ஆனால் இவை அனைத்தும் சில நிபந்தனைகளிலேயே நடைபெறும்.

$H_2$, $O_2$ என்ற மூலக்கூறுகளை எடுப்பின் அவை தனித்தனியாக இயல்பாக பொதுச்சூழலில் உள்ளன. ஆனால் இவைகளுக்கு இடையில் நிபந்தனைகளை மாற்றும் போதும் $H_2O$ மூலக் கூறுகளாக மாறிவிடுகின்றன. இது போல் தான் அனைத்தும். மார்க்சியமும் முதலாளித்துவமும் ஒன்று கலக்க முடியாதுள்ளது. ஆனால் மார்க்சியத்தின் பேரால் முதலாளித்துவம் ஒன்று கலக்கிறது. அங்கு போராட்டம் நிகழ்கிறது. இது நீடித்த போக்கும் கூட. இதன் முடிவில் முதலாளித்துவம் அழிக்கப்படும். அப்போது வர்க்கமற்ற சமுதாயம் உருவாகும். இது சோஷலிச சமுதாயத்தில் சில தலைமுறைகள் தொடரும். ஒரு பொருள் எப்போதும் ஒரே மாதிரி இருக்க முடியாது. அது மாறியபடி தனக்குள்ளும் செயற்படுகின்றது.

எனவே ஒரு பொருள் தனக்குள் செயற்பட்டபடி மாறிக் கொண்டிருக்கிறது. இது [illegible]

போதும் பொருளாதார சமபலத்தைப் பேணுவதற்கு என்பது ஒரு பக்கம் மட்டுமே உண்மை. தேசியம் என்பது மற்றைய தேசியத்தை சுரண்டவும் பயன்படும். முற்போக்கு தேசியத்தை மட்டும் மார்க்சிய வாதிகள் அங்கீகரிக்கின்றனர். இன்று மூன்றாம் உலக நாடுகள் தேசிய பொருளாதாரத்தைப் பேண எவ்வளவு தான் முயன்றாலும் பாட்டாளி வர்க்க புரட்சியின்றி முடியாது. ஏனெனில் இன்று ஆட்சி பீடத்திலுள்ள தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ சக்திகள் ஒரு தேசிய முதலாளித்துவத்தை அங்கீகரிக்கப் போவதில்லை. அந்த வகையில் தேசிய முதலாளித்துவ தலைமையில் போராட்டம் என்பது மீண்டும் அவர்கள் ஏகாதிபத்தியத்திடம் போய் சரணடைவதில் முடியும். இது பல போராட்டம் எமக்கு கற்றுத் தந்துள்ளது. எனவே தேசிய விடுதலைப்போராட்டம் பாட்டாளி வர்க்க தலைமையில் நடைபெறும்போதே சொந்த தேசியமும் பாதுகாக்கப்படும்.

இன்றைய ஐரோப்பிய ஒன்று இணைவு என்பது கட்டுரையாளர் கருதுவதற்கு மாறாக உருவானதே. அதாவது இன்று உலகை சுரண்டுவதில் உள்ள போட்டி ஐரோப்பிய, யப்பான், அமெரிக்காவுக்கு இடையில் கூர்மையடைந்துள்ளது. அந்த வகையில் ஐரோப்பிய நாடுகள் தமக்கிடையில் சுரண்டலில் மோதல் ஏற்படாது தடுக்கும் வகையில் பங்கிடப்பட்ட சுரண்டலை நடத்த உருவானதே ஐரோப்பிய ஒன்றிணைவு. இதன் விளைவாகவே இன்று ஐரோப்பிய நாடுகளில் ஏற்றுமதிகளில் பங்கிடப்பட்ட சுரண்டல் ஆட்குறைப்புக்கு இட்டுச் சென்றுள்ளது. இதனால் இன்று போரராட்டம் தீவிரமாகி உள்ளது. ஒன்றில் சலுகை ஒன்றில் வெட்டு என்ற வகையில் உடன்பட்ட இவர்கள் தமக்கு இடையில் தீவிர முரண்பாட்டுடன் மக்களைச் சுரண்டுகின்றனர். இதனால் மீனவர்கள், விவசாயிகள், தொழிலாளர்களின் தீவிர போராட்டம் நாளாந்தம் வெடித்துக் கிளம்புகிறது.

நாடுகளுக்கு இடையில் பொருளாதார சமபலத்தைக் கோரலாம் ஆனால் அது சுரண்டுவதற்காக இருக்கக் கூடாது. இன்று ஐரோப்பிய ஒன்றிணைவு பொருளாதார சமபலத்துக்கு அல்ல. மாறாக உலகை கொள்ளை அடிப்பதற்கே.
இறுதியாக மார்க்சியத்தின் பேரால் மார்க்சியத்தை குழி தோண்டி புதைக்கும் உங்கள் வாதம் மார்க்சியத்தின் மீதான சேறடிப்பே. மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனையை நிராகரிக்கின்ற எந்த தத்துவமும் மார்க்சியமல்ல. இவர்களின் சிந்தனைக்கு அப்பால் எழுந்த எந்த தத்துவம் மார்க்சியம் ?. இவர்களின் தத்துவம் வரட்டுத் தன்மை கொண்டது எனின் இவர்களுக்கு எதிரான எந்த தத்துவம் மார்க்சியம் ?. மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனை குறுகிய இருண்ட சிந்தனை எனின் எந்தச் சிந்தனை விரிந்த சிந்தனை? வைக்க முடியுமா ? கட்சி என்பது எப்போதும் இறுகியதே. ஏன் எனின் அதுவே மக்களின் தலைமைச் சக்தி. அதுவே போராட்டத்தை வழி நடத்தவது ?. அது சரியாக இருந்தால் மட்டுமே புரட்சி

தமிழரங்கம் சுவடிகள்

www.tamilarangam.net



## எழுச்சி கொள்ளும் காஷ்மீர்

இந்தியாவின் ஒரு மாநிலமாக காஷ்மீரை கட்டாயப்படுத்தி இணைத்த இந்திய அரசு இன்று இராணுவ அடக்கு முறையை தீவிரப்படுத்தி உள்ளனர். 1947 இல் பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் செல்வாக்குப் பெற்ற பதான்ஸ் என்ற இனக்குழு காஷ்மீர் மீது படை எடுத்தனர். அத்துடன் நாட்டில் உள்நாட்டுக் கிளர்ச்சியிலும் மக்கள் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து செக் அப்துல்லாவும் மகாராஜா ஒரிசிங்கும் நேருவுடன் ஒப்பந்தம் செய்து நிபந்தனையுடன் இந்தியாவுடன் இணைத்தனர்.

இவ் இணைப்பு ஒப்பந்தமானது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் உறுதி செய்யப்படும் என உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. அதே ஒப்பந்தத்தில் இந்திய அரசியல் அமைப்பை ஏற்க காஷ்மீரியர்களை நிர்ப்பந்திக்க முடியாது எனவும் உள்ளது. அத்துடன் அன்னியரின் தலையீடு நீங்கியவுடன் இந்தியா வெளியேற வேண்டும் எனவும் ஒப்பந்தம் வரையறுக்கிறது.

இவ் ஒப்பந்தத்திற்கு வழைமை போல் துரோகமிழைத்த இந்திய அரசு இந்நிபந்தனை எதையும் நிறைவு செய்யாது இன்றுவரை காஷ்மீரை ஆக்கிரமித்து வந்துள்ளனர். 1947 இற்கு முன்பு பாதன்ஸ் இனக்குழு கைப்பற்றிய காஷ்மிரின் ஒருபகுதி பாக்கிஸ்தானுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் துரோக ஆக்கிரமிப்பிற்கு எதிராக 1945முதல் காஷ்மிரியர்கள் வீறு கொண்டு எழுந்து போராடுகின்றனர்.

நாள் தவறாது வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்துவதுடன் இராணுவத்தின் அடக்கு முறைக்கும் பலியாகின்றனர். பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு நிகராக இன்று வீதிகளில் மக்கள் நின்று போராடுகின்றனர். இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் நாளாந்தம் பொய்களையும் கபடப் பிரச்சாரங்களையும் முடக்கி விட்டுள்ளனர்.

இந்திய இராணுவ கொலைப்படை காஷ்மீரில் போராளிகளை வேட்டையாடுவது என்ற பெயரில் காஷ்மீர் தேசிய இனத்தின் மீது இன அழிப்பை மேற்கொள்கிறது. அரசும், ஓட்டுப் பொறுக்கி அரசியல் வாதிகளும், பத்திரிகைகளும், போலிச் சினிமாக் காரர்களும், தொலைத் தொடர்பு சாதனங்கள் (TV) போன்றவையும் காஷ்மீரியர்களை பயங்கரவாதிகள் என்றும், இந்திய தேசிய ஒருமைப்பாட்டை குலைப்பவர்கள் என்றும், கொலைகாரர்கள் என்றும் குறிப்பிட்டு காஷ்மீரியர்களின் சுதந்திரப்போராட்டத்தை சிறுமைப்படுத்த முனைகின்றன.

இன்று காஷ்மீர் போராட்டத்தில் 43 குழுக்கள் உள்ளன. இவற்றுள் பாக்கிஸ்தான் சார்புக் குழு, சுயநிர்ணய உரிமை கோரும் தேசிய விடுதலை முன்னணி, தீவிர மதவாதக் குழு உட்பட ஒவ்வொரு அணியும் தத்தம் நோக்கில் போராடுகின்றன. காஷ்மிரின் பல கிராமங்கள் விடுதலைப் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

15.10.93 இல் இஸ்லாமியர்களினதும், காஷ்மீரியர்களினதும் புனிதத்தலமாக விளங்கும் விரஸ்ரத்பால் மசூதியை இந்தி இராணுவம் சுற்றி வழைத்து அங்குள்ள விடுதலைப் போராளிகளை சரணடையும் படி புதிய "ஸ்டென்ட்" அடித்தது இந்திய இராணுவம்.

இந்த மசூதிக்குள் முகம்மது நபியின் தலைமுடி ஒன்று பாதுகாக்கப் படுவதாக உலக முஸ்லீம் சமூகத்தால் நம்பப்படுகின்றது.

இந்த முற்றுகையினால் ஏற்படும் அழிவால் மசூதியின் புனிதம் கெட்டுவிடும் என்ற முஸ்லிம் நாடுகளின் கண்டனத்தினால் டெல்லி அரசு வெகுண்டு போனது. ஒரு மாதமாக சர்ச்சை உள்ள விடையமாக இது இருந்தது. மசூதி முற்றுகைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் 100க்கு மேற்பட்டோர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

பின் வழமை போல் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பேரப் பேச்சினால் முற்றுகை நடவடிக்கை முற்றுப் பெற்றது. ஆனால் விடயம் இத்துடன் நின்றுவிடாமல் இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைக்கு வரை சென்று விட்டது. இன்று உள்ள உலக பொருளாதார நெருக்கடியில் உலகை மறு பங்கிட அவசரமாக ஏகாதிபத்தியங்கள் முயலுகின்றனர். இந்திய, பாக்கிஸ்தான் என்ற பெரிய சந்தையை யார்? யார்? கட்டுப் படுத்துவது என்ற நோக்குடன் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் காஸ்மீரியர் பற்றி கண்ணீர் வடிக்க முயலுகின்றனர். இது போன்று இன்றும் சோமாலியா, யூக்கொஸ்லாவியா, ஆக்கிரமிப்பாளரின் நோக்கை நாம் காண முடியும்.

இன்று காஷ்மீரியர் இந்தி இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தத்தில் பாக்கிஸ்தான், அமெரிக்கா, இஸ்லாமிய ஆக்கிரமிப்பை இனங்கண்டு தேசத்தின் விடுதலைக்காக மக்களின் சுதந்திரத்துக்கு சரியான அரசியல் வழி முறையை முன்னெடுப்பதன் ஊடாக காஸ்மீரியர்களின் எதிர் காலத்தை ஒளிவீசச் செய்யலாம்.

## அவர் ஓர் ஆண்மகன்

ஒரு பெண்ணை மானபங்கப் படுத்துவதோ அல்லது கற்பழிப்பதோ அல்லது இம்சிப்பதோ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிப்பதாகாது, பெண் உரிமைகளைப் பறிப்பதுமாகாது. அதனுடன் இப்படிச் செய்தவர்களை தண்டிக்க மட்டுமே சட்டத்தில் இடம் உள்ளது. இவ்வாறு நீதி மன்றத்தில் திருவாய் மலர்ந்துள்ளார் ஒரிசா மானிலத்து பஞ்சாயத்து துறை அமைச்சர் தாமோதார் ரௌத். இவர்

சபை தலைவியை மானபங்கப் படுத்தி உள்ளதாக குற்றம் சாட்டப் பட்டுள்ளவர். மாநில முதல்வர் பிஜூபட்நாயக்கோ குற்றச்சாட்டு வெளிவந்த பொழுது 'அவர் ஓர் ஆண் மகன் எனக்கூறி 'பச்சையாக தனது வக்கிர ஆணாதிக்க புத்தியை வெளிக் க்காட்டிக் கொண்டார்.

## அரபாத்தின் காட்டிக் கொடுப்பு ஒரு துரோகத்தனமே

நாம் சமர் 7 இல் ஆசிரியர் தலையங்கத்திலும் அரபாத்தின் துரோகத்தனத்தை சுட்டிக்காட்டி இருந்தோம். இரண்டு தலைமுறையாக பலஸ்தீன மக்கள் பல தியாகங்களுக்கு மத்தியில் தமது மண்ணுக்காக நடத்திய போராட்டத்தை அரபாத் போன்ற சுயநல வாதிகள் காட்டிக் கொடுத்துள்ளனர்.

இன்று பாலஸ்தீனம் என்ற நாட்டை இல்லாமல் செய்துள்ள இஸ்ரேல் ஆக்கிரமிப்பாளர்களின் எலும்புக்காக, கால்களை நக்கப் புறப்பட்டுள்ள அரபாத்தும் அவர் சார்ந்த விடுதலை இயக்கமும், எதிர்காலத்தில் பொலிஸ்காரராக செயற்பட உத்தரவாதம் கொடுத்துள்ளனர்.

எம்மண்ணில் இது போன்றே EPRLF, PLOT, ENDLF, EROS, EPDP, TELO, கூட்டணி என்பன இந்தியாவினதும், இலங்கையினதும் குண்டி கழுவி பிழைக்கப் புறப்பட்டனர். எம் மக்களின் தியாகங்களை கொச்சைப்படுத்தி எமது போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் ஐந்தாம் படையாக சீரழிந்து போயுள்ளனர். EPRLF இந்திய அரசின் பொலிஸ் நாயாக மாறி எம் மக்களின் போராட்டத்தை நசுக்க தம்மால் இயன்றளவு கூலிக்கு மாரடிக்கின்றனர். இன்று EPDP, PLOT, TELO, ....... என அனைவரும் இலங்கை அரசின் பொலிசாக செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

இன்று இவர்கள் மீது மக்கள் காறி உமிழ்கின்றனர். இது போன்றே அரபாத்துக்கும் அவர் சார்ந்த விடுதலை இயக்கத்திற்கும் பாலஸ்தீன மக்கள் காறி உமிழத் தொடங்கி உள்ளனர். அந்த வகையில் இன்று பாலஸ்தீன, இஸ்ரேல் ஒப்பந்தம் எழுதப்பட்ட மை காய முன்பே மக்கள் போராடப் புறப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி எங்கும் நாள் தவறாது ஆயிரக் கணக்கில் மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகின்றனர்.

இபபோராட்டமானது பாலஸ்தீன–இஸ்ரேல் ஒப்பந்தத்திற்கு எதிரானதே. இவ் ஒப்பந்தம் பாலஸ்தீன மக்களை இஸ்ரேலின் கால்களுக்கு சேவை செய்யக் கோருவதே.

இன்று வீதியில் இறங்கியுள்ள மக்களை கண்மூடித் தனமாக சுட்டுக் கொலை செய்து வரும் இஸ்ரேலிய இராணுவத்தின் கொலைத் தொழிலை, அரபாத்தின் தலைமையில் உருவான 20 ஆயிரம் பொலிசைக் கொண்டு செய்ய இஸ்ரேல்–பாலஸ்தீன ஒப்பந்தம் வழிவகுத்துள்ளது.

அரபாத்துக்கும், அரபாத்தின் கைக் கூலிகளுக்கும் பாலஸ்தீன மக்கள் பதிலடி கொடுப்பது அதிக நாட்களாகாது. இதை எமது ஈழப்போராட்டம் எமக்கு தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

இது போல ஆயிரம் ஒப்பந்தங்களை பிற்போக்குத் தலைமைகள் தமது சுரண்டும் வர்க்கக் கனவுகளுடன் செய்து கொள்ள முடியும். ஆனால் அவை எப்போதும் மக்களுக்கு முடிவைப் பெற்றுத் தந்துவிடப் போவதில்லை.

இவ் ஒப்பந்தத்தை ஒரு சில ஐரோப்பிய சஞ்சிகைகள் ஆதரித்தும், ஆதரிக்காத மாதிரியும். எதிர்த்த மாதிரி இரட்டைத் தன்மையில் கட்டுரைகள் எழுதி உள்ளனர். இது ஈழப்போராட்டத்தில் இந்தியாவின் மாகாண சபையை ஆதரித்த அதாவது EP வாயிலாக சீரழிந்ததையே காட்டும்.

இவ் முற்போக்கு மார்க்சிய வேடதாரிகள் தமக்கு என அரசியல் இன்றி எழுதுகின்றனர். இது போன்றவைகளை சுட்டிக் காட்டப் புறப்பட்டால் அது சஞ்சிகையின் கருத்து அல்ல தனிப்பட்டவர்களின் கருத்து என கூறி விடுகின்றனர். அப்படியாயின் இவ் முற்போக்குச் சஞ்சிகைகள் தனிப்பட்ட நபர்களின் EP (துரோகிகள்) இந்திய ஆதரவு மகாண சபையை ஆதரித்த கட்டுரையையும் போடுவதன் ஊடாக துரோகிகள் பக்கம் சேர்ந்து விடுகின்றனர்.

இரட்டை வேடதாரிகள், மார்க்சிய விரோத வேடதாரிகளும் அரபாத்தின் வாரிசுகளே. பாலஸ்தீனம் சரி, தமிழீழப் போராட்டம் சரி ஒரு முழுமையான விடுதலை கிடைக்காத வரை இது போன்ற ஒப்பந்தங்கள் குப்பைத் தொட்டிக்குள் இடப்பட்டவையே. பாலஸ்தீன இஸ்ரேல் ஒப்பந்தம் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை அங்கீகரிக்கும் வகையில் அமெரிக்கா என்ற பொலிசால் பாலஸ்தீன மக்கள் மீது திணிக்கப்பட்டதே. இதை வரலாற்றில் பாலஸ்தீன மக்கள் நிறையவே கண்டுள்ளனர். இது போன்ற பித்தலாட்ட ஒப்பந்தங்களுக்கும், அதை ஏற்றுக் கொள்ளும் துரோகிகளுக்கும் மக்கள் பதில் கொடுப்பார்கள்.

## மைக்கல் ஜாக்ஸன் தன்னினச் சேர்க்கையாளன்

உலகப் புகழ் பெற்ற மைக்கல் ஜாக்ஸன் ஒரு தன்னினச் சேர்க்கையாளன். மக்களின் போராட்ட உணர்வுகளை திசை திருப்பும் வகையில் சீரழிந்த இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தும் இவன் பல சிறுவர்களின் வாழ்க்கையையும் நாசப்படுத்தி உள்ளான்.

அமெரிக்காவில் தன்னினச் சேர்க்கையையும், கருக்கொலையையும் சட்டபூர்வமாக அங்கீகரித்த கிளின்ரனுடன் கைகுலுக்கிக் கொள்ளும் மைக்கல் ஜாக்ஸன் ஒரு பணக்காரக் குற்றவாளியே.

இவன் 10, 11 வயது சிறுவர்களுடன் தான் நித்திரை கொள்வானாம். பல சிறுவர்களை தனது தன்னினச் சேர்க்கைக்கு பயன்படுத்தி அவர்களின் வாழ்க்கையை சீரழித்துள்ளான்.

தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு சிறுவன் வழக்கு போட்டதைத் தொடர்ந்து மைக்கல் ஜாக்ஸனுடன் நெருங்கிய பலர் இவன் தன்னினச் சேர்க்கையாளன் என பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளனர்.

இவன் போன்றவர்கள் பணப்பலம் ... பணக்கார சமுதாயத்துக்கு சார்பான இச் சட்டங்களிலிருந்து தப்பித்து சென்று விடுவதுடன் மட்டுமன்றி பலவற்றை மூடி மறைத்தும் விடுகின்றனர். ஆனால் இவன் போன்ற துரோகிகளுக்கு மக்கள் போராடுவதன் மூலமே தண்டனை கொடுக்க முடியும்.

### நாயன்மாரின் காமவெறி

*"பெண்ணகத்து எழில்சாக்கியப்*
*பேய் அமண் தென்னற்*
*கற்பழிக்கத் திருவுள்ளமே"*
–சம்மந்தர் தேவாரம்–

என்ற பாலறாவாயரான சம்மந்தப் பெருமான் (நாயன்மார்களிலேயே வயது குறைந்தவர்) அருள் ஒழுக ஒழுகப் பாடுகிறார். இதன் அர்த்தம் தெரியுமா?

சமயப் போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் சைவத்திற்கு எதிரான சாக்கிய, சமணப் பெண்களைக் "கற்பழிக்க" எல்லாம் வல்ல பெருமானிடம் திருவுள்ளம் தேடுகிறார் சம்மந்தர். நாயன்மாரே இப்படி என்றால் ?

– மண்ணும் மனித உறவுகளும்–
(கோ. கேசவன் எழுதியது)
நன்றி தூண்டில்

7 ம் பக்கத் தொடர்ச்சி

பிற்போக்கு

புதிய ஜனநாயகப் புரட்சி என்பது பாட்டாளி வர்க்கத்திற்கு எதிரானது அல்ல. மாறாக முதலாளித்துவ நாடுகளில் இருந்து மாறுபட்ட பின்தங்கிய வளர்ச்சியை கொண்ட நிலப்பிரபுத்துவ நாடுகள் முதலாளித்துவ நாடுகளின் புரட்சி வடிவை புதிய ஜனநாயகம் என்ற வடிவிற்கு ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

சீனப் புரட்சி மூன்றும் அகிலத்தின் வழிகாட்டலுக்கு முரணாக நடைபெற்றது என காட்ட முனையும் இக் கட்டுரையாளர் மார்க்சியத்தை புதை குழிக்கு அனுப்ப மார்க்சியத்தின் பெயரால் முனைகின்றார். சீனப் புரட்சி மூன்றும் அகில வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது. இதை மாவோவும் சீனக் கம்யூனிஸ் கட்சியும் கூறி உள்ளனர். அவர்களே கூறும் போது நீங்கள் இல்லை என்கின்றீர்களே. போராடியவர்கள் அவர்கள். ஆனால் எல்லாக் கட்சிக்குள்ளும், எல்லா நாட்டுக்குள்ளும் முரண்பாடு இருப்பது இயல்பானது. அது எல்லோருக்கும் உள்ளது போலவே சீனாவுக்கு இருந்தது. இது நட்பு முரண்பாடே. இதை சீனாவும், மாவோவும் கூறி உள்ளனர். மூன்றும் அகிலத்திற்கு எதிராக நடந்ததாக மாவோவின் பெயராலும், கட்சியின் பெயராலும் ஒரு பொய்யைக் கூறும் உங்கள் மார்க்சிய சேறடிப்பு உங்கள் முதலாளித்துவத்தை காப்பாற்றவே.

சோவியத் 1919 களிலும், 1941 இலும் தேசிய உணர்வுகள் உந்தப்பட்டன. உண்மையே. அது நாட்டை பாதுகாக்க கோருவதே. இது எந்த

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்